Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு

விலை சதம் 15

# ஈழநாடு

EELA NADU

போன்: 389

National Tamil Daily — தேசிய தினசரி

தபாற் பெட்டி எண 49.

மலர் 5 | யாழ்ப்பாணம், சுபகிருது | பங்குனி 4ஆம் நாள் | ஷவ்வால் பிறை 20 | (17-3-63) | ஞாயிற்றுக்கிழமை | இதழ் [illegible]7

ஓர் நற்செய்தி!

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த இருப்பு எடுக்கும்

மலிவு விற்பனை!

ரொலறம்ஸ்

46, பெரிய தெரு, : யாழ்ப்பாணம்

தமிழ் உரிமைப் போராட்டம்

# சாத்வீக மறியலில்லை சட்ட மறுப்பே?

## "தமிழர் நிலைபற்றி பீலிக்ஸ் கூறியிருப்பது முற்றுந்தவறு"

—திரு. சிவசிதம்பரம்

### உலகவிவகாரங்களின் இந்தியசபைக்கு கடிதம்

—பொ. பாலசுந்தரம்—

கொழும்பு, சனி

"இலங்கைத் தமிழர்களின் நிலை குறித்து; இலாகா இல்லாத மந்திரியும், இங்கைப் பிரதமரின் காரியதரிசியுமான திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயக்கா உலக விவகாரங்களுக்கான இந்தியக் கவுன்ஸிலில் பேசியிருப்பது உண்மைக்குப் புறம்பானது; பிழையானது; தவறுனது." என்று உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதப்பரம் தெரிவித்துள்ளார்.

#### "முற்றும் தவறு"

"இலங்கையில் தமிழர்கள் நியாயமாக நடத்தப்படுகிறார்கள். மொழி உரிமை சம்பந்தப்பட்டமட்டில், சிறுபான்மையினரான இவர்களுக்குக் கஷ்டம் எதுவும் கிடையாது.' என்று உலகவிவகாரங்களுக்கான இந்தியக் கவுன்ஸிலில் இலாகா இல்லாத மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயக்கா பேசுகையில் கூறியிருந்தது "முற்றுந் தவறு." திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயக்கா கூறிய ஒவ்வொன்றையும் ஆதாரபூர்வமாக விளக்க; 'சிறுபான்மையினரான தமிழர்கள் பல இன்னல்களுக்கிடையில்தான் இன்னும் வாழ்கிறார்கள் என்பதை நிரூபிக்க நான் தயாராகவிருக்கின்றேன்." என்று உடுப்பிட்டித் தொகுதி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், அதே உலகவிவகாரச் சபையின் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிபிபட்டுள்ளார்.

#### 'சந்தர்ப்பம் வேண்டும்'

திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா எந்தச் சபையில், எப்படிப்பட்ட மக்களுக்கு முன்னால் தமது பேச்சை நிகழ்த்தினரோ அதே சபையில், அவர் கூறிய ஒவ்வொன்றுக்கும் மறுப்புக்கூறி விளக்கத் தயாராகவிருக்கிறேன் என்று கூறும் திரு. சிவசிதம்பரம், உலக விவகாரங்களுக்கான இந்தியச் சபை, உண்மை நிலையை அறியத் தமக்குச் சந்தர்ப்பம் அளிக்கவேண்டும் என்றும் தமது கடிதத்தில் கூறியிருக்கிறார்.

உண்மை திரித்துக் கூறப்பட்டிருக்கையில் அதை நிலைபெற்றுவிட அனுமதிக்கக்கூடாது. ஆகையினால், உண்மை நிலையை எடுத்துக்கூறுவதற்குத் தமக்கு விரைவில் சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென்றும் திரு. சிவசிதம்பரம் உலக விவகாரச் சபையின் தலைவரைக் கேட்டிருக்கிறார்.

#### சமாதானத் தூதின் போது

சீன - இந்திய எல்லைத் தகராறு காரணமாகக் கொழும்பில் கூடிய ஆறு நாடுகள் தெரிவித்திருந்த யோசனைகளுடன் இலங்கைப் பிரதமர் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா பீக்கிங், புதுடில்லிக்குச் சமாதானத் தூது சென்றபொழுது, இலாகா இல்லாத மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் பிரதமருடன் சென்றிருந்தார். புதுடில்லியில், உலக விவகாரங்களுக்கான இந்தியக் கவுன்ஸிலில் இலங்கைச் சிறுபான்மையினரின் நிலைமை பற்றித் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பேசியிருந்தார்.

## ஐ. அ. குடியரசுக்கு விஜயம்

புதுடில்லி, மார்ச். 16

இந்திய உபஜனாதிபதி ஸாகீர் ஹுசைன், ஐக்கிய அரபு குடியரசில் ஐந்துநாட்கள் சுற்றுப் பிரயாணம் செய்யும் பொருட்டு அடுத்தமாதம் 15-ம் திகதி கெய்ரோ பயணமாவார்.

## இன்று

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் நடாத்தும் திருவாசகப் போட்டியின் இறுதித் தேர்வு இன்றுகாலை நாவலர் சைவபிரகாச வித்தியாசாலையில் நடைபெறவிருக்கிறது.

## வண்ணை சிவன் கோவில் உற்சவம்

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமிகோவிலில் இன்று மாரியம்மன் உற்சவம். நாளை திங்கள் கலகட்டு வைரவர் பூசை. மகோற்சவ கர்மாரம்பம் புதன்கிழமை கொடிஏற்றம் ஏப்ரல் 6-ந் திகதி ரதோற்சவம். 8-ந் திகதி திருக்கல்யாணம். புஸ்பப்பல்லக்கு.

## ஏப்ரல் 17ல் அடுத்த தமிழ் போராட்டம்

கிளிநொச்சி சனி

தமிழரசுக் கட்சியின் நேரடி நடவடிக்கை ஏப்ரல் 17-ந் திகதி கட்டாயமாக நடாத்தப்படுமெனவும், ஆனால் முன்னைய போராட்டத்தைப் போல் சாத்வீக முறையில் இல்லாமல் சட்டமறுப்பு இயக்கமாக நடாத்தப்படவேண்டும் எனவும் அனேகமாக தீர்மானிக்கப்படலாம் எனத் தெரியவருகிறது. சட்ட மறுப்பு இயக்கம் எவ்விதமாக அமையும் என்பது பற்றி அடுத்த மாதம் 6-ம், 7-ம் திகதிகளில் வவுனியாவில் கூடவிருக்கும் பொதுக்காரியக் கமிட்டியே தீர்மானிக்கும் எனவும் சொல்லப்படுகிறது.

இச்சட்டமறுப்பு இயக்கம் பெரும்பாலும் அத்துமீறி உப்பு அள்ளுவதும், அரசாங்கத்திற்கு வரி கொடாமலிருக்கும் இயக்கமாகவும் இருக்குமென நம்பப்படுகிறது.

சென்ற முறை நடைபெற்ற போராட்டம் போல் அல்லாமல் வெகு சிலருடனேயே அடுத்த நேரடி நடவடிக்கை நடத்தப்படும் என்றும் சொல்லப்படுகிறது.

இப்போராட்டத்தினல் மக்களுக்கு ஏற்படக்கூடிய விளைவுகளுக்கு மாற்றாக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது பற்றியும் கூட்டத்தில் நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது. தமிழ் பேசும் மக்கள் சிங்களம் படிப்பதை சாத்வீகமுறையில் தடைசெய்தால் ஒழிய தனிச் சிங்கள எதிர்ப்புப் போராட்டம் தடைப்பட ஏதுவாகும் என்ற யோசனைகளும் பரிசீலனை செய்யப்பட்டன.

இக்கூட்டம் கட்சியின் உப தலைவர் செனட்டர் ஜி. நல்லையா தலைமையில் நடைபெற்றதாகத் தெரிகிறது. இம்முக்கிய நிர்வாகசபைக் கூட்டத்திற்கு கீழ்மாகாண எம். பி.க்கள் சமூகமளிக்கவில்லை எனத் தெரியவருகிறது.

நாளையும் செயற்குழு கூட்டம் தொடர்ந்துநடைபெற விருப்பதால் செயற்குழு அங்கத்தவர்கள் அனைவரும் கிளிநொச்சியிலேயே தங்கியிருக்க ஏற்பாடாகியுள்ளது.

## ஜனாதிபதி அயூப்கான் யாழ்ப்பாணத்துக்கு அழைக்க முடிவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

பாகிஸ்தான் ஜனாதிபதி திரு. அயூப்கான் இலங்கைக்கு விஜயஞ் செய்யும்போது அவரை யாழ்ப்பாணத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டுமென்று பிரதம மந்திரியைக் கேட்டுக் கொள்ளுவதெனவும், அயூப்கான் யாழ்ப்பாணம் வரும்போது அவருக்கு மாநகரசபை மகத்தான வரவேற்பளிக்க வேண்டுமென்னும் தீர்மானமும் யாழ்ப்பாணம்மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாநகரசபையின் பொதுக் கூட்டம் மேயர் டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

புளுக்களை அழிப்பதற்கு

BAYER



பொலிடோல்

FOLIDOL

*Agents*

ROYAL DISPENSARY

T'GRAMS ROYAEL

PHONE 397 JAFFNA

## வரி விளம்பரம்

**தேவை**

18 வயதுக்குட்பட்ட ஆண், பெண் தொழிலாளர்கள் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். கலாசோதி இன்டஸ்றீஸ், றப்பர் சீல் செய்பவர்கள் பழைய பஸ் ஸ்ரான்ட், 160, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

773

## தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கஈற லோக் இனும். தொய்வுக்கு 10நாள் மருந்து 12/50. நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி. யாழ்ப்பாணம்


# மேற்கு ஜெர்மனியில் இசை ஆராய்ச்சி

மேற்கு ஜெர்மனியில் உலக நாடுகளின் சங்கீதம் பற்றிய தகவல்களும், ரிக்கார்டுகளும் சேகரித்து வைக்கப்பட்டுவருகின்றன. புதுடில்லி சங்கீத நாடக அகாடமியிலிருந்து பிரெமன் நகரிலுள்ள 'மியூஸிகல் ஆர்க்கைவ்' என்ற சங்கீத லைப்ரரிக்கு சமீபத்தில் சில 'ரிக்கார்டுகள்' பாசல்கள்மூலம் வந்து சேர்ந்தன. பலவருடங்களுக்கு முன் ஏற்பட்ட இந்த லைப்ரரிக்கு இம்மாதிரியே பல நாடுகளிலிருந்து சங்கீத ரிக்கார்டுகள், நூல்கள் முதலியன வந்தவண்ணமிருக்கின்றன. ஐரோப்பிய, ஆசிய நாடுகளில் 23 நாடுகளின் சங்கீத சம்பந்தப்பட்ட தகவல்கள் பிரெமன் ஆர்க்கைவில் இடம்பெற்றுள்ளன. இந்த நாடுகளில் முக்கியமானவை, இந்தியா, இலங்கை, தாய்லாந்து, பாகிஸ்தான், ஜப்பான், இந்தோனேஷியா. ஓரியண்டல் சங்கீதத்திற்கான தனி ஜெர்மன் ஸ்தாபனம் இந்த 'ஆர்க்கை'வின் கிளை ஸ்தாபனமாக ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆசிய நாடுகள் தங்கள் சங்கீதத்தைக் குறித்து ஆராய்ச்சிகள் நடத்த ஏராளமான தகவல்களைத்தர தயாராக இருக்கின்றன. ஆசியநாடுகளிலிருந்து பிரபல சங்கீத வித்துவான்களை வரவழைத்து கச்சேரிகள் நடத்தவும் ஜெர்மன் ஸ்தாபனம் ஏற்பாடுசெய்துவருகிறது. இந்தியாவிலிருந்து பிரபல வீணை வித்துவான் திரு. ரங்க ராமானுஜ அய்யங்கார் இந்த அழைப்பை ஏற்று மேற்குஜெர்மனி செல்வாரெனத் தெரிகிறது. 1963-ம் ஆண்டு இறுதியில் ஆபிரிக்க நாடுகளிலிருந்தும் சில சங்கீத நிபுணர்கள் மேற்குஜெர்மனிக்கு விஜயம் செய்யவிருக்கின்றனர். இலங்கையைச் சேர்ந்த பிரபல வாத்திய நிபுணர்களும் போகவிருக்கின்றனர்.

ஜெர்மன் 'ஆர்க்கைவ்' ஸ்தாபனம், சங்கீதம் பற்றிய புத்தகங்கள் ரிக்கார்டுகள் மட்டுமின்றி சங்கீத நிபுணர்களின் வரலாறுகள், அவர்கள் படங்கள் மற்றும் ஆராய்ச்சிக்கு வேண்டிய அவசியமான தகவல்கள் ஆகிய சகல விவரங்களையும் சேகரித்துவருகிறது. அநேக வருடங்களுக்கு முன் சங்கீதம் எப்படி இருந்தது; வருங்காலத்தில் சங்கீதம் எப்படியிருக்கும், ஒவ்வொரு நாட்டின் சங்கீதத்திலுள்ள தனி விசேடம் என்ன என்பதுபற்றி எல்லாம் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டுவருகின்றன. ஆசிய நாடுகளின் மக்களின்வாழ்க்கை பற்றி அதிகம் அறிய இதன் மூலம் ஜெர்மானியர்களுக்குப் பேராவல் பிறந்துள்ளது.

இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை ஜெர்மன் 'ஆர்க்கைவ்' ஸ்தாபனம் விசேஷ கருத்தரங்கை நடத்துகிறது. இதில் ஆசிய - ஆபிரிக்க நாடுகளிலிருந்து பிரபல சங்கீத நிபுணர்கள் கலந்துகொள்ள ஏற்பாடு செய்யப்படும். இக்கருத்தரங்கில் ஒரு நாட்டின் கலையை மற்றொரு நாட்டினர் நன்கு அறிய வாய்ப்பு ஏற்படும். சங்கீதம் போன்ற கலை மொழிக் கட்டுப்பாடுகளை மீறி உலகத்தினரை ஒன்ருக இணைக்கக் கூடியது என்பது இதனுல் நிருபணமாகும்.

# உங்கள் இராசி பலன்

சோதிட ஆசான் செ. தெல்லியூர் எழுதுவது

சுபகிருது ஆண்டு பங்குனித் திங்கள் 4-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (17-3-63) முதல் பங்குனித் திங்கள் 10-ம் நாள் சனிக்கிழமை (23-3-63) வரை உள்ள பலன்கள்.

### மேட இராசி

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் சென்றவாரத்திலும் சற்று சிரமமானபலன்கள் பொதுவாக நடக்கஇடமுண்டு. உடலாரோக்கியக் குறைவு, வெளிப்பிரயாணக் கஷ்டம், நிம்மதி குறைந்த வாழ்க்கை, பணச்செலவு, வர்த்தகருக்கு அவர்கள் செய்தொழில் விருத்தியிருப்பினும் செலவும் அதிகரித்திருத்தல், உத்தியோகத்தருக்குத் தொழிலில் உற்சாகம், கடும் உழைப்பு, பெண்களுக்குக் குடும்பத்தில் அனுவசியச் சச்சரவு, கல்விச் சிரமம், வீண்தொல்லைகள் ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 20, 22 சுபதினங்களாகும்.

★

### இடப இராசி

(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடம் முன்னரை.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் சுபபலன்கள் சற்று விரிவாக நடக்க இடமுண்டு. தொழில்விருத்தி, பணவகையில் பழைய கடன்கள் வரவு, அலைச்சல் குறைந்து நிம்மதி ஏற்படல், வர்த்தகத்துறையில் இலாபகரம் காணல், வசதிகள் கூடுதலாக அமைதல், உத்தியோகத்தருக்குப் புதிய முயற்சிகள் வெற்றி, தேவைக்கதிகமாக வசதிகள் கிடைத்தல், மேலதிகாரிகள் உதவி, கல்வி விருத்தி, கமத்தொழில் பலிதம், பெண்களுக்கு குடும்ப சுகம், தெய்வ வழிபாடு, இனபந்துக்கள் உதவி ஆதியனவும் காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 20, 21, 22 சுபதினங்களாகும்.

★

### மிதுன இராசி

(மிருகசீரிடம் பின்னரை, திருவாதிரை, புனர்பூசம் முன்முக்கால்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் சென்றவாரத்திலும் பார்க்க நற்பலன் சற்றுக் கூடுதலாக நடப்பதுடன் கடன்வகையில் கஷ்டம் குறைதல், முயற்சிகளில் வெற்றி, குடும்ப ஒற்றுமையும் அமைதியும் நிலவுதல், வர்த்தகருக்குச் செய்தொழில் மேன்மை, புதிய ஒப்பந்தவகைகளால் இலாபம், உத்தியோகத்துறையில் தொழிலில் ஊக்கம், அதிகாரிகள் ஆதரவு, பதவி உயர்ச்சி காரணமாக இடப்பெயர்ச்சிக்கான ஆயத்தம் நடத்தல், கல்வித்துறை — கமத்தொழில் துறை மத்திமபலிதம், பெண்களுக்கு மத்திமசுகம், புதிய பொருள்கள் சேர்க்கை ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 20, 22 சுபதினங்களாகும்.

★

### கடக இராசி

(புனர்பூசம் நான்காம் பாதம், பூசம், ஆயிலியம்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தேகாரோக்கியம் குறைதல், அதிக அலைச்சல், விளங்கமங்கள் கூடுதல், நம்பிக்கை ஏமாற்றம், பணமுடை, பெண்களால் கஷ்டம், வர்த்தகருக்குத் தொழிலில் பணமுடை, இலாபம் அற்பமாகக் காணல், பிரயாணக் கஷ்டங்கள், கமத்தொழிலில் மத்திமபலிதம், கல்விச்சிறப்புக்குக் கடும் உழைப்பு, உத்தியோகத்தர்களுக்கு கடும் உழைப்பும் அதற்குப் பலனின்மையும், மேலதிகாரிகள் பகைமை, மனவெறுப்பு, இடமாற்றம், பெண்களுக்குக் குடும்பசுகம், கணவருக்கு நன்மை, கல்வி உத்தியோகச் சிறப்பு ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 21, 22 சுபதினங்களாகும்.

★

### சிங்க இராசி

(மகம், பூரம், உத்தரம் 1-ம், பாதம்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் கஷ்ட பலன்கள் சற்று கூடிய சிரமத்தை தருதற்கு இடமுண்டு. தெய்வ வழிபாடு அவசியம் தொழிற்கேடு அலைச்சல், பணமுடை, பந்துக்கள்-நண்பர் பகை, குடும்ப சச்சரவு, அதைரியம், வர்த்தகருக்கு செய்தொழிலில் மத்திம பலிதம், ஊழியரினுல் கஷ்டம், உத்தியோகத்தருக்கு மத்திம சுகம், கடும் உழைப்பு, சிலருக்கு இடமாற்றம், பெண்களுக்கு குடும்பத்தில் திருப்திகரமான நிலை நிலவுதல், பணவசதி, மாணவருக்கு கல்வி வசதியேற்படல், கமத்தொழிலில் நற்பலன் கிட்டல் ஆதியன காணப்படும். இவர்களுக்கு மார்ச் 21, 22, 23 சுபதினங்களாகும்.

★

### கன்னி இராசி

(உத்தரம் பின் முக்கால், அத்தம், சித்திரை முன்னரை.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் சென்றவாரத்திலும் பார்க்க சற்று சிரமங்கள் காணப்பட இடமுண்டு. குடும்ப முயற்சிகள் பின்னடைதல், மறைமுகமான எதிர்ப்புக்கள், செலவினங்கள் அதிகரித்தல், உடல்நலம் குறைதல், கொடுக்கல் வாங்கல் தகராறு, வீண் அலைச்சல், குடும்பநிம்மதிக் குறைவு, வர்த்தகருக்கு தொழிலில் இலாபம், வெளிஒப்பந்தங்களால் வருமானம், உத்தியோகத்தருக்கு மேலதிகாரிகள் உதவி, பதவிச் சிறப்பு, பணவரவு, மாணவர்-கமத்தொழிலாளருக்கு மத்திமபலிதம், பெண்களுக்கு குடும்பஒற்றுமை, தொழிற் கடுமை, ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 20, 21 சுபதினங்களாகும்.

★

### துலா இராசி

(சித்திரை பின்னரை, சுவாதி, விசாகம் முன்முக்கால்)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் சென்றவாரத்திலும் பார்க்க நற்பலன்கள் சற்றுகூடுதலாகநடக்கஇடமுண்டு. சகோதரத்துவம், இனபந்துக்கள் கொண்டாட்டம், வண்டிவாகன பலன், உடல்நலம், குடும்ப ஒற்றுமை, பணவசதி, வர்த்தகத்துறை செய்தொழில் இலாபம், ஊழியர் உதவி, உத்தியோகத்தினருக்கு உத்தியோக கௌரவம், ஊதியப் பெருக்கம், நிம்மதி, பெண்களுக்கு களத்திர புத்திரசுகம், கல்வி-உத்தியோ [illegible]சிறப்பு, மாணவருக்கு கல்வி நலம், கமத்தொழில் மத்திம பலிதம் ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 20, 22 சுபதினங்களாகும்.

★

### விருச்சிக இராசி

(விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தொழிற்கஷ்டம், குடும்பத்திலே நிம்மதியீனம், பணமுடை, உஷ்ணத்தால் உடல்நலக்குறைவு, கொடுக்கல் வாங்கலில் புதியசிக்கல்தோன்றல், வர்த்தகத்துறையிலீடுபட்டோருக்கு தொழிலில் முன்னேற்றம், வெளியூர் வர்த்தகத்தில் அனுகூலம், ஊழியர் உதவி, உத்தியோகத்தருக்கு கௌரவம் கிட்டுதல், மேலதிகாரிகள் உதவி, சிலருக்கு இடமாற்ற முயற்சி, மாணவருக்குக் கல்விவிருத்தி, பெரியோர் உதவி, கமத்தொழிலாளருக்கு நற்பலன், பெண்களுக்குக் குடும்பசந்தோஷம், களத்திர சுகம், பணவரவு, உத்தியோக மேன்மை ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 20, 21, 23சுபதினங்களாகும்.

★

### தனு இராசி

(மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம்)

இவ்விராசியாளருக்கு சென்ற வாரத்திலும் பார்க்க இவ்வாரம் சிரமம் சற்றுகூடுதலாக இருக்கும். உடன்பிறந்தோரிடையே ஒற்றுமைக் குறைவு, ஆரோக்கிய நலிவு, வண்டிவாகனஅலைச்சல்; வெளியூர்ப் பிரயாண கஷ்டம், செலவு அதிகரிப்பு, வர்த்தகத்துறையினருக்கு செய்தொழிலில் அலைச்சல் இருப்பினும் மத்திம ஆதாயம், ஊழியரால் உதவி, உத்தியோகத்தினருக்கு இடப்பிரிவு, கஷ்டம், கடும்உழைப்பும் பலன் அதற்கு இன்மையும், மேலதிகாரிகள் வெறுப்பு, மாணவருக்கு கல்வித்தடை, கமத்தொழில் மத்திமபலிதம், பெண்களுக்கு அலைச்சல், களத்திர புத்திரசுகக்குறைவு, வீண் அபவாதம் கேட்டல், ஒற்றுமைக் குறைவு ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 20, 22 சுபதினங்களாகும்.

★

### மகர இராசி

(உத்தராடம் பின்முக்கால் திருவோணம், அவிட்டம் முன்னரை.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் சற்று நற்பலன்கள் கூடுதலாக நடக்க இடமுண்டு. வண்டிவாகன இலாபம், சகோதர பந்துக்கள் ஒற்றுமை, பிரயாணத்தால் நன்மை, முயற்சியில் பணமுடை தவிர்த்தல், வர்த்தகத்துறையில் செய்தொழில் கஷ்டம், ஊழியர் வெறுப்பு, பணவரவில் தாமதம், உத்தியோகத்தருக்கு இடப்பெயர்ச்சிக்கான முயற்சி நடத்தல், கடும்உழைப்பு,பலன் இன்மையால் மனவெறுப்புத் தோன்றல், மாணவருக்கு கல்வி மத்திமபலிதம், கமத்தொழில் பலிதமின்மை, பெண்களுக்கு ஒற்றுமைக்குறைவு, குடும்பத்தில் சச்சரவு, கொடுக்கல்வாங்கல் கஷ்டம், தெய்வ வழிபாடு ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 20, 21 சுபதினங்களாகும்.

★

### கும்ப இராசி

(அவிட்டம்பின்னரை,சதயம், பூரட்டாதி முன்முக்கால்)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் மத்திமமான தொழிற்சிறப்பு, பணநிலைமையில் ஓரளவு நிம்மதி, வண்டிவாகன இலாபம், உடல்நலம் மத்திமசுகம்தரல், ஒற்றுமை நிலவுதல், புதியபொருள்சேர்க்கையில்முயற்சித்தல், தெய்வநம்பிக்கை, வர்த்தகருக்குதொழில் முன்னேற்றம், ஒப்பந்தநன்மை, நாணயமதிப்பு, உத்தியோகத்தினருக்கு பணஉதவி, அதிகாரிகள் ஊக்கமளித்தல், மேல் பதவிக்காக இடமாற்றஏற்பாடு சிலருக்கு நடத்தல், மாணவருக்கு வாக்குச்சிறப்பு, கல்வி விருத்தி, கமத்தொழில் சமபலிதம், பெண்களுக்கு உற்சாகம், களத்திரசுகம், குடும்ப ஒற்றுமை ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 20, 22, 23 சுபதினங்களாகும்.

★

### மீன இராசி

(பூரட்டாதி நாலாம் பாதம், உத்தரட்டாதி,ரேவதி.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் குடும்பத்தில் ஒற்றுமை குறைதல், சகோதரபந்துக்கள் பகைமை, வண்டிவாகன நலம், முடங்கிய பொருள் கைக்குவருதல், செலவினம் அதிகரிப்பினும் கலங்காமனநிலை, தொழிலில் மந்தநிலை, வர்த்தகருக்குஉழைப்பிற்கேற்ற பலன் கிடைத்தல், ஊழியரால்கஷ்டம், உத்தியோகத்தருக்கு அதிகாரிகளது மறைமுக எதிர்ப்பு, கடும் உழைப்பு, பணவசதிக்குறைவு, மாணவருக்கு மத்திம சுகம். கமத்தொழில் பலிதமின்மை, மாதருக்கு குடும்ப ஒற்றுமை, மன உற்சாகம், பொருள் சேர்க்கை ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 20, 21 ,22 சுபதினங்களாகும்.

# உலக மத ஸ்தாபனம்

ஆசியாவிலும் ஏனைய நாடுகளிலும் உலக சமய ஆராய்ச்சி நிலையம் அதிக ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளதாக சமீபத்தில் இலங்கை வந்த பேராசிரியர் ரேபேட் எச். எல். ஸிலேட்டர் கூறியுள்ளார்.

இவர் ஹாவார்ட்டிலுள்ள வேதசாஸ்திரக் கல்லூரி உலக சமய ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் ஆவர். உலக சமய தத்துவக் கல்வியில் பட்டம் பெற்ற பேராசிரியர்.

ஆசியாவிலிருந்து அமெரிக்காவிலுள்ள உலக சமய ஆராய்ச்சி நிலையத்துக்கு விஜயம் செய்யும் இந்து, பௌத்த, இஸ்லாமிய மாணவர்கள் பிரஸ்தாப நிலையத்தில் தங்கி தங்கள் சொந்த சமய அனுஷ்டானங்களையும் கோட்பாடுகளையும் பின்பற்றலாம் என இவர் தெரிவித்துள்ளார். மேலும், இம் மாணவர்கள் அங்கு தங்குவதால் கிறிஸ்தவ சமயம் மற்றும் மேற்கத்திய மதஸ்தாபனங்களுடன் தொடர்பு கொண்டு தமக்கு ஏற்படும் ஐயுறவுகளைத் தீர்த்துக்கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுகிறது என பேராசிரியர் ஸிலேட்டர் தெரிவித்துள்ளார்.

உலக சமய ஆராய்ச்சி நிலையத்தைப் பற்றி பேராசிரியர் ஸிலேட்டர் குறிப்பிடுகையில் "வருடா வருடம் கிறிஸ்தவ சமயம் தவிர்ந்த, இன்னோர் சமயத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவரை எமது நிலையத்தில் ஒரு தவணை காலம் தங்கியிருக்க வசதி செய்ய அறக்கட்டளை நிதி உதவியளிக்கிறது. அத்துடன் இந்த ஆராய்ச்சி நிலையத்தில் சமய வரலாற்றில் எம். ஏ., கலாநிதி பட்டங்கள் பெற விண்ணப்பிக்கும் பிற நாட்டு மாணவர்களுக்கு வசதி செய்யவும் இந்நிலையம் உபகாரச் சம்பளம் வழங்குகிறது' என்றார்.

"தற்பொழுது இந்நிலையத்தில் இந்தியா, ஜப்பான், தைவான் முதலான நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் இருக்கிறார்கள். அத்துடன் இலங்கையைச் சேர்ந்த பௌத்த பிக்கு ஒருவரும் எம்முடன் இருக்கிறார். இவரை ஆசிய பௌண்டேஷன் எமக்கு அறிமுகம் செய்துவைத்து, அவரின் செலவுகளையும் வழங்குகிறது" என்றார்.

# மின்னல்

## காரிருளில் ஒரு மின்னல்.
## அதன் கணப்போதைய ஒளி வீச்சில் அவள் கதி கலங்கி கால்களை நிலைபெயர்ந்து விட்டதுபோல்.... நல்ல வேளை.
## மின்னலுக்குப் பின் மீண்டும் இருள்...!

**சிறுகதை**

ரோகிணியின் கழுத்தில் சமயாசாரப்படி தாலி ஏறி இன்னும் நான்கு நாட்கள் ஆகவில்லை.

அந்தத்தாலி நாலாவது நாள்...? தாலியைக் கட்டியவன் சாய்ந்துவிட்டான். மார்பிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு ஒப்பாரிவைத்து நெடுங்குரல் எடுத்து அழுதார்கள்.

காலத்தச்சன் வெட்டிய மரத்தை வீட்டிலா வைத்திருப்பார்கள்? சுடலை விறகுடன் விறகாக சுட்டெரித்தார்கள்.

வீட்டில் சூன்யம். அவளுள்ளத்திலும் சூன்யம்!

சூன்யத்தை உடைத்துக்கொண்டு நெடுமூச்சுக்கனலாக வீசுகிறது. அந்த மூச்சின் ஏற்ற இறக்கத்துக்கமைய நெஞ்சு விம்மித் தாழ்கின்றது.

அரும்பு பூத்துக் குலுங்குவதற்குமுன்னே அந்தக்கிளையை வெட்டித் தறித்துவிட்டால்...? அழகையோ நறுமணத்தையோ எதிர்பார்த்துவிட முடியாதே! கைம்மையின் கோலம் அவளைவந்து ஒட்டிக்கொண்டது. நெற்றியில் பொட்டு இல்லை. பலவர்ண ஆடை இல்லை. அணி இல்லை. துல்லியமான வெள்ளைப் புடவையை உடுத்துக்கொள்ளச் சொன்னார்கள்; உடுத்துக்கொண்டாள்.

வெள்ளைப்புடவை, அதற்கேற்ற ரவுக்கை—அத்தனையும் சிறைபிடித்துக்கொண்டிருக்கும் அந்த உடல்... உடலுடன் ஒன்றிவரும் உணர்ச்சி அது வெறும் ஜடமாக இல்லையே, இன்னமும் அதில் உயிர்ப்பு இருக்கிறதே!

மணவாழ்வின் இன்பம் என்ன என்பதை ஒரேகணம் கூடத் துய்க்கவிதியற்று அவள் இந்தக் கோலத்துக்கு வந்துவிட்டாள். பருவத்தின் வனப்பு இன்னும் கட்டுக்குலையவில்லை. கைம்மைச் சிறையின் விலங்குகளை உடைத்து எறிந்துகொண்டு எட்டிப்பார்க்கின்றது இளமை. உணர்ச்சிகள்... இப்பொழுதுதான் கிளைபரப்பி தளிர்விடுகின்றன. கடல் அலைபோல் குமுறிக் குமுறி ஓலமிட்டெழுந்து எங்கும் சிதறி, சிறகிழந்த பறவையாகத் துடிக்கின்றன; மனதில் எங்கேயோ வெகு ஆழத்தில் புதையுண்டு அசுரவேகத்தில் தொழில்படுகின்றன. ஆனால் முடிவு எதுவுமில்லை. அதை நினைக்கும்போது தாமரை இலையில் மழைத்துளிகள் பட்டு உருளும்வெள்ளி மணிகள்போல் கண்களிலிருந்து சில முத்துக்கள் உதிர்ந்தன.

மனிதனின் வாழ்வும் தாழ்வும் இந்த உணர்ச்சியின் எல்லைதான்!

அவளுக்கு என்றும் ஒரு துணை தம்பிராசா. ரோகிணியும் தம்பிராசாவும் ஒரே செடியில் மலர்ந்த இரு மலர்கள். முன்னையது அவள். அவன் அரும்பி பத்து ஆண்டுகள் ஆகிறது.

அக்கா தினம் கண்ணீரைச் சிந்துவதும், மூக்கைச் சீறிக்கொள்வதும் பார்க்கப் பொறுக்கவில்லை. கூடப்பிறந்த அவன் இதயம் அவளுக்காக ஏங்கும். அவனுக்கு என்ன தெரியும்?

"ஏன் அக்கா, எப்ப பார்த்தாலும் ஒரே அழுகைதானா? கொஞ்சநேரமானாலும் சும்மா இருக்கக்கூடாதா? அவள் கண்ணீரைத்துடைக்க குனிந்து கைகளை கண்ணுக்குக்கிட்ட கொண்டுசென்றான். அந்தச் சிறிய கரங்களினால் அவளது கண்ணீரைத்தான் துடைக்க முடியும்.

"சீ என்னையேன் இப்படிச் சித்திரவதை செய்கிறாய், சனியன்! இதுவந்து எனக்கு சகோதரமாய் பிறந்ததே. இது பிறந்து நாலு மாதத்தாலே அம்மாவைச் சமைச்சுது.... ஆறுவருடங்கள் இங்கு காலடி எடுத்துவைத்த உடனேயே அப்பாவையும் துலைச்சுப்போட்டுது. போதாக்குறைக்கு இந்த நிலுவைச் சனியனாலே என் வாழ்வே நாசமாய்ப்போச்சு!"

அதன்பின் அவன் அவளுக்காகப் பரிந்து பேசுவதில்லை. அவளுக்கு ஆறுதல் சொல்லப்போய் ஆத்திரத்தைக் கிளறிவிட அவன் விரும்பவில்லை. பாடசாலை முடிந்தால் ஒரே விளையாட்டுத்தான். அதிக நேரம் தங்குவதில்லை.

★

காலச்செடியில் மாதங்கள் என்ற மலர்கள் உதிர்ந்து சருகாகின்றன...

வீட்டின் வெளிக்கதவை ஒருச்சாய்த்துப் பிடித்துக்கொண்டு வெளியே உலகை நோக்குகிறாள். இந்த உலகம் அனைத்தும இன்பத்துள் திளைப்பது போலவும் தான் மட்டும் கிடையாத ஒன்றுக்காக ஏங்கிக்கொண்டிருப்பது போலவும் அவளுக்குத் தோன்றுகிறது.

நாகரிகத்தின் வாரிசாக நீண்டகாற்சட்டையும், றெடிமேட் சேட்டும் அணிந்து தனது அமெரிக்கன் யங்கித்தலையைத் தட்டிக்கொண்டு இவள் நிற்கும் திக்கை நோக்கி வருகின்றான் ஒரு வாலிபன்.

அவளது பட்டாம்பூச்சி விழிகள் சிறகடித்துக்கொள்கின்றன.

அதுயார்? கூர்குறிப்பாக அவனைப்பார்க்கிறாள். "ஓ, மிஸ்டர் பாலு நீங்களா?" வார்த்தைகள் அவள் வாயிலிருந்து சிதறிவிடுகின்றன.

**"மலையமான்"**

அவன் திரும்பி உன்னிப்பாக அவளைப் பார்க்கிறான். இதழ்க்கடையில் விஷமப் புன்னகை அரும்புகின்றது.

"நீங்கள் இங்கு என்ன செய்கின்றீர்கள்?"

"யாழ்ப்பாணத்தில் பாங்கில் வேலை. இரண்டுமாதந்தான் ஆகிறது. பாக்றோட்டில் எனது நண்பன் வீட்டில் தங்குகின்றேன்!" சொல்லிக்கொண்டே அவளை வடிவாகப்பார்த்தான். பருவத்தின் வாயிற்படியில் நிற்கும் அவள் முகத்தில் சூன்யம் நிலவுகிறதை உணர்கிறான். "ஏன் இங்கு நிற்கிறீர்கள்?"

"இதுதான் எங்கள்வீடு" பதிலுடன் பெருமூச்சும் சேர்ந்து வருகிறது. "சரி வருகிறேன்" என்று அவன் கூற, "வாருங்களேன் உள்ளே" என்றாள். சுற்றுப்புறத்தைப் பார்த்தபடி உள்ளே சென்று சாய்வுகட்டிலில் உட்காருகின்றான். சாய்மனக்கட்டிலின் எதிரே மாட்டியிருந்த தம்பதிகளின் படமொன்றை எழுந்து பார்க்கிறான். அதில், மணப்பெண் ரோகிணி தான் பக்கத்தில் நிற்பவன்? விஷயம் புரிகிறது "உங்கள் அவர்...?"

அவள் முகம் சுருக்கின்றது

பாலைவனத்தில் நீர் கிடைக்குமா? பசுஞ்சுனையைத்தேடி அலையும் அவள் மனதுக்கு அது கிடைத்துவிட்டதா?

அவளது கண்களில் நீர்முத்துக்கள் உருளுகின்றன.

பாலு இப்பொழுதுதான் நிமிர்ந்து உன்னிப்பாக அவளைக் கவனிக்கிறான்.

(4-ம் பக்கம் பார்க்க)

---

உருவகக்கதை

# சருகு

— சசிபாரதி —

அவளைப் பார்த்தபோது எனக்கு மிக வேதனையாக இருந்தது.

அவளை முன்பும் பார்த்திருக்கின்றேன். அந்தப்பெரிய பட்டினத்திலே பிட்சாபாத்திரத்துடன் கடைக்குக்கடை ஏறி இறங்கிக்கொண்டிருந்தாள். இளமை இன்னும் அவளிடமிருந்து முற்றாக விடைபெற்றுவிடவில்லை. பிச்சை கொடுப்பவர்கள்—ஆண்கள் தான்— அவளிடம் கிண்டலும் பரிகாசமுமாக இரண்டு வார்த்தை பேசாமல் அவளுக்குத் தருமம் தருவதில்லை.

பலகாலத்துக்குப்பிறகு இன்றைக்கு அவளைமீண்டும் பார்க்கிறேன்—ஆனால் வெறும் எலும்புக்கூடாக. அதற்குள்ளே உயிர் எப்படித் தங்கியிருந்ததோ அதுதான் அதிசயம்.

சனசஞ்சாரமற்ற அந்த வனாந்தர வெளியிலே தீயாய்க் கொதிக்கும் பாதையில் அவள் நடந்து போய்க்கொண்டிருந்தாள். தள்ளாடித் தள்ளாடிப் போய்க்கொண்டிருந்தாள். ஒரு புல்கட்டை தடுக்குற்றால் பதினைந்து குத்துக்கரணம் போடுவாள்.

இந்த எலும்புக் கோவை ஓரோர் சமயம் வானத்தை நோக்கி இரு கைகளையும் கூப்பியவாறு "தெய்வமே, என்னைக் கொன்றுவிடமாட்டாயா? இந்த உயிரை உன்னிடமே எடுத்துக்கொள்ளமாட்டாயா?" என்று கூக்குரலிட்டது. இன்னும் ஏதேதோ புலம்பி அழுதது. தற்கொலை செய்யக்கூட திராணியற்ற ஒரு சருகாகக் காற்றில் மிதந்து போய்க்கொண்டிருந்தாள்.

எங்கிருந்தோ மாயமாக வந்ததுபோல ஒரு மோட்டார் அவள் அருகே 'கிறீச்' சிட்டு நின்றது. மோட்டார் திடீரென நின்ற அதிர்ச்சியில அவள் தரையில் விழுந்துவிட்டாள். விழுந்தவள் எழுந்திருக்கவில்லை.

மோட்டாரைச் செலுத்திய னவான் கதவைத்திறந்து அவளருகே சென்று பார்க்கிறார். அன்னம், தண்ணீர் காணாத மயக்கம்--அல்லது அதுதான் ஒருவேளை பிரேதக்களையோ—அவள் முகத்தில் மண்டிக்கிடக்கிறது. அவள் தன் வயிற்றில் கைவைத்து கனவானிடம் பல்லைக்காட்டி யாசிக்கிறாள்.

கனவான் தமது சட்டைப் பைக்குள் கைவிட்டு சில ரூபாய் நோட்டுக்களை அவளிடம் கொடுத்துவிட்டுத் திரும்புகிறார். கார் 'விர்' ரென்று பறக்கிறது.

அந்த நீண்டவெளியில் மறுபடியும் அமைதி குடிகொள்கிறது.

கைக்குள்ளேயிருக்கும் காசு நோட்டுக்களை வெறுப்புடன் பார்த்துக்கொண்டே அவள் திரும்பவும் ஓலமிடுகிறாள்: "தெய்வமே, என்னைக்கொன்றுவிடமாட்டாயா? என் உயிரை உடலிலிருந்து பிரித்துவிடமாட்டாயா?"

சனசஞ்சாரமே அற்ற அந்த வனாந்தரக் காட்டில் அவளுடைய குரல் பயங்கரமாக எதிரொலிக்கிறது.

காற்றிலே உதிர்ந்த சருகு ஒன்று சுழன்றுவந்து அவள் கையிலே ஒட்டிக்கொள்கிறது

---

# தேர்த் திருவிழா

— திக்கம் எஸ். யோகன் —

அன்று செல்வச்சந்நிதியில் ஒரே சனக்கூட்டம். ஊரெல்லாம் திரண்டு நிற்பதுபோல் மக்கள வெள்ளம் அங்கு கரைபுரண்டோடிக்கொண்டிருந்தது. வருடாவருடம் நடைபெறும் திருவிழாவே இக்கூட்டத்திற்குக் காரணம். அன்று— எட்டாம் திருவிழா.

செல்லையா மடத்தில் அன்று பென்ஷனியர் கதிரேசரின் அன்னதானம். அதற்சாகக் கோயிலில் கூடிநின்ற சனத்திரளில் பாதி செல்லையாமடத்தைச் சூழ்ந்திருந்தது. ஐம்பது மூடை அரிசியையும் அவித்துத் தானம் செய்யவேண்டும். அதற்குத் தகுந்தாற்போல் மடத்தில் சனத்திரள் கூடியிருந்ததில் வியப்பொன்றுமில்லையே? அந்தப் பெரிய மடத்தில் அவ்வளவு சனத்தையும் அடக்கி இரண்டு வரிசையில் பந்தி வைத்திருந்தார்கள் வரிசையாக இலைபோட்டு உணவுண்ண ஆரம்பமாகிவிட்டது. அந்த வரிசையில் ஒரு மூலையில் இருந்தான் முருகையன். அவன் கவனம் முழுவதும் முன்னாலிருந்த இலையில் உள்ள உணவை ருசிப்பதில் லயித்திருந்தது. நாலு கவளத்தை அள்ளி வாயில் போட்டிருப்பான்; அதற்குள் 'டேய்!' —சிங்கத்தின் உறுமல் போல் ஒலித்தது ஒரு குரல்.

தங்கக்கரை போன்ற சருகை வேட்டி, இரண்டு கை விரல்களும் நிரம்பிய வைரக்கல் மோதிரங்கள், மார்பிலே தவழும் தங்கச்சங்கிலி நிறைந்த தோற்றத்துடன் முருகையனை நெருங்கிக்கொண்டிருந்தார் ஒருவர். எல்லாக் கண்களும் அவர் போகும் திக்கையே பார்த்துக்கொண்டிருந்தன. என்ன நடக்குமோ, என்னவாகுமோ என்று எல்லா மனதிலும் கேள்வியும், பயமும் எழுந்துகொண்டிருந்தன. முருகையனை நெருங்கிய அவர் அவனை முறைத்துத் தன் கண்களால் நோக்கினார். அந்த ஒரு கணத்தில் முருகையன் செயலிழந்தான். கையில் அள்ளிய உணவு வாய்க்குள் போவதற்கு மறுத்துக் கையிலேயே இருந்தது. "நீ வெளியாளோ உள்ளாளோ"? என வந்தவர் முருகையனை நோக்கிக் கேட்டார். முருகையனின் முகத்தில் கலக்கம் தென்பட்டது. அவன் உடல் சிறிது நடுங்கவும் தொடங்கியது. பயபக்தியுடன் 'வெளியாள் நயினார்' என்று தட்டுத்தடுமாறிச் சொற்களை அவன் வாய் உமிழ்ந்தது. மறுகணம் படார்! என்ற ஓசை. வைரக்கல் மோதிரங்களைச் சுமந்த பென்ஷனியர் கதிரேசரின் கை முருகையனின் கன்னத்தைப் பதம் பார்த்துவிட்டது. அத்தோடு நிற்காமல் முருகையனைச் சுற்றி ஒரு கூட்டமே திரண்டு தம் கைவரிசையைக் காட்டிவிட்டது. நிலத்தில் சாய்ந்தான் முருகையன். அவன் நெற்றியிலிருந்து இரத்தம் கசிந்துகொண்டிருந்தது தூக்கி மடத்துக்கு வெளியே போடப்பட்டான். உண்ட மீதி உணவும், இலையும் அப்படியே நாதியற்றிருந்தது.

நினைவுபெற்று எழுந்த முருகையன் கால்போன திக்கில் நடந்துகொண்டிருந்தான். அவன் உடலெல்லாம் புண்ணாக வலியெடுத்தது, கண்கள் பஞ்சடைந்தன, கால்கள் தள்ளாடின. தொண்டமானாற்றுப் பாலத்தில் நடந்துகொண்டிருந்தான். பாலத்துக்கருகே தனிமையாக வளர்ந்திருந்த ஆலமரத்தை நோக்கி அவன் கால்கள் நடந்தன. ஆம்! அந்தத் தனிமரம் அவனுக்கு இளைப்பாற உதவியது. அந்த ஆலமரத்தைப் போலத்தான் அவனும் ஒரு தனிமரம்.

இந்த உலகமேடையிலே அவன் ஒரு தனிமனிதன். ஒவ்வொரு ஜீவனுக்கும் ஒரு தாயென்ற துணையிருக்குமே! அவனுக்கும் இருக்கவேண்டுமே! அது எங்கே? அவனை உருவமாக இந்த உலகத்துக்களித்த ஒருத்தி இருப்பாளே! அவள் எங்கே?

முருகையனின் கண்கள் நிழலைக் கொடுத்துக்கொண்டிருக்கும் ஆலமரத்தை நோக்கியது. "நீயும் தனிமரம்; நானும் தனிமரம்" அவன் சிந்தனை முடிவில்லாமல் தொடர்ந்துகொண்டிருந்தது.

துன்பச்சுமையால் அவன் உள்ளம் கனத்தது. மெல்லக் காலை நீட்டி மரநிழலில் படுத்துக்கொண்டான். அவன் உள்ளக்கனதி போல் கண்ணிமைகளும் கனத்துச் சோர்ந்தன. அவனை அறியாமலே உறங்கிவிட்டான். அன்னநடை போடும் அழகு மயில் போல் கதிரவனும் மேற்குவானத்தை முத்தமிட மெல்ல மெல்லச் சென்றுகொண்டிருந்தான்.

ஆலமரத்திலிருந்து முருகையனின் மார்பிலே விழுந்த சருகொன்று அவன் உறக்கத்தைக் கலைத்தது. விழித்துக்கொண்ட அவன் கண்கள் வானத்தை நோக்கின. விட்ட இடத்திலிருந்து தொடர்வது போல் மீண்டும் அவன் சிந்தனை தொடர்ந்தது. ஆம்! விரிந்த வானம் தான் அவன் வீடு பரந்த பூமி தான் அவன் தாய். கால் போகுமிடமெல்லாம் அவன் போவான். கால் சோரும் இடத்தில் விழுந்துபடுத்துவிடுவான். எல்லோரையும் போல கூரையமைத்துத் தானும் வீடு கட்டவேண்டுமென்று அவன் எண்ணவில்லை. நீல வானம் அவன் கூரை. அவனுக்காக இயற்கை அமைத்த வீடு. அதன் எல்லைக்குள் எவ்விடத்திலும் நீட்டி நிமிர்ந்து படுத்துறங்குவான்.

மாலைக்கதிரவனின் களங்கமற்ற முகத்தை நோக்கிக்கொண்டிருந்த முருகையனின் கண்களில் கண்ணீர் பனித்தது. அது பெருகி அருவி போல் கன்னங்களில் வழிந்துகொண்டிருந்தது. யாராவது எப்பொழுதாவது அழுவதை அவன் பார்த்திருப்பான். ஆனால் தான் என்றைக்கும் அழுத நினைவு இன்றுவரை அவனுக்கில்லை. இன்று புதுமையாக அழுகிறான்.

எல்லோருக்கும் தானே கதிரவன் ஒளியைக் கொடுக்கிறான். எல்லோருக்கும் தானே வானம் மழையைப் பொழிகின்றது. எல்லோருக்கும் தானே நிலவு தன் பசுமையான பிரகாசத்தையள்ளிச் சொரிகிறது. வானமும், நிலவும், சூரியனும் பாகுபாடு காட்டுவதில்லையே. அன்று நடந்த நிகழ்ச்சி அவன் உள்ளத்தைக் கலங்கவைத்துக்கொண்டிருந்தது.

(9 -ம் பக்கம் பார்க்க)

# மின்னல்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பருவத்தின் நெகிழ்ச்சி கோடிட்டிருப்பது தெரிகிறது. பருவச்கொளிப்பு முழுவதையும் வரிந்து கட்டிவைத்துவிட்டதைப்போல அவள் 'ரவுக்கை' அவள் மேனியை இறுகப்பற்றிக்கொண்டிருக்கிறது. அதனூடே விம்மி நிற்கும் வடிவமைப்பு அவள் மீது மேலும் அழகை வாரிச் சொரிகிறதே! ஆ, காலன்தான் எத்தகைய கொடியவன். அவளது புற அழகைவிட அகத்தழகு ரோசாப்பூவின் இதழ்கள் போன்றது. நையப்புடைத்து வெண்மையாக்கிய பஞ்சு போன்றது. அப்பழுக்கற்றது. இவளா விதவை. பாவம்!

அவனால் நிற்கமுடியவில்லை. "நேரமாகிறது, ஒரு வேலை இருக்கிறது போகவேண்டும்" என்று அவசரப்படுகின்றான்.

"ஏன் அவசரப்படுகிறீர்கள்?"

''அடல்ற்ஸ் ஒன்லி" பார்த்தாக வேண்டும.

"அப்படியென்றால்?"

"அது ஒரு இங்கிலீஸ் படம். வயது வந்தவாகள் மட்டும்தான் பார்க்கலாம். சரி நேரமாகின்றது. வரட்டுமா?"

அவள் 'சரி' என்பதற்கு அடையாளமாக பொம்மைபோல் தலையாட்டினள். அத்துடன் நெடுமூச்சும் பெருமூச்சாக எழுந்தது. அதைப் பாலு கவனிக்கவில்லை; போய்விட்டான்.

★

அவளது பார்வை எதனை எதிர்நோக்கி ஏங்குகின்றது? தினமும் பாலுவைச் சுற்றியே அவள் நினைவு ஓடுகின்றது. அந்த நினைவில் அமூம்போது எத்தனை திருப்தி ...!

"எனக்குத்தான் எவ்வளவு அற்ப ஆசை!"

பெண் பேதை. அவள் நெஞ்சில் எத்தனை கேள்விகள்? ஒருவிதவலி ஏற்படுகின்றது. விதியைப் பார்த்தாள்.

கண்களில் தெரிபவன் அவனா? அவளது விழிகள் விசர்சித்தன. பாலு வந்தான். அவனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி அவள் மனதில் எழுந்த கேள்விகளுக்கு முற்றுப்புள்ளியாக அமைகிறது.

"என்ன உங்களை இந்தப் பக்கமே காணவில்லை?"

"சென்ற சில நாட்களாக ஒழியாத வேலை. நான்வரமுடியவில்லை ...?"

"நீங்கள் வரவில்லை என்றதும் பயந்துபோய்விட்டேன்."

"ஏன்?"

தன்னுணர்ச்சிப் போராட்டத்தைஎப்படிச்சொல்லுவாள். எப்படியோ சில மணிநேரம் பேசிக்கொண்டே இருந்தார்கள். அவளது விழிக்கோணத்தில் குறும்பு நெளிகிறது. இதழ்ப்பாளை வெடிக்கப்பறகள் தெரிகின்றன.

"அடல்ற்ஸ் ஒன்லி" பார்க்கப் போகவில்லையா? இப்படி நையாண்டி செய்தாள். அதில் ஒரு ஆவலும் தொனித்தது. சொல்லிவிட்டுப் பாலுவைப் பார்த்தாள். நெஞ்சின் வரட்சியில் மழையை விரும்பும் ஆவல் அதில் இழையோடுகிறது. "அடல்றஸ் ஒன்லி" தானே இப்பொழுது பார்க்க வாய்ப்பு இல்லை. இன்னுமொருநாளைக்குப் பார்த்தால் போகிறது ...!

'உங்களைப் பொறுத்தமட்டில் நான் எப்படி இருக்கிறேன்.'

"ஏன்?" அழகாய்த்தான் இருக்கிறாய்.

அழகு என்று சொல்லிவிட்டாலே போதும் பெண்களுக்கு அதைவிட சந்தோஷம் இருக்காது. மேலும் அதுவும் ஒரு ஆண் சொல்லிவிட்டால் அப்பப்பா கேட்கவா வேண்டும்.

அதைவிட இன்பமென்ன?

தன்னை மறந்த ஒருநிலை, எதையும் பிரித்தறியமுடியாத பலவீனம்.

முன்பு எட்டநின்று பேசிக்கொள்ளும் அவள் இன்று கிட்ட நெருங்கினள் "உங்கள் கையா என் கையா பெரிது?" பூனையின் பார்வையை தகிர்க்கமுடியாது, எலி தன்னை மறந்து ஓடிவரும் பரிதாபநிலை அது.

தனது கையை அவனுக்காக நீட்டுகிறாள்.

"அக்கா"

வாசலிலிருந்து தம்பிராஜாவின் குரல் கேட்கிறது. அவசரமாக ஒரு கடுதாசியைக் கொண்டு ஆங்கு வருகிறான் சிறுவன். 'அக்கா' இந்தப்படத்தைப் பார்த்தாயா?

"என்னடா அது?"

இந்த முரடன் இந்தப்பொம்பிளையைப் பற்றி இழுத்து ... படத்தை அவள் வாங்கிப் பார்த்தாள்.

பலியாடு பலிபீடத்தின் முன்னே நின்று நடுநடுங்கும் நிலையில் அந்தப் படத்தில் ஒரு பெண் நிற்கிறாள், பலவந்தமாக அவளை அணைக்க அவன் முயலுகிறான்.

பெண்மையின் மென்மையை இணைக்க அவன் முரட்டுத்தனம் விழைகிறது.

அந்தப்பெண் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முனைகிறாள்.

இங்கே ஒருத்தி—? தனது மென்மையை இழந்துவிடத்தவியாத் தவிசகிறாள். அந்தக்கடதாசி ஒரு சினிமா விளம்பரம். அதிலும் "அடல்ற்ஸ் ஒன்லி" என்று எழுதப்பட்டிருக்கிறது.

அடல்ற்ஸ் ஒன்லி என்றால் பெண்களை பலவந்தமாகப் பிடித்து – இழுத்து அணைத்து...

இவ்வளவு!

கீழ்த்தர உணர்ச்சி.

தன்னை இழந்து தன்னையே முழுதும் அர்ப்பணித்துவிட அவளால் இப்பொழுது முடியவில்லை. தன்னை விட்டு எங்கோ சென்றுவிட்ட மானம்என்றஉணர்ச்சி — கீழ்த்தர எண்ணங்களைப் புதைகுழி தோண்டிப் புதைத்துவிட்டு விஸ்வரூபமாக வியாபித்துக் கொள்கிறது.

பாலு எழுந்துபோகிறான்.

அவனை அவள் தடுக்கமுடியவில்லை. சோர்ந்துபோய் சாய்மானக்கட்டிலுக்குள் விழுகிறாள்...

பழைய பத்திரிகை,காற்றின் தாக்குதலைத் தாங்கமாட்டாது துடிக்கும் சிட்டுப்போல் யன்னல் ஓரத்தில் பக்கங்களைப் புரட்டிக்கொள்கிறது.

எழுந்து சென்று அதனைப் புரட்டுகிறாள்.

"விதவைகள் விவாகஞ் செய்வதைத் தடுப்பது பாவம். ஆனல் அந்த விதவைகள் விவாகஞ் செய்யாது இருப்பார்களேயானல் அது இச்சமுதாயத்துக்கே புண்ணியமாகும்."

அறிஞர் ஒருவரின் அருமையான வாக்கியமிது! விதவைகள் மணமுடித்து வாழ்வது பாவமல்ல, ஆனல் ...

அவள் வாழ்வை வேண்டாது இருப்பாளேயானல் தனது சமூகத்துக்கே உயர்வைத் தருபவள் ஆவாள்!

பாரம்பரியம் புகட்டிய தர்மத்துக்கு அவள் தலைவணங்குகின்றாளா? மணக்கோலத்திலிருக்கும் கணவனை எதிர்நோக்கிய விழிகள் இருசொட்டு திவலைகளாக மாறி, அந்தப் படத்தின் அடிப்பகுதியில் உருண்டன.

அவளது மனப் போக்கை புரிந்து கொள்ளமுடியாத பலவீனத்துடன் தம்பிராஜா அசைவற்று நின்றான்.

(யாவும் கற்பனை)

# கிராமத்தையும் நகரத்தையும் பிணைக்கும் நல்லுறவுப் பாலம்

கதர் எதற்காக இருக்கிறது?

ஆடம்பரத்துக்கு அல்ல, எளிமையின் சின்னமாக கதர் இருக்கிறது. அதை உடுத்தும் ஏழைகளுக்கு அது பொருத்தமானதாக இருக்கிறது. பணக்காரர்கள், மிகச் சிறந்த கலைஞர்கள் ஆகியோரின் உடலை அலங்கரிப்பதற்காகப் பண்டைக் காலத்தில் கதர் செய்யப்பட்டதைப்போன்று இப்பொழுதும் செய்யப்படலாம்; புராதனக் கலைக்கும் கைத்தொழிலுக்கும் புத்துயிர் அளிப்பது தான் அது.

கதர் எல்லா யந்திரங்களையும் அழித்துவிடவேண்டும் என்று முற்படவில்லை. ஆனல் யந்திரங்களின் உபயோகத்தை அது ஒழுங்குபடுத்தி அவைகளைப்போல் வளர்ந்து விடாமல் தடுக்கிறது. மிகவும் ஏழைகளாக உள்ளவர்களுக்கு அவர்களுடைய குடிசைகளிலேயே சேவை செய்ய அது யந்திரத்தை உபயோகிக்கிறது. ராட்டையே தன்னளவில் ஒரு யந்திரந்தான்.

ஏழைகளைப் பணக்காரர்களின் தளையிலிருந்து கதர் விடுவிக்கிறது. படித்தவர்களுக்கும் பாமரர்களுக்குமிடையே ஆன்மிகப் பிணைபபை ஏற்படுத்துகிறது. ஏழைகளிடமிருந்து பணக்காரர்கள் எடுத்துக்கொண்டுவிட்டதில் கொஞ்சம் அந்த ஏழைகளுக்குத் திரும்பக் கிடைக்கும்படியாகவும் செய்கிறது.

கதர், எந்த ஒரு கிராமக் கைத்தொழிலையும் போக்கிவிடவில்லை. அதற்கு மாறாக, மற்ற கிராமக கைத்தொழில்களுக்கெல்லாம் நடுநாயகமாக விளங்குகின்றது. குடும்ப வாழ்வு சிதைந்துபோய்விட்ட விதவைகளின் வாழ்வில் நம்பிக்கை ஒளியை ஊட்டுகிறது; ஆனல் முடிந்தால் அவர்கள் அதிகம் சம்பாதிப்பதை அது தடுக்கவில்லை.

இக்கால நாகரிகத்தைக் கொண்டுள்ள பெரிய நகரங்கள் அனவசியமான அழிவின் வளர்ச்சி. கிராமங்களின் ரத்தத்தை உறிஞ்சும் தீய காரியத்தையே அவை செய்து கொண்டிருக்கின்றன. கிராம வாசிகளின் வாழ்வுக்கும் சுதந்திரத்துக்கும் இடையூறாக ஆபத்தாக இருக்கின்றன. இதை மாற்றி, நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் நல்லுறவு ஏற்படும்படி செய்யவும் கதர் முயன்றுவருகிறது.

கதர் வானத்திலிருந்து பொழிவதாக இருந்தால் அதுவே கேடாக முடிந்துவிடும். ஆனல் பட்டினி கிடக்கும் கோடிக்கணக்கான மக்களும் ஆயிரக் கணக்கான மத்தியதர வகுப்பு ஆண்களும் பெண்களும் தாமே விரும்பி ஒத்துழைத்து உற்பத்தி செய்வதாக அது விளங்குகிறது. இதனல் அதன் வெற்றி அமைதியான முறையில் ஏற்படும் சிறந்த கூட்டமைப்பாக ஆகிறது.

—காந்தியடிகள்

# இந்தியப் படை வீரர் நிறுவிய 'இராமர் அணை'

இது ஒரு யுத்தமுனைச் சம்பவம்.

வெற்றி முழக்கத்தோடு வேகமாக முன்னேறி வருகிற ஐ. நா.வைச் சேர்ந்த இந்தியத் துருப்புக்களைத் தடுத்து நிறுத்துவதற்காகக் கடாங்காவின் கூலிப்பட்டாளத்தினர் நாட்டின் சொத்துக்குச் சேதம் விளைவிக்கிறோம் என்பதையும் எண்ணாது மிகவும் மிருகத்தனமாக அந்நதியின் குறுக்கே இருந்த மூன்று பாலங்களை இடித்துத் தள்ளினர்கள். வாகனங்களிலோ, ரயில்மூலமாகவோ, நடந்து சென்றோ அந்நதியைக் கடக்கமுடியாமலாயிற்று.

ஆனல் 40மணி நேரத்துக்குள்ளாக அவ்வீரர்கள் அந்நதியின் வலதுகரையிலிருந்து ஜடோத்வில்லியை வந்தடைந்தனர் இந்தியப் படைவீரர்களின் திறமையையும் தந்திரத்தையும் சரியாக மதிப்பிட எதிரிகள் தவறிவிட்டது தான் அதற்குக் காரணம்.

சென்னை ரெஜிமெண்டைச் சேர்ந்த ஜெமேதார் எம். கணேசன், தமக்கு ஏற்பட்ட பல கஷ்ட நஷ்டங்களையும் பொருட்படுத்தாது இந்தியத் துருப்புகளுக்கு ஏற்படவிருந்த தோல்வியை வெற்றியாக மாற்றிக் கொடுத்தார். அவருடைய பட்டாளத்தின் கமாண்டரான லெப்டினென்ட் கர்னல் டி. எஸ். ரந்தாலா 1963 ஜனவரி 1-ந் தேதி மாலை 5 மணிக்கு லுபிரா நதியை அடைந்த போது அதன் பாலங்கள் மூன்றும் இடித்து நொறுக்கப்பட்டிருந்ததைக்கண்டுதிகைத்தார்.

மேஜர் எஸ். பி. மகாதேவன் தலைமையில் படைவீரர் கம்பெனியொன்றை நதியை நீந்திக் கடக்கச்செய்து கயிறுகளாலும் கம்பிப் பாலங்களாலும் தற்காலிக பாலமொன்றை அமைக்க முயன்றுகொண்டிருந்தார். அதற்கிடையில் பயனியர் பிளாட்டூனைச் சேர்ந்த ஜமேதார் கணேசனின் மூளை சுறுசுறுப்பாக வேலை செய்யத் தொடங்கியது. மேலதிகாரிகளின் உத்தரவையும் எதிர்பார்க்காமல் எங்காவது படகு கிடைக்குமா என்று நதியோரமாகத் தேடிப் பார்க்கப் புறப்பட்டார். நதியோரமாக அடர்ந்து கொழுத்து வளர்ந்து நின்று புதர்க்காடுகளில் ஈயைப் போன்ற அளவில் காங்கோ கொசுக்கள் தந்த தொல்லையைப் பொருட்படுத்தாது ஆறுமணி நேரமாக இடைவிடாது தேடியலைந்தார். கடும் இருளில் பாதை நன்றாகத் தெரியவில்லை. அங்கங்கே வழுக்கி விழுந்தாலும் கடைசியில் அவர் தேடியது கிடைத்தது. கடும் புதருக்குள் சுமார் 400 அடி தூரத்தில் நாட்டுப் படகு ஒன்று காணப்பட்டது. எதிரிகளின் நாசவேலையிலிருந்து தப்புவதற்காக அவர்கள் அங்கு அமைத்திருந்த கண்ணிகளை அகற்றுவதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டு அப்படகை இருவர் உதவியுடன் இடிந்து கிடந்த பாலத்துக்கு இழுத்துக்கொண்டு வந்துவிட்டார். உடனே அப்படகின் உதவியால் இரண்டு மணி நேரத்துக்குள்ளாகக் கயிறுகளையும் பிற சாதனங்களையும் கொண்டு இரு கரைகளையும் இணைத்துவிட்டனர். பொழுது புலருவதற்கு முன் அப்படகில் காலிப் பீப்பாய்களை வைத்துக் கட்டி, பலகைகளை அதில் அறைந்து செப்பனிட்டார்கள். பகலில் படகு மேலும் புதுப்பிக்கப்பட்டது. அன்று மாலைக்குள்ளாக ஜீப் வண்டிகளும், கனரக பீரங்கிகளும் உணவுப் பொருட்களும், வெடி மருந்துகளும், அன்றைய போர் நடவடிக்கைக்கு என்னென்ன தேவைப்படுமோ அவையெல்லாம் படகு மூலமாக ஏற்றிச் செல்லப்பட்டு அக்கரை சேர்ந்தன. ஜனவரி 3-ந் தேதி நடுப்பகலுக்குள் சென்னை ரெஜிமெண்ட் ஜடோத்வில்லியை அடைந்துவெற்றிமாலை சூடியது.

# குயிலே என்று குதிக்கும் நாள்!

— ச. வே. பஞ்சாட்சரம் —

மஞ்சள் மாலை விண்மீதில்
மண்டும் பறவைக் கூட்டங்காள்!
கொஞ்சி நீவிர் செய்கோலம்,
கூறும் 'கீச்சுக்' கற்பனைகள்
நெஞ்சில் தேனை வைப்பதெலாம்
நினைவீர்! எந்தன் கண்ணாளன்
'வஞ்சி' என்றென் பக்கலிலே
மகிழும் அந்த வேளைதான்!

★

கள்ளி வேலிக் காடெங்கும்,
கத்தும் ஓலைப் பனையெங்கும்,
வெள்ளி ஓடைக் கரையெங்கும்,
வெட்டும் அரிவி வயலெங்கும்
துள்ளும் காளைத் துணையோடு
துய்த்து உண்டு புல்மீளும்
கள்ளப் பசுவே! மணியோசை
கணவர் இன்றி வேம்பாகும்!

★

சிரிக்கும் முல்லை மலரே! என்
சிறுபல் வரிசை முறுவல் முன்
எருக்கே நீயென் றென்மன்னர்
இகழும் போதும், இரவங்கு
விரிக்கும் போர்வை இருளுந்தன்
விஞ்சும் ஒளிமுன் விழலாகப்
பெருக்கும் வாசம் என்னுள்ளம்
பிணிக்கும்! அதுவும் இன்றல்ல!

★

'மயிலே வருவேன் மறுதிங்கள்!
மகிழ்வோம்!' என்று எழில்வண்ணம்
பயிலும் கையால் என்கண்ணீர்
பரிந்து நீக்கி, என்னெஞ்சம்
'வெயிலோ! மழையோ!' என்றேங்க
வெளியூர் சென்றார் பொருள்தேட!
'குயிலே' என்று அவர்வந்து
குதிக்கும் அந்நாள் இனிதெல்லாம்.

# கலை அரங்கம்



# சந்திரபாபுவும் சோலைமலையும்

பல படங்களுக்குக் கதை வசனம் எழுதியுள்ள எம்.எஸ். சோலைமலையும், நகைச்சுவை நடிகர் சந்திரபாபுவும் டைரக்டராகப் பணி புரிய இருக்கின்றனர்.

வசனகர்த்தா சோலைமலை சொந்தத்தில் ஒரு படக்கொம்பனியைத் தொடங்கியிருக்கிருர். அதன் முதல் தயாரிப்பின் கதைவசனம் எழுதுவதுடன் படத்தின் டைரக்ஷனையும் அவரே கவனிப்பார்.

நகைச்சுவை நடிகர் சந்திரபாபு, ரவி பிக்சர்ஸின் முதல் தயாரிப்பின் வாயிலாக கதாசிரியராகவும், டைரக்டராகவும் ஆகிருர். ரவி பிக்சர்ஷின் முதல் தயாரிப்பின் கதை அவருடையது.

திரைக் கதை வசனத்தை எஸ். டி. சுந்தரம் எழுதுகிருர். கண்ணதாசன் எழுதும் பாடல்களுக்கு விஸ்வநாதன் - ராமமூர்த்தி இசை அமைக்கின்றனர். முக்கியமான பாத்திரத்தில் நடிப்பதுடன் இப்படத்தை டைரக்ட் செய்யப்போவது சந்திரபாபுதான். ஜெமினிகணேசன், விஜயகுமாரி, ரங்கராவ், நாகேஷ், அசோகன் மனோரமா ஆகியோர் நடிக்கும் இப்படத்திற்கான நடனங்களை பி. எஸ். கோபாலகிருஷ்ணன் அமைத்துக் கொடுப்பார்.

## "தேன் கூடு" படமாகிறது

சிவாஜி நாடக மன்றத்தினர் நடித்துவரும் ஜி. பாலசுப்பிரமணியம் எழுதிய "தேன் கூடு" நாடகத்தைப் புதியதா



கத் துவங்கியுள்ள ஸ்ரீனிவாசன் அண்டு கம்பெனியார் படமாக்கப் போகின்றனர். சிவாஜி கணேசன் பிரதம பாகத்தில் நடிக்கவிருக்கும் இப்படத்தை ப. நீலகண்டன் டைரக்ட் செய்வார்.

## கலர்ப்படத்தில் சிவாஜி-சாவித்திரி

ஏ. கே. வேலன் கதைவசனம் எழுதும் ஒரு படத்தை நாராயணன் கம்பெனியார் கலர்ப்படமாகத் தயாரிப்பார்களெனத் தெரிகிறது. சிவாஜி கணேசன், சாவித்திரி பிரதம பாகங்களில் நடிக்கவிருக்கும் இப்படம் புல்லய்யா டைரக்ஷனில் சீக்கிரமே தொடங்கவிருக்கிறது.

## கல்லூரி நிதிக்காக நாடகம்

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் ஆதரவில் கல்லூரி மண்டபம் கட்டிட உதவி நிதிக்காக 'நளதமயந்தி' என்னும் நாடகம் கல்லூரி மாணவிகளால் நடித்துக் காண்பிக்கப் படவிருக்கிறது.

## ஸ்ரீவிஜயராகவாவின் முதற் படம்

ஸ்ரீவியராக்வா புரொடக்ஷன் சாரின் முதல் தயாரிப்புக்கான ஆரம்பவிழாவில் திரையுலகப் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

புதுமையான கதைப் போக்கும் உணர்ச்சி மிக்க கட்டங்கள் நிறைந்ததுமான இந்தக் குடும்பச் சித்திரத்தை ஸ்ரீதர் டைரக்ட் செய்கிருர். கே. ஜே. ராதாமணாளன் திரைக்கதை



வசனம் எழுதுகிருர். மூலக் கதையை திரு கே. ஆர். பிரம்மன் எழுதியுள்ளார். லட்சுமி நாராயணன் இசையமைக்கிருர்.

கே. ஆர். ஆதி நாரயணராவ் தயாரிக்கும் இச் சமூகப்படத்தில் எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி மற்றும் பல முன்னணி நடிகர்கள் நடிக்கவிருக்கின்றனர்.

## எம். கே. ராதா மகன் திருமணம்

சினிமா நடிகர் எம். கே. ராதாவின் மகனுக்குத் திருமணம் வெகுசிறப்பாக நடைபெற்றது.

எம். கே. ராதாவின் மகன் மனோகரனுக்கும், வசந்தகுமாரி என்னும் பெண்ணுக்கும் திருமணம் நடைபெறறது. திருமண விழாவிற்கு நடிகர்கள் எம். ஜி. ராமச்சந்திரன், சிவாஜி கணேசன், தங்கவேலு, பாலையா, டி. கே. ஷண்முகம், பகவதி நடிகைகள் கண்ணும்பா, டி. ஆர். ராஜகுமாரி, டி. ஏ. மதுரம், தாம்பரம் லலிதா ஆகியோரும் பட அதிபர்கள் ஏ. வி. மெய்யப்பன், பட்சிராஜா ராமுலுநாயுடு ஆகியோரும் வந்திருந்தனர்.

## 'கடவுள் தந்த பரிசு' பானுமதி நடிக்கிருர்

ஜெய்குமார் பிச்சர்சார் 'கடவுள் தந்த பரிசு' என்ற பெயரில் ஒரு படம் தயாரிக்கிருர்கள். இப்படத்தில் பி. பானுமதி கதாநாயகியாக நடிக்கிருர்.



அசோகன், தங்கவேலு, மகாலிங்கம், ஈ. வி. சரோஜா, சி கே. சரஸ்வதி, புதுமுகம் வசந்தமாலா ஆகியோரும் நடிக்கிருர்கள். திரைக்கதை வசனத்தை மக்களன்பன் எழுதுகிருர். ஸ்ரீதர் டைரக்ட் செய்கிருர்.

# இப்படியும் ஒரு காட்சி

## சிவாஜி சோறு போடுகிருர்!

காலையில் குளித்துவிட்டுவந்தார் சரோஜாதேவி. நீண்ட கால்சட்டையும் புதுமாதிரிச் சட்டையும் அணிந்திருந்தார்.

'எனக்குப் பசிக்கிறது. சோறு வேண்டும்' என்று சரோஜாதேவி சிவாஜியிடம் கேட்டார். 'சோறுதானே வேண்டும்' வா சாப்பிடலாம் என்று சரோஜாதேவியை சமையலறைக்குள் அழைத்துச் சென்ருர் சிவாஜி.

மேஜைபோட்டு சோறு பரிமாறவில்லை. சரோஜாதேவியை கீழே தரையில் உட்காரச் சொன்ருர். அழாக குறையாக கீழே உட்கார்ந்தார் சரோஜா தேவி.

உடனே ஒரு தட்டை எடுத்து சரோஜாதேவியின் முன்வைத்தார் சிவாஜிகணேசன். சோறு, உருளைக் கிழங்குப் பொரியல், வடை, அப்பளம் என்று ஒவ்வொன்ருகத் தட்டில் எடுதது வைத்து நெய்யும் ஊற்றினுர் சிவாஜி.

சிவாஜிகணேசன் சோறு பரிமாற ஆசையுடன் சாப்பிட்டார் சரோஜாதேவி. சிவாஜி பார்த்துக்கொண்டே இருந்தார்.

இக்காட்சியை 'கல்யாணியின் கணவன்' என்ற படத்துக்காக கோவை பட்சிராஜா ஸ்டுடியோவில் படமாக்கினுர்கள். ஸ்ரீராமுலுநாயுடு டைரக்ட் செய்கிருர்.

## கைதிக்கூண்டில் சிவாஜி

பிரசித்திபெற்ற கொலை வழக்கு அங்கு விசாரணை நடக்கிறது. ஆகவே, அன்று அந்த நீதிமன்றத்திலே ஒரே கூட்டம். நீதிபதியின் ஆசனத்திலே கே. நடராஜன் அமர்ந்திருக்கிருர். பெற்ற மகன் சிவாஜிகணேசன் கைதிக்கூண்டிலே நிற்கிருர். அவர் தான் கொலைக்குற்றம் புரிந்தவரென வாதம் புரிகிருர்- அவரது தந்தையும் அரசாங்க வக்கீலுமான ரங்கராவ். சிவாஜிகணேசனே தான் நிரபராதியெனக் கதறுகிருர்.

கைதிக் கூண்டிலே நிற்கும் தன் தம்பி சுத்தவாளிஎன நிரூபிக்க எதிர்வாதம் புரிகிருர் வக்கீல் அண்ணனுன எம். ஆர். ராதா.

தனயனை தந்தை குற்றம் சாட்ட தம்பிக்காக அண்ணன் வாதாடும் உணர்ச்சிமிக்க இந்த நீதிமன்றக்காட்சி வாஹினி ஸ்டுடியோவில், பிரசாத் மூவிஸின் "இருவர் உள்ள"த்துக்காகப்படமாககப்பட்டன.

டி. கே. ராமச்சந்திரன், சோடா சுப்பையாவாக நடிக்கும் ஏ. கருணாநிதி, ராமராவ் ஆகியோர் சாட்சிகளாக விசாரிக்கப்படுகின்றனர்.

சிவாஜிகணேசன்-சரோஜாதேவி ஜோடியாக நடிக்கும் இப்படத்தில் எம். ஆர். ராதா, பாலாஜி, ரங்கராவ், முத்துலட்சுமி, சந்தியா, லக்ஷ்மிராஜ்யம், ஏ. கருணாநிதி, ராமராவ், பத்மினி பிரியதரிசினி, கே. நடராஜன் ஆகியோர் நடிக்க பிரசாத் டைரக்ஷனில் படப்பிடிப்பு முற்றுப்பெற்றுவருகிறது.

## குளிரில் திண்டாட்டம்!

ஊட்டிக்குச் சென்ற தங்கவேலு அங்கு குளிரில் நடுங்கினுர்.

குளிருக்குப் பயந்து ஒருவீட்டுக்குள் புகுந்தார். அங்கு நின்ற குட்டையான மனிதரிடம் 'யோவ்' உங்க முதலாளியைக் கூப்பிடு என்ருர். அந்த குட்டையான மனிதருக்குக் கோபம் வந்துவிட்டது. 'நான் தான் ஐயா முதலாளி' என்ருர். நல்ல வேளையாக ஜி. சகுந்தலா வந்து சமாதானம்செய்துவைத்தார். இந்தக் காட்சி காட்டு ரோஜாவுக்காக படமாக்கப் பட்டது.

## ஆனந்தனுக்குப் பசி

ஆனந்தன் பசியைத் தீர்க்க துடித்தார் நடிகை சந்திரகாந்தா. சீவிச் சிங்காரித்துக் கொண்டு ஒய்யாரமாகச் சென்ருர்.

நடிகை சந்திரகாந்தாவும், நடிகர் ஆனந்தனும் காதலர். அடிக்கடிசந்தித்துப்பேசி மகிழ்வர்.

ஒருநாள் ஆனந்தனுக்கு நல்ல பசி. சந்திரகாந்தா வருவதனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். சந்திரகாந்தா ஒருவாறு வந்துசேர்ந்தார். நடிகைகையில் உணவுப் பாத்திரமிருந்தது. ஆவலுடன் சாப்பிடச் சென்ருர் ஆனந்தன்.

இப் படப்பிடிப்பு நடிகர் ஆனந்தன் தயாரிக்கும் 'நானும் மனிதன் தான்' என்ற படத்திற்காக சேலம் ரத்னா ஸ்டுடியோவில்நடைபெற்றது. இதில் மற்றும் பாண்டி செல்வராஜ், நாகேஷ், அசோகன், கண்ணன், ஷீலாதேவி ஆகியோர் நடிக்கின்றனர்.

## சிவாஜியைக் கெஞ்சினுர் ராதா

கோடீஸ்வரனாக வந்து குதித்த சிவப்பிரகாசத்திற்கு நகரமக்கள் அமோக வரவேற்பளிக்க ஒரு மாபெரும்விழா நடத்துகின்றனர். அந்தவிழாவுக்கு கண்ணனுக்கும்அழைப்பு அனுப்பப்படுகிறது.

விழாவில், தான் மேனுடுகளிலெல்லாம் சுற்றிக்கொண்டிருந்ததாகவும், நிறைய பொருள் சேர்த்ததாகவும் சிவப்பிரகாசம் அளக்கிருன். விழாவுக்கு வந்திருந்த கண்ணன் மட்டும் உள்ளூர நகைத்துக் கொள்கிருன்.

விழா முடிந்து, சிவப்பிரகாசத்தைத் தனிமையில் சந்திக்கிருன் கண்ணன். அவனைக் கண்டதுமே சிவப்பிரகாசத்திற்கு முகம் அசடு தட்டுகிறது. கண்ணன் "என்னப்பா மாஜி கைதி சௌக்கியமா?" என்றதும் சிவப்பிரகாசம் "அப்பனே! என்னைக் காட்டிக் கொடுத்து விடாதே" என்று கண்ணனின் காலைக்கெட்டியாகப் பிடித்துக் கொள்கிருன். கோடீஸ்வரன் வேஷம்போடும்சிவப்பிரகாசம்.

இந்தக்காட்சி பி. வி. என். புரொடக்ஷன்ஸ் "அன்புள்ள அத்தா"னுக்காக மெஜஸ்டிக் ஸ்டுடியோவில் அண்மையில் படமாககப்பட்டது.

சிவப்பிரகாசமாக எம். ஆர். ராதாவும், கண்ணனாக சிவாஜி கணேசனும் நடித்த மேற்படி காட்சிகள் ப. நீலகண்டன் டைரக்ஷனில் படமாக்கப்படடன.

## சகஸ்ரநாமம் கொடுத்த சவுக்கடி

பழம்பெரும் ஜமீன் தார்பரம்பரையில் வந்தவர் எம். என். நம்பியார் அதற்கான ஜபர்தஸ்துகள் உடையவர். அவர் மகன் கல்யாண்குமார். அவர், தான் காதலித்த பெண்ணை மணக்க அனுமதி கேட்க அப்பெண்ணை தன்முன் அழைத்து வரும்படி ஜமீன் தார்கூறுகிருர்.

தன் மகனின் காதலியான தேவிகாவைக்கண்டதும் ஜமீன் தாரின் கோபம் எல்லை மீறிவிடுகிறது. கேவலம் தன் கீழ் வேலை பார்க்கும் ஒருவனின் (எஸ். வி. சகஸ்ரநாமம்) மகளா இளைய ஜமீன்தாரைக் காதலிப்பது? தன் மகனைக் காதலித்த குற்றத்திற்காக அவளை மரத்தில் கட்டிவைதது சவுக்கால் அடிக்கச் சொல்லுகிருர் அந்த ஜமீன்தார்.

அந்த கொடூரமான வேலையையும் யாருக்கு அளிக்கிருர்? அவளின் சொந்த தந்தைக்கே தான். எஜமான விசுவாசத்திற்குமுன் பாசம் மறைகிறது. தேவிகா மயக்கமடையும் நிலைவரை சவுக்கால் அடிக்கிருர் தந்தையான சகஸ்ரநாமம்.

# கப்பலோட்டிய தேசபக்தன்

ஒரு மணி நேரச் செய்திப் படமாகத் தயாரித்து அரசாங்கத்தால் வெளியிடப்படவேண்டிய 'கப்பலோட்டிய தமிழன்' வரலாற்றைச் சிறிதும் அலுப்புத்தட்டாத முறையில் மூன்று மணி நேரத்துக்கும் மேல் ஓடும் ஒரு சிறந்த திரைப்படமாக பத்மினி பிச்சர்சார்ஸ் அளித்துள்ளனர்.

இந்த நூற்ருண்டில்வாழ்ந்து மறைந்த ஒரு தேச பக்தனின் பாத்திரத்தை ஏற்று வெற்றி காண்பதென்பது சுலபமல்ல, அந்தச் சிரமமான காரியத்தைச் செய்துமுடிக்கக் கூடியவர் சிவாஜி கணேசனைத் தவிர வேறு யார்? வேஷப் பொருத்தம், நடிப்பு, நடை, உடை, அத்தனையும் சிவாஜியை வ. உ. சியாகவே மாற்றிவிட்டன. பாரதியாக எஸ். வி. சுப்பையா நடிக்கிருர். சுப்பையாவைக் காணவில்லை பாரதியையே நம் திரையில் காண்கின்ருேம். சுப்பிரமணியசிவா டி. கே. சண்முகம்; டி கே. சண்முகம் சுப்பிரமணியசிவா. அதற்குமேல் சொல்வதற்கு என்ன இருக்கிறது.

விஞ்ச் துரை ரங்கராவ் சில நிமிஷங்களே தோன்றுகிருர். இருந்தாலும், அவரது வேஷமும் பேச்சும் படமபார்ப்பவர்கள் நினைவில் அவரை நிலைக்க வைத்து விடுகின்றன. அசோகன் தான் கலெக்டர் ஆஷ்! குறைசொல்ல இடமில்லை. வாலிபன் வாஞ்சி பாலாஜி, கச்சிதமாக தனது பாகத்தை நிறைவேற்றுகிருர்.

கண்ணம்மாவாக சாவித்திரியும் மாடசாமியாக ஜெமினி கணேசனும் வருகின்றனர். பொருத்தமான பாகம், காதல் காட்சி போதுமே!

கப்பல் காட்சி கலரில் கண் குளிர காண்பிக்கப்படுகிறது.

விஞ்ச் துரையின் முன்னல் கப்பலோட்டிய தமிழன் சிவாஜி உட்கார்ந்திருக்கும் கட்டத்தில் 'கட்டப்பொம்மனை' காட்டுவது கருத்தமைந்ததாயிருந்தபோதிலும் அதைப் பின்னிய 'டெக்னிக்' நன்ருக அமையவில்லை.

பாரதியாரின் பாடல்கள் பொருத்தமாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

நாட்டுப் பற்ருே, சுதந்திர உணர்ச்சியோ இல்லாதவனுக்குக்கூட அந்த உணர்ச்சியை ஊட்டிவிடக்கூடிய படம் 'கப்பலோட்டிய தமிழன்' ஆதலால் பார்க்கவேண்டிய படம்.

—'தேனீ

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு பங்குனி மீ (17-3-63)

# பெண்களுக்கு அநீதி

சென்ற வாரம் யாழ்ப்பாணத்திலே ஒரு ஜனசமூக நிலையத்தின் ஆண்டு விழா நடைபெற்றது. அங்கு பேசினவர் அனைவரும் ஆண்கள். பரிசு பெற்றவர்களும் ஆண்களே. பெண்களுக்கு இடமே இல்லை!

எந்த ஊரிலும், எந்த நாட்டிலும் ஜனசமூகத்திலே சரிபாதி பெண்களே. ஆனல் ஜனசமூக நிலையம் என்பதின் பெயரால் இங்கு இயங்கும் ஸ்தாபனங்களிலே பெண்களுக்கு ஒரு சிறிது இடமுமிருப்பதாகத் தெரியவில்லை. நாம் இப்படிக் கூறுவதில் தவறு இருக்குமாயின் அதை மகிழ்ச்சியுடன் திருத்திக் கொள்ளுவோம்

ஆண்களும் பெண்களும் ஒரே நிலையத்தில் அங்கம் வகித்து தொண்டாற்றுவது இன்றைய சமூக சூழ்நிலையில் முடியாதிருக்குமாயின், ஆண் சமூக நிலையம், பெண் சமூக நிலையம் என்று தனித்தனியே ஒவ்வொரு ஊரிலும் அமைத்து சேவை புரியலாம். ஆனல் பெண்களை அடியோடு ஒதுக்கிவிட்டு, "ஜனசமூகம்'' என்ற பெயரால் ஆண்களே ஏகபோகமாக, சமூக நல வசதிகளையும் உரிமைகளையும் பெறுவதாயின், அதுபெண்களுக்குச் செய்யும் பெரும் அநீதியாவதுடன், சமூக முன்னேற்றத்துக்கும் பெரும் முட்டுக் கட்டை போட்டுக்கொள்வதுமாகும்.

இலங்கை பார்லிமெண்ட் சபையை எடுத்துக் கொள்வோம். அங்கு சில சிங்களப் பெண்கள் அங்கம் வகிக்கின்றனர். ஒரு பெண்ணே பிரதமராக இருக்கவும் அந்தச் சமூகம் செய்துள்ளது. ஆனல் இதுவரை, அந்தச் சபையில் ஒரு தமிழ்ப் பெண்ணும் இடம்பெற தமிழ் சமூகம் அனுமதி அளிக்கவில்லை. என்றே அரசாங்க சபையில், ஒரு தமிழ்ப் பெண் இடைத்தேர்தல் மூலம் இடம் பெற்றிருந்தால் அதுவும் கொழும்பில் தானேயன்றி தமிழ்ப் பகுதியிலிருந்தல்ல.

பார்லிமெண்ட் சபைக்கு இல்லாவிடினும் யாழ்ப்பாண மாநகரசபைக்காவது ஒரு தமிழ்ப் பெண்மணியை, தமிழ் சமூகம் தெரிவு செய்துள்ளதா? பலபல ஸ்தல ஸ்தாபனங்களிருக்கின்றனவே, அவற்றுக்காவது, பெண்களைத் தெரிவு செய்துள்ளோமா? எங்கோ ஓரிருவர் அபூர்வமாக இருக்கக்கூடும். ஆனல் சமூகத்திலும் வாக்காளரிலும் சரிபாதியாகப் பெண்கள் இருக்கையில், அவர்களுக்கு நியாயமாகவுள்ள பிரதிநிதித்துவத்தைத் தமிழ்ச் சமூகம் மறுத்துள்ளது. இது அநீதியல்லவா? தானே தனக்கு எவ்வளவு அநீதி செய்து கொண்டிருக்கையில் தமிழ்ச் சமூகம் எப்படி முன்னேற முடியும்?

பெண்களது நியாயமான இடங்களையும் பறித்துக்கொண்டுவிட்ட ஆண்கள், வெற்றிகரமாக சமூக முன்னேற்றத்துக்கு நன்மை செய்துள்ளார்களா? இன்று தமிழ்ச் சமூகம் திகைக்கக் கூடிய அவல நிலை அடைந்துள்ளதாயின், பல ஸ்தல ஸ்தாபனங்களிலும் ஊழல்கள் மலிந்து, சுயநல கட்சிப் போட்டிகள் பெருகி, ஊர் அபிவிருத்தியடைய முடியாமல் இருக்குமாயின், அதற்கான பொறுப்பு ஆண் சமூகத்தையே பெரிதும் சாரும்

இந்த நிலை வெகு சீக்கிரத்தில் மாறவேண்டும். பெண்களுக்கு இங்கு சரிசமமாக வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ளது. அவர்களில் அறிவாளிகள் பலருளர். சாதி, மதம் என்ற பிளவுகள் அவர்களைப் பிளவுபடுத்தி பலவீனப்படுத்தியுள்ளது தங்கள் குடும்பங்களுக்காக மட்டுமன்றி சமூக நன்மைக்காகவும் தொண்டாற்ற அவர்கள் முன்வரவேண்டும். ஒற்றுமையாக அவர்கள் முனைந்தால், எந்தச் சக்தியும் அவர்களைத் தடுக்க முடியுமா?

மகாத்மா காந்தியின் தலைமையில் பாரத நாட்டின் விடுதலைப் போரிலே பெண்மணிகள் ஏராளமாகப் பங்குபற்றி செய்த தியாகம் கொஞ்சமன்று. அவர்களது சக்தியை உணர்ந்தே, உரிய இடத்தை அவர்களுக்குத் தந்தார் மகாத்மா. நாடும் விடுதலை அடைய முடிந்தது. இங்கும் தமிழ்ப் பெண்கள் தியாகத்தில் யாருக்கும் பின் வாங்கியவரல்லர். சாதி, மதம் என்ற குறுகிய வேற்றுமை எண்ணங்களையும் சுயநலத்தையும் தியாகம் செய்து, சமூகக் குறைகளை நீக்குவதில் கட்டுப்பாடாக முன்வந்து அவர்கள் தங்கள் கடமைகளைச் செய்வதாயின், சமூக ஒற்றுமை பலப்படவும் நமது பல சிக்கல்களும் தீர்ந்து சமூகமும், நாடும் முன்னேறவும் வழிபிறக்கும். அவர்களுக்கு இழைக்கப்படும் பல அநீதிகளும் தானே நீக்கிவிடச் செய்யும்.

# கொல்ல வல்லாயோ, இசையே!

— வி. என். பி. —

**கணவன். தான் சேமித்து வைத்த சில்லறைகளையும் தனது நகைகளையும் எடுத்துக்கொண்டு போய் ஆர்மோனியப் பெட்டி ஒன்றை வாங்கியதனல் மனமுடைந்துபோன இளம்பெண், தனக்குமேல் பெட்ரோலை ஊற்றிக் கொளுத்தி தற்கொலை செய்துகொண்டாள்.**

— பத்திரிகைச் செய்தி —

கணவனுடைய இசைப் பித்து ஆர்மோனிய ரூபத்தில் வந்து மனைவியைக் கொன்றுவிட்ட இந்தச் செய்தி இசைப் பிரியர்கள் எல்லாரையும் ஒரு கலக்கு கலக்கிவிட்டது. இசையினல் பல அபூர்வமான காரியங்கள் சாதிக்கப்பட்டிருப்பதை நாம் அறிவோம். ஆனல் இவற்றுள் கொலையும் ஒன்றாக வரக்கூடும் என்பதை நாம் கனவிலும் நினைக்கவில்லை. ஆகையால் தான் 'கொல்ல வல்லாயோ! இசையே! கொல்லவும்வல்லாயோ!'என்று பாடத் தோன்றுகிறது.

மேலேயுள்ள செய்தியைப் படித்தபோது இன்னுமொரு சந்தேகம் உதிக்கிறது. அந்தப் பாவிப்பெண் உண்மையில் தனது பொருள் விரயமாக்கப் பட்டதால் உயிர் விட்டாளா, அல்லது தனது கணவன் ஆர்மோனியத்தில் எழுப்பிய இசையைக் கேட்டு சகிக்கமுடியாமல் உயிரை வெறுத்தாளா — என்பது தான் அது. இரண்டாவது காரணமாயிருந்தால், 'கொல்லவும் வல்லாயே, இசையே!' என்று இசையைப் புகழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

இசைக் கிறுக்குப் பிடித்த நாரதரை மஹாவிஷ்ணு தேவலோகத்துக்கு அழைத்துச் சென்றாராம். அங்கே ஓரிடத்தில் மூக்கு அறுந்தவர்களும், செவி இழந்தவர்களும், விரல் ஒடிந்தவர்களுமாய் பல தேவ கன்னிகைகள் இருக்கக்கண்டு, 'நீங்கள் எல்லோரும் ஏன் இப்படி அங்கவீனர்களாய் இருக்கிறீர்கள்' என்று நாரதர் விசாரித்தார். அதற்கு அந்த அழகுத் தேவதைகள், 'ஐயா, பூலோகத்தில் நாரதன் என்று ஒருவன் இருக்கிறனும். அந்தப் படுபாவி அபஸ்வரமாகவும் அபத்தாளமாகவும் இசக்குப் பிசகாக இசைத்துவிடுகிறன். அப்படி அவன் இசையைக் கொலைசெய்யும்போது, ராகத் தேவதைகளாகிய எங்களில் ஒருவருக்கு ஏதாவதொரு அங்கம் பங்கப்பட்டு விடுகிறது; என்று பதில் கூறியதைக் கேட்டுநாரதரின்கர்வம்அடங்கி விட்டதாம். சாம கான நாரதருக்கே இப்படியென்றல் சாமானிய மனிதருக்கு எபபடி இருக்கும்?

இசையால் பல அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன. கைலாசமலையைச் சரித்த இராவணன் உயிர்தப்பியது இசையால்; மாயன் கோபாலன் ஆயர்மகளிரை மயக்கியது இசையால்; சீவகன் எண்ணிறந்த அரசகுமாரிகளை மணந்தது இசையால்; சம்பந்தர் முதலைவாய்ப் பிள்ளையை மீட்டது இசையால்- இப்படி அநேகம். ஆனல் இசையால் கொலை? இதுதான் சரித்திரத்தில் முதலாவது சம்பவம் — நாமறிந்த வரையில்.

சங்கீதக்காரர் - நாவிதர் போல - பரிபாஷை பேசுபவர்கள். ஒருவர் மிகவும் அற்புதமாகப் பாடிவிட்டால், 'ஐயையோ!சபாஷ்! கொண்ணு போட்டாரையா கொண்ணு!' என்று சொல்வார்கள். ஒருவர் தாளத்தையும் ஸ்ருதியையும் [illegible]க்காது பாடினலும் 'கொலை, கொலை' என்பார்கள். இதில் கொலை எது, கொலை அல்லாதது எது என்பது சாமானியவர்களுக்குவிளங்குவதில்லை.

இவ்வளவும் கூறியதால் இசை இனிமேல் கொலைக்கருவியாகக் கூடும் என்று எவரும் கிலேசப்பட வேண்டியதில்லை. சங்கீதத்தால் பயிர்கள் வளர்ந்து கூடுதலான மசூல் கொடுக்கின்றனவாம். தொழிற் சாலைகளில் வேலை செய்பவர்களுக்கு தகுந்த நேரத்தில் தகுந்த இசையை அளித்தால் சுறுசுறுப்பாகவும் கெட்டித்தனமாகவும் வேலை செய்கிறார்கள் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றர்கள். ஏன், எல்லாவற்றிற்கும் மேலாக, இசை ஓர் உயிரைக் காப்பாற்றிய கதை இன்னும் எங்கள் உள்ளத்தில் பச்சையாக இருக்கிறதே!

அதுதான் காதர் பாஷாவின் கதை. காதர் பாஷாவுக்கு மரணதண்டனை விதித்துவிட்டார்கள். 'உன்னுடைய கடைசி விருப்பம் என்ன?' என்று நீதிபதி கேட்டார். 'ஐயா என் ஆர்மோனியத்தில் சற்றுநேரம் வாசித்துப்பாட வேண்டும்' என்றார் காதர் பாஷா. ஆர்மோனியம் வந்தது. காதர் அதை வாசித்துக் கொண்டே, 'சுருளிமலை மீதில் மேவும் சீலா, உன்னைத் தோத்தரித்தேன் சுப்ரமண்ய வேலா' என்று பாடினர். நேரம் போனது ஒருவருக்கும் தெரியவில்லை. நீதிபதி, வக்கீல்கள், பொலிஸ்காரர் - எல்லோரும் இசையில் சொக்கி மயங்கிப் போனர்கள். காதர் பாஷாவின் மரணதண்டனை ரத்துசெய்யப் பட்டது.

மத்திய ஐரோப்பாவில் உற்பத்தியாகி, பாரசீகம் வழியாக இந்தியாவுக்கு வந்துசேர்ந்த ஆர்மோனியப் நம் நாட்டில் வீணைப்பெட்டி, கார்மோனியப் பெட்டி, சரவணைப்பெட்டி என்று பல நாமங்களால் அழைக்கப்படுகிறது. சரவணை என்பது 'ஸெரபின' என்பதன் சிதைவு. கர்நாடக சங்கீதத்துக்கு அதிமுக்கியமான கமகங்களும் நெளிவு குழைவுகளும் இதில் அடித்துப்போட்டாலும் வராது. ஆனலும் நாடகக் காரருக்கும் சினிமாக்காரருக்கும் இது ஓர் இன்றியமையாத தோழன். சங்கீதம் பயிலும் குழந்தைகள் இதன் கட்டைகளில் ச, ரி, க, ம, ப, த, நி, என்று எழுதி வைத்துக் கொண்டு சங்கீதம் பயிலுவார்கள். சில சமயங்களில் காகலி நிஷாதம் கைசிகி நிஷாதமாகப் பேசினல் யாருக்குக் கவலை!

மதுரை மாரியப்பசுவாமிகள், பித்துக்குளி முருகதாஸ் முதலியவர்கள் சிறந்த பாட்டுக் காரர். ஆர்மோனியம் இல்லாவிட்டால் கடலுக்கு வெளியே வந்த மீனைப்போல முழிப்பார்கள். இதனல் ஆர்மோனியத்துக்கு இன்னுமொரு புள்ளி கூடுகிறது.

எது எப்படியானலும்,மேலே சொல்லப்பட்ட செய்தியில் முக்கியகதாபாத்திரமாகவிளங்கும் ஆர்மோனியம் எங்கே, அதை இன்றும் அந்தக் கணவன் வாசிக்கிறனே என்பவை துயரம் தரும் ருசிகரமான கேள்விகள்.

# பொலிஸ் தளபதி வேலையில் பாதிரியார்

நிமிஷத்திற்கு ஒரு பிரச்சினை; அதைத் திறம்படச் சமாளிக்கும் திறமை; இந்தத் தலைவலி தரும் உத்தியோகம் தான் மேற்கு பெர்லின் உள்நாட்டுச் செனெட்டர் பதவி சிலகாலம் பாதிரியாக இருந்து பின்னர் அரசியலில் ஈடுபட்ட ஆல்பெர்ட்ஸ் என்பவரே இப்பதவியைத் திறம்படவகித்து வருகிறார். இவர் அகதியாகக் கிழக்கு ஜெர்மனியிலிருந்து வந்தவர். அமைதியைப் பாதுகாப்பதுடன் மட்டுமின்றி எல்லைச் சுவரைக் காக்கும் பொறுப்பும் இவரைச் சேர்ந்ததே. 15,000 பொலிஸ்காரர்கள் கொண்ட படை இவர் வசம் உள்ளது. இவ்வளவு பொறுப்புள்ள பதவி வகித்தபோதிலும் தீர்மானமான முடிவுகளைச் செய்யும் சுதந்திரம் பெருமளவிற்குக் குறைக்கப்பட்டுள்ளது.

மேற்கு பெர்லின் உள்நாட்டுச் செனெட்டர் பதவி மிகவும் கடினமானது. ஒவ்வொரு நிமிடமும் ஏதாவது ஒரு பிரச்சினை முளைத்துக்கொண்டே இருக்கும். அவைகளைக் கண்டிப்பாகவும் சமயோசிதமாகவும் கையாளவேண்டியிருக்கும். இந்த அரிய பதவியை ஹென்ரீச் ஆர்பெட்ஸ் என்பவர் திறம்பட வகித்துவருகிறார். சோவியத் ஜெர்மனி மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையும் பெரும் தலைவலியை ஏற்படுத்தக்கூடியவையாகவே இருக்கும்.

திரு. ஆர்பெட்ஸ் சட்டத்தையும் அமைதியையும் நிலைநாட்ட வேண்டுமென்பதுடன் முற்றுகையிடப்பட்ட கோட்டையின் தளபதி போன்ற பொறுப்பையும் ஏற்கவேண்டியவராக இருக்கிறார். இவரது ஆதிக்கத்திலுள்ள படையில் 15,000 பொலிஸ்காரர்கள் உள்ளனர். பெர்லினை இரண்டாகப் பிரிக்கும் 30 மைல் நீளச் சுவரைப் பாதுகாப்பதுடன் மேற்கு பெர்லினுக்கும் ரஷ்யாவின் ஆதிக்கத்திலுள்ள பிரதேசங்களுக்குமிடையே உள்ள எல்லையையும இப்படை பாதுகாக்க வேண்டும்.

ஒவ்வொரு நெருக்கடியான நிலைமை ஏற்படும்போதும் ஆர்பெட்ஸ் மூன்று முக்கிய விஷயங்களைக் கவனிக்கவேண்டும். (1) எவ்வளவுதூரம் இதனல் பொதுஜனக் கிளர்ச்சி ஏற்படும். (2) உடனடியாக நேசநாடுகளின் பாதுகாப்புப் படைகளுக்குத் தகவல் தெரிவிக்கப் படவேண்டுமா? (3) உடனடி நடவடிக்கை எடுக்கப் படைகள் தயார்படுத்தப்படவேண்டுமா? என்பன அவை. சுதந்திரம் பறிபோகும் என்ற நிலைமை ஏற்பட்டால் பெர்லின்வாசிகள் கொதித்தெழுவார்கள்.

1956-ல் ஹங்கேரிப் புரட்சியில் ரஷ்யா தலையிட்டதை ஆட்சேபித்து பெர்லின் மக்கள் கொதித்தெழுந்து பிராண்டன்பர்க் வாசல் நோக்கி பொங்கி எழவாரம்பித்தனர். இவர்களை அடக்குவது பெரும்பாடாகி விட்டது.

ஹென்ரீச் ஆல்பெர்ட்ஸுக்கு 48 வயதாகிறது. இவர் ஸைலீஷியாவில் ஒரு பாதிரியாக இருந்தவர். 1945-க்குப் பின் அவர் தீவிரமாக அரசியலில் ஈடுபட்டார். அகதிகளின் நிலைமை அபிவிருத்திக்காக இவர் அரும்பாடுபட்டவர். இவரும் கிழக்கு ஜெர்மனியிலிருந்து அகதியாக வெளியேறி வந்தவர்தான். மேயர் வில்லி பிராண்டுக்கு இவர் ஆலோசகராக இருந்தவர். திரு. லிப்சிட்ஸ் [illegible] இப்பதவியிலிருந்து ராஜினாமாச் [illegible] செய்தபின்னர் இப்பதவியைத் தைரியமாக ஏற்க முன்வந்தவர் ஆர்பெர்ட்தான்.

# உலகமேடை

டி. எம். எம்.

## மத்திய கிழக்கு

மத்திய கிழக்கில் ஜனாதிபதி நாஸர் மீண்டும் உறுதியாகக் காலூன்றி வருவதைப் பார்க்கிறோம்.

ஈராக்கில் ஜெனரல் காசிம் பதவிக்கு வந்தபின், ஜனாதிபதி நாஸரின் செல்வாக்கில் ஒரு தேக்கநிலை ஏற்பட்டது. பின், ஸிரியா ஐக்கிய அராபியக் குடியரசிலிருந்து பிரிந்தபோது அவரது செல்வாக்குக் குறைந்துவிட்டதாகவும், அவரது முன்னேற்றம் தடுக்கப்பட்டுவிட்டதாகவும் அனைவரும் கருதினர்.

வழக்கமாக ராணுவ நடவடிக்கையில் உற்சாகம் கொண்ட நாஸர், ஸிரியா பிரிந்துசென்றபோது அதை முழுமூச்சுடன் நசுக்க முன்வரவில்லை. பெயரளவுக்குச் சிறிய ராணுவநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவாயினும் அதனால் பலன் கிட்டவில்லை. நாஸர் அப்போது மிகவும் விவேகத்துடன் நடந்துகொண்டார். ஸிரியாவை மீண்டும் ஆட்கொள்வதற்கான காலம் வரும்; அப்போது பார்த்துக்கொள்ளலாம் என அவர் கருதியிருந்ததாகவே கொள்ளலாம். ஆயினும் அதற்கான சூழ்நிலையைச் சிருஷ்டிக்கும் நடவடிக்கைகளை நாஸர் நிறுத்தவில்லை. பொறுமையாக இருந்து, புரட்சிக்கான வித்துக்களைத் தெளிக்க அவர் மறைமுகமாகச் செயலாற்றி வந்தார் என்றும் கூறலாம்.

ஏமனும், ஸிரியாவும் பிரிந்த பின்பும் கூட ஐக்கிய அராபியக் குடியரசு என்ற பெயரை அவர் எகிப்து என்று மாற்றவில்லை. ஏனெனில் இந்த ஐக்கியக்குடியரசு வலைக்குள் மற்றும் பல அராபிய நாடுகள் சிக்குவிழும் என அவர் கருதியிருந்தார். "அராபிய ஐக்கியம்" என்ற மந்திரக்கோலை அவர் நன்றாகப் பயன்படுத்தி வந்தார் – வருகிறார்.

இதன் பலனைத்தான் இப்போது பார்க்கிறோம். ஸிரியா, ஈராக், ஏமன், அல்ஜீரியா, ஐக்கிய அராபியக் குடியரசு ஆகிய ஐந்து நாடுகளும் இப்போது நாஸர் துதி பாடுகின்றன. இந்த நாடுகள் அனைத்தும் ஐக்கிய அராபியக் குடியரசில் சேரும் எனச் சொல்ல வரவில்லை. சேர்ந்தாலும் சேராவிட்டாலும் அரசியல், ராணுவ லக்ஷ்யங்களில் அவைகள் ஏகோபித்த கருத்துக்கொண்டிருக்கின்றன என்பதே முக்கிய விஷயம். அதாவது, நாஸரின் கொள்கைகளை அவைகள் பின்பற்றத்தயாராய் இருக்கின்றன. ஜனாதிபதி நாஸர் அராபிய ஐக்கியத்தின் சின்னமாகக் கொள்ளப்பட்டிருக்கிறார். இந்த நிலை மத்திய கிழக்கின் இதர நாடுகளுக்கும் இப்போது அதிர்ச்சியை மூட்டியிருக்கிறது. குறிப்பாக ஸாவூதி அராபியா, ஜோர்டான் ஆகிய நாடுகளின் முடியாட்சிக்கு இது பெரும் அபாயமாக விளங்குகிறது.

நாஸரின் செல்வாக்குக்கு உட்படாத அரசாங்கங்களைக் கொண்ட மத்திய கிழக்கு நாடுகளிலும் கூட, நாஸர் ஆதரவுச் சக்திகள் செயல்படுகின்றன. இந்தச் சக்திகளுக்கு இப்போது புதிய தெம்பு ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய அராபியக் குடியரசு, ஸிரியா, ஏமன், ஈராக், அல்ஜீரியா ஆகிய நாடுகளின் பெருந்தலைவர்கள் மகாநாடு ஒன்றை நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவைகள் ஒன்று கூடும்போது தங்களது ஏகோபித்த லக்ஷ்ய அடிப்படையை உறுதியாகப் பிரகடனம் செய்யும் என்பதில் சந்தேகமில்லை. மத்திய கிழக்கின் தலைவிதியை மாற்றியமைக்க, தங்கள் இரகசியத் திட்டங்களையும் அவைகள் வகுக்கக்கூடும்.

மத்திய கிழக்கின் தலைவிதியை நிர்ணயிக்கும் சக்தியை இப்போது ஜனாதிபதி நாஸர் பெற்றிருக்கிறார். மத்திய கிழக்குக்குத் தேவையானது நாஸரின் கொள்கைகளே என்பதை இவ்வறைய நிலைமை தெளிவாக்குகின்றன. அங்கு முடியாட்சி நீண்டகாலம் பத்திரமாக இருக்கமுடியாது என்பதையும் இவை உணர்த்துகின்றன. இப்பகுதியில் சிரத்தையுள்ள மேல்நாடுகளும் இதை உணர்ந்துள்ளன. இதற்கிடையில் தம் நாட்டின் மீது ஐக்கிய அராபியக் குடியரசு படையெடுக்கக்கூடும் என ஸாவூதி அராபியமன்னர் இபன்ஸாவூத் அஞ்சுகிறார் அமெரிக்கத் துருப்புக்களை நிரந்தரமாக அராபிய மண்ணில் நிறுத்துமாறும் ஜனாதிபதி கென்னடியை அவர் வேண்டியிருக்கிறார்.

ஆனால் ஸாவூதி அராபியா மீது ராணுவத தாக்குதலைத் தாம் ஒருபோதும் நடத்தப்போவதில்லையென ஜனாதிபதி நாஸர் ஐ. நா. மூலம் உறுதியளித்துள்ளார். எனவே அமெரிக்கத் துருப்புக்கள் அங்கு அனுப்பப்படவேண்டிய அவசியமில்லை என ஐ. நா. கருதுகிறது. இதை அமெரிக்காவுக்கும் அது தெரிவித்திருக்கிறது. அமெரிக்கத் துருப்புக்கள் அராபியாவில் இருக்குமானால் முடியாட்சியை அது பலப்படுத்தவே உதவும். இந்நிலையில் உள்நாட்டுப் புரட்சி ஒன்றுக்கு வழி அமைப்பதும் சாத்தியமல்ல. ஸாவூதி அராபியாவிலுள்ள நாஸா ஆதரவுச் சக்திகள் இதனால் பலமிழந்துவிடும். எனவே, மத்திய கிழக்கில் பரவிவரும் சூறாவளி இந்த நாட்டிலும் பரவாமல்போகாது. அப்போது பார்த்துக்கொள்ளலாம்" என நாஸர் கருதியிருந்தால் அதில் அதிசயம் எதுவுமில்லை. ஈராக்கை - ஏமனை - ஸிரியாவை - வீழ்த்திய அதே சக்திகள், ஸாவூதி மன்னரையும் வீழ்த்தாமல் போகாது என நாஸர் அபிப்பிராயம் கொண்டிருக்கக்கூடும்.

எனவேதான் அனுவசியமாக அங்கு அந்நிய ராணுவத் தளம் எதுவும் ஏற்படுவதைத் தவிர்க்க ஐக்கிய அராபியக் குடியரசு துரிதமாகச் செயல்பட்டிருக்கிறது. மத்திய கிழக்கு சூறாவளி எப்படி வீசுகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

★

## மலேஸியா

மத்திய கிழக்கில் 5 நாடுகள் ஒன்றாக அணிவகுத்து நிற்கும் நிலையில், தென் கிழக்கில் 5 பிரதேசங்களை ஒன்றாக்கும் முயற்சிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. மலாயா, சிங்கப்பூர், வடபோர்னியோ, ஸரவாக், புருணி ஆகிய பிரதேசங்களைக்கொண்டு அமையவிருக்கும் "மலேஸியா"வுக்கு ஏற்பட்டுள்ள சவாலின் சக்திகள் இப்போது குறைந்து வருவதாகத் தோன்றுகிறது. இந்தோனேஷியாவும், பிலிப்பைன்ஸும் இந்த அமைப்புக்கு விரோதமாய் இருக்கின்றன. குறிப்பாக இந்தோனேஷியா இதைத் தடுக்க ராணுவ நடவடிக்கையில் இறங்கப்போவதாயும் பயமுறுத்தி வந்தது. மலாயாவிலுள்ள எதிர்க்கட்சிகளும் பிரதமா துங்கு ரஹ்மானின் திட்டத்துக்கு மாறாய் இருக்கின்றன. மலேஸியாத் திட்டத்தை உடைத்தெறிய வேண்டுமென்பதே ஆசியக் கம்யூனிஸ்டுகளின் நோக்கமாகும். ஆனால் திட்டமிடப்பட்டதற்கு 50 நாட்களுக்கு முன்பே புதிய மலேஸியாவை அமைத்துவிடப்போவதாய் துங்கு ரஹ்மான் பார்லிமெண்டில் அறிவித்திருக்கிறார்.

மலேஸியாவை அமைக்கும் விஷயத்தில் இந்தோனேஷியா சண்டையில் இறங்கும்பட்சத்தில், பிரிட்டனும், ஆஸ்திரேலியாவும் மலாயாவுக்கு ராணுவ உதவி அளிக்க முன்வந்திருக்கின்றன. எனவே, இந்தோனேஷியா தனது பயமுறுத்தலைச் செயலில் காட்டுமா என்பதே கேள்வி. எதுவாயினும் இப்பகுதியில் ராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் அது பெரிய ஒரு நெருக்கடியாக இருக்கும். அதேசமயம் கூட்டாட்சியை அமைக்கும் வேலைகள், சகல எதிர்ப்புக்களின் மத்தியிலும் வேகமாக நடைபெற்று வருகின்றன.

★

## குருஷ்சேவுக்கு அழைப்பு

கம்யூனிஸ்ட் நாடுகளிடையே ஏற்பட்டுள்ள கொள்கை வித்தியாசத்தையும் பிளவையும் அகற்றி ஒரு சமரசத்திற்கு முயல்வதற்காக திரு. குருஷ்சேவையும், இதர உயர்தர ரஷ்யத் தலைவர்களையும் சீனா அழைத்திருக்கிறது. பீக்கிங்குக்கு வருமாறு விடுக்கப்பட்ட இந்த அழைப்பை ரஷ்யா ஏற்றுக்கொண்டது பற்றி இன்னும் தகவலில்லை. சீனாவிலுள்ள ரஷ்ய ஸ்தானிகருடன் சீனத் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்தியபின் இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

குருஷ்சேவ் இந்த அழைப்பை ஏற்று பீக்கிங்குக்கு வருவாரா, அல்லது சீனத்தலைவர்களை மாஸ்கோவுக்கு அழைப்பாரா என்பதுதெரியவில்லை. எதுவாயினும், தன்னுடைய கொள்கையை ரஷ்யா விட்டுக்கொடுக்காது என்பதில் சந்தேகம் இருக்கமுடியாது. பெரும்பாலான கம்யூனிஸ்ட் நாடுகள் தன்னையே பின்பற்றுவதால் சீனாவைத் தாஜாசெய்யும் விஷயத்தில் குருஷ்சேவ் இறங்கமாட்டார் எனபதும் நிச்சயம்.

சீனாவின் உள்நாட்டு நிலைமை க்ஷீணமடைந்து வருவதற்கான அறிகுறியாகவும் இந்த அழைப்பைக் கணிக்கலாம். ரஷ்யாவின் உதவியின்றி சீனாவின் முன்னேற்றம் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்நாட்டுக்குப் பொருளாதார, தொழில்நுட்ப உதவியளிக்கும் நூற்றுக்கணக்கான ஒப்பந்தங்களை ரஷ்யா வாபஸ் பெற்றுக்கொண்டுவிட்டது. இதனால் பொருளாதார முன்னேற்றம் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. தலைவர் மாவோ-துங்கின் "கம்யூன்" முறையால் விவசாய உற்பத்தியும் வீழ்ச்சியடைந்து, பல சீன மாகாணங்களில் பசியும், பட்டினியும் தாண்டவமாடுகின்றன.

எவ்வளவு நாளைக்குத்தான் வீம்புடன் தனியாக ஒதுங்கியிருக்கமுடியும்? எனவேதான் கம்யூனிஸ்ட் நாடுகளுடன் சமரச முடிவுக்கு வர, சீனா விரும்புகிறது. ஆனால் தனது தனிப்பட்ட கொள்கையை அது விட்டுக்கொடுக்கும் என்பதற்கான அறிகுறிகள் இன்னும் தென்படவில்லை.

## பூஜ்யம் தபால்

### குருஷ்சேவ் அவர்கள், பிரதம மந்திரி, மாஸ்கோ-ரஷ்யா.

தலைவரே!

தாங்களும் சீனத்து மாமா மோசேதுங்கும் 'உச்சி மகாநாடு' கூடிப்பேசப்போவதாகக் கேள்விப்பட்டேன். மிகவும் சந்தோஷம். பாருங்கள் சென்ற சிலகாலமாக தங்களுக்கும் மோ மாமாவுக்கும் வேற்றுமை ஏற்பட்டு, அது சந்திசிரிக்கவும் ஆரம்பித்தது என்னால் வேதனை தாங்கவில்லை. தாயும் தகப்பனும் சண்டையிட்டால், குழந்தைகளுக்கு எப்படி இருக்கும்? அதுபோல் நீங்கள் இருவரும் சச்சரவிட்டது, எனக்கும் என் தோழர்களுக்கும் வெளியில் சொல்லமுடியாதபடி அவ்வளவு வெட்கமாக இருந்தது. வாய்ச்சண்டை கைச்சண்டையாக மாறிவிடுமோ என்று கூட அஞ்சினேன். நல்லவேளையாகத் தாங்கள் 'உச்சி' என்றதும், மோ மாமாவும் "ஓம்" என்று விட்டார்.

நீங்கள் இருவரும் இனி எங்கே கூடிப்பேசப் போகிறீர்கள்? பீக்கிங்கிலா மாஸ்கோவிலா? தாங்கள் 'கம்போடியாவுக்குச் செல்லும் வழியிலே' பீக்கிங்குக்கு வந்துபேசும்படி மோ மாமா கூறுகிறார். கம்போடியாவுக்குத் தாங்கள் செல்லப் போகும் சமாச்சாரத்தை தாங்கள் பரம ரகசியமாக வைத்திருந்தீர்கள். கம்போடியாவும் ஒன்றும் கூறவில்லை. அப்படியிருந்தும், மோ மாமாவுக்குத் தங்கள் ரகசியமெல்லாம் எவ்வளவு தூரம் தெரிந்திருக்கிறது பார்த்தீர்களா? அவரை மட்டும் இலேசுப்பட்ட ஆள் என்று நினைக்காதீர்கள். பலே பேர்வழி. முன்னர் 'ஜெங்கிஸ் கான்' என்று ஒருவர் இருந்தாரல்லவா? அவரே சாட்சாத் மோசேதுங் மாமாவாக இப்போது அவதரித்திருப்பதாக இங்கு பலர் கருதுகிறார்கள்.

அவரும் பாருங்கள் ஒரு மனிதர் தானே! தாங்கள் அமெரிக்க கென்னடியுடன் புதுஉறவு கொண்டாடி, விருந்து சாப்பிடுவதைக்காண அவருக்கு எப்படியிருக்கும். ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்திலும் அவரைச் சேர்க்காதிருக்கையில், தாங்கள் மட்டும் அங்கும் சேர்ந்து பெரியாராகிவிட்டீர்கள்! எவ்வளவு காலம் தான் அவரும் பொறுமையுடன் காத்திருப்பார்? கலகம் செய்தால்தான் நியாயம் பிறக்கும் என்றுகருதி, இந்தியாவைத் தாக்கஆரம்பித்தார். கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது போல், பிரெஞ்சு கம்யூனிஸ்ட் மாமி உட்படதாங்களும் மற்றும் பல தங்கள் தோழர்களும் சேர்ந்து மாமாவை இதற்காகக் கண்டிக்க ஆரம்பித்ததும் அவருக்கு ஆத்திரம் வராமல் இருக்குமா? அமெரிக்காவையும் இந்தியாவையும் மட்டுமன்றி தங்களையும் தங்கள் தோழரையும் திட்ட ஆரம்பித்துவிட்டார்.

பழந்தின்று கொட்டை போட்ட தங்களுக்கு இதெல்லாம் தெரியாமலா இருக்கும்! அதனால் மோ மாமா ஆத்திரத்தில் என்ன திட்டினாலும் தாங்கள் பதில் ஒன்றும் பேசாமல் பெருந்தன்மையுடன் மௌனம் சாதித்து வந்திருக்கிறீர்கள். இரண்டு கையும் தட்டினால்தானே சத்தம்! பலே!

தாங்கள் பீக்கிங்குக்குப் போனாலும் சரி, அல்லது மோ மாமா மாஸ்கோவுக்கு வந்தாலும் சரி, தாங்கள் ஒரு முக்கிய விஷயத்தை அவருக்குக் கூற வேண்டும். நேருவைக் கண்டபடி திட்டிக்கொண்டே, அவருடன் நேரில் பேசவேண்டுமென்கிறார் மோ மாமா. நேருவுடன் உண்மையில் பேசவிரும்பினால், பீக்கிங் ரேடியோமூலம் வசைபாடுவதை சற்றே நிறுத்தச் சொல்லி மாமாவுக்குப் புத்தி கூறுங்கள். இன்றுள்ள நிலையில் மோ மாமாவுடன் எவ்வளவுதான் கரடியாகக்கத்தினாலும் நேரு அவருடன் நம்பிக்கையுடன் பேசமுன்வரமாட்டார். ஆகவே தாங்கள் முதலில் மாமாவுடன் மீண்டும் நட்புக்கொண்டு, பிறகு, நேருவுள்ளிட்டு நீங்கள் மூவரடங்கிய 'உச்சி' மகாநாட்டைக் கூட்ட முற்படுங்கள். அது கைகூடினால் ரஷ்யா-இந்தியா-சீனா இம்மூன்று நாடுகளிடையேயும புதிநட்பு ஏற்படக் கூடும். அதன பிறகு, மெதுவாகத் தங்கள் புதியநண்பரான கென்னடியையும் கூட்டி நால்வர் அடங்கிய உச்சியைக் கூட்டி, மனம்விட்டுநேரில்பேசி, வேற்றுமைகளைத் தீர்த்துக் கொண்டால், உலகத்துக்கே புதியசகாப்தம் ஏற்படவு கூடும்.

இதெல்லாம் வெறும் பகற்கனவு என்றுதானே நினைக்கிறீர்கள். நான் அப்படிக் கருதவில்லை. சீனத்துக்கும் அமெரிக்காவுக்கும் பொது நண்பனாகிவரும் தாங்கள், உண்மையில் உலக சமாதானத்துக்கு முயன்றால், அது வீண்போகாதென்பதே என் நம்பிக்கை.

இப்படிக்கு,
பூஜ்யம்.

குறிப்பு:

மன்னிக்கவேண்டும். மார்க்ஸ்-லெனின் பல்லவியைத் தங்களுக்குப் பதில் இப்போது சீன மாமாவிடாமல் பாடுகிறார். அந்தப் பல்லவியைத் தாங்கள் மாற்றிக் கொண்ட காரணமென்ன? அதைவிட மேலான ராகம் உள்ளதென்பதைத் தாங்கள் உணர்ந்துவிட்டீர்களா? எப்படியும் வெறுப்பு, பலாத்காரம் இவற்றால்தான எதையும் சாதிக்கலாமென்ற கருத்தை மகாத்மா காந்தி தகர்த்து, அன்பாலும் அகிம்சையாலும் இந்தியா, இலங்கை முதலிய நாடுகளுக்கெல்லாம் அரசியல் விடுதலையை உலகமே அதிசயிக்கும் வகையில் பெற்றுத்தந்தார். அரசியல் விடுதலையைப் பெற்றுத் தந்த அன்பும் அகிம்சையும், பொருளாதார விடுதலையை உலக மக்களுக்குப் பெற்றுத்தர முடியாதா? இதைத் தாங்களும் சிந்தித்து, மோ மாமாவை நேரில் சந்திக்கையில் அவருக்கும் மனதில் படும்படி கூறுங்கள். நம் கடமையை நாம் செய்வோம். பலன் எப்படியானாலும் சரி எங்கள் கண்ணனும் இதைத்தான் கூறினர்.

"பூ"

## புதன்கிழமை பாக்கு நீரிணையைக் கடப்பார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சட்டகல்லூரி மாணவரான திரு. வி. எஸ். சி. ஆனந்தன் (19-வயது) பாக்கு நீரிணையை வருகிற புதன் கிழமை நீந்திக் கடக்கும் முயற்சியில் இறங்கவிருக்கிறார். வல்வெட்டித்துறை துறைமுகத்திலிருந்து ஆனந்தனின் நீச்சல் புதனகிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும். இதற்கான ஏற்பாடுகளை சனசமூகசேவா நிலையம் செய்து வருகிறது.

தமிழ் வளர்த்த சான்றோர்கள்: 8

# "தோலா நாவின் மேலோன்" சுன்னுகம் குமாரசாமிப் புலவர் அவர்கள்

— வித்துவான் க. வேந்தனுர் —

எச். எஸ். ஸி. வகுப்பில் பயிலும் மாணவர்களுக்குப் பயன் தரத்தக்க முறையில் 'தமிழ் வளர்த்த சான்றோர்கள்' என்ற வரிசையில் தமிழ்ப் பேரறிஞர்கள் சிலரைப்பற்றிய கட்டுரைகள் இங்கு தொடர்ந்து வெளிவரும்.

அழுத்தப் படிப்பும் ஆராய்ச்சித்திறனும் பழுத்த பாவின்மையும் பன்னூற்புலமையும் படைத்த தவப்பெருந்தோன்றல், சுன்னுகம் குமாரசாமிப் புலவர் என்பது தமிழ் கூறு நல்லுலகச் சான்றோர் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதோர் உண்மையாகும். இவர் தண்ணர் தமிழ்ச் சான்றோர் வாழ் சுன்னுகம் என்னும் ஊரில் சைவவேளாண் குலத் தோன்றலாகிய அம்பலவாணபிள்ளையின் அருந்தவப் புதல்வர். தமிழ்ப் பெரும் புலவராகிய உடுவில் முத்துக்குமார கவிராயர் இவரின் பாட்டனாராவார். இங்ஙனம் தமிழ்ப் புலமை சான்ற சைவப் பெரும் பரம்பரையில் தோன்றிய தவத்திருவும், சால்பும் புலவரவர்களின் நுண்மாண் நுழைபுலத் திறத்துக்கும் தன்னேர் இல்லாத் தமிழ் அறிவுக்கும் ஒழுக்கச் சிறப்புக்கும் உறுதுணையாக விளங்கின. பள்ளிப் பருவம் முற்றியபின் தமிழ்ப்புலமை அடைதற் பொருட்டு அக்காலத்தில் தனக்கு நிகர் தானே விளங்கிய தமிழ்ப்பேராசிரியர் முருகேச பண்டிதரிடம் சென்று இலக்கண இலக்கியங்களை ஆராய்ந்து ஆர்வமுடன் கற்ருர்.

இங்ஙனம் கற்றுத் தேறியதுடன் கவிபாடும் புலமையும் பெற்றுப் பொலிந்தார். இயற்றமிழ்ப் புலமையில் தமது இளமைக்காலத்திலேயே ஈடும் எடுப்புமின்றி விளங்கிய புலவர் அவர்கள் வடமொழிப் புலமையில் வல்லமை வாய்ந்த நாகநாத பண்டிதரிடம் சென்று கற்றதன் பயனுல் வடமொழிப் புலமையிலும் மிக்கு விளங்கினுர். வடமொழியில் உள்ள காவியங்களைத் தமிழில் மொழிபெயர்த்துப் பாடக்கூடிய வல்லமைப்பாடு புலவர்க்கோர் நல்வியல்பாக அமைந்துவிட்டது. அவர் உள்ளம் வடமொழிக் கடலையும் தென்தமிழ்க் கடலையும் நிலைகண்டு தெளிந்து நெஞ்சுவப்பதோர் கலையார்வம் கொண்டு அலைமோதியது. அவ்வலைமோதுதலின் ஆர்வத்தால் அவர் வடமொழியில் இருந்து தமிழில் மொழிபெயர்த்துப் பாடிய கவிதைகள் மிகப் பொருட்கரு உடையனவாகவும் புலவர் உளத்துக்கோர் புதுவிருந்தாகவும் இருந்தன.

முந்தேறு கிருதயுக பூபதிமாந்
தாதாவு
முடிந்து போனுன்
நந்தேறு கடலடைத்த செய
ராமச் சந்திரனு
நடந்து விட்டான்
வந்தேறு குருகுலத்துத் தரு
மன் முதன் மகிபரெலா
மாய்ந்து போனுர்
அந்நேரவிங் கிவரொடும்
போகாதபுவி நின்ளெருதா
ளடையு மையா

எனும் இச்செய்யுள் அவர் மொழிபெயர்த்துப் பாடியவற்றுள் ஒன்ருகும். இதன்கண் அமைந்துள்ள ஓசை எழுச்சியும் உணர்ச்சிப் பெருக்கும் பொருள் வளமும் புலவர் அவர்களின் பாவன்மையையும் முதனூற் பொருள் சிதையாது மொழிபெயர்த்து அளிக்கும் மொழி ஆற்றலையும் காட்டுகின்றன.

இங்ஙனம் இவர் புலமை வீறு படைத்தவராய் விளங்குதலைக் கண்டும் கேட்டும் களித்த தமிழ்த் திருவாளர் சவை. தாமோதரம்பிள்ளை அவர்கள் தம்மால் ஏழாலையில் நிறுவப்பட்ட தமிழ்ப்பாடசாலையில் ஆசிரியராக வீற்றிருந்து தமிழ்ப்புலமை நடாத்தும் வாய்ப்பை நல்கினுர். இதனுல் புலவரவர்களின் தமிழ் ஆற்றலில் கலந்து புலமைப் பண்பு வாய்ந்தவர் பலராவர். வித்துவான் சிவானந்த ஐயர், பாலசுப்பிரமணி ஐயர், மாணிக்கத் தியாகராச பண்டிதர் முதலியோராவர். பின்னர் 1902-ம் ஆண்டிலே ஆறுமுகநாவலரவர்களால் நிறுவப்பட்ட வண்ணர் பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் தலைமையாசிரியராக வீற்றிருந்து தமிழ்ப் புலமை நடாத்தினுர். அப்பொழுது அப்பாடசாலையில் ஓர் காவியப் பாடசாலையும் நிறுவப்பட்டது. புலவரவர்கள் வடமொழியிலும், தென்மொழியிலுமுள்ள சிறந்த காவியங்களைப் பல மாணவர்களுக்குக் கற்பித்து வந்தார்கள். காவியப் பாடசாலையில் புலவரவர்களிடம் கற்ற மாணவர்களுள் பண்டிதர் வ. மு. இரத்தினேஸ்வர ஐயர், தென்கோவை வேதாரணிய தேசிகர், நல்லூர் கா. குருமூர்த்தி ஐயர், மட்டுவில் பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை, மட்டக்களப்புப் பண்டிதர் ஏ. பெரியதம்பிப்பிள்ளை முதலியோர் மிகச் சிறந்த புலமையாளராய் விளங்கினர்.

இங்ஙனம் வடமொழி, தென்மொழிக் கல்வியில் வல்லமை படைத்தவராய்ப் பன்னூற்றுக் கணக்கான தமிழ்ப் பண்டிதர்களைப் படைத்துத் தமிழ்த் தொண்டு ஆற்றியவராய் இலக்கண மதிவளமும், ஆராய்ச்சிக்கட்டுரைகள் புனையும் ஆற்றலும் படைத்தவராய் விளங்கிய புலவரவர்களின் புகழ் தமிழகத்திற்கும் எட்டியது. சிறிமான் பாண்டித்துரைத் தேவர் அவர்களால் மதுரையில் நிறுவப்பட்ட தமிழ்ச்சங்கத்தில் ஓர் உறுப்பினராக வீற்றிருந்து தமிழ்த்தொண்டாற்றிய சிறப்பு புலவரவர்களுக்கே உரியதாகும். புலவரவர்கள் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து தமிழ்த்தொண்டாற்ற உடன்பட்டமையைக் குறித்து தமது உவகைப் பெருக்கைப் பாண்டித்துரை அவர்கள் கடிதம் மூலம் புலவரவர்களுக்கு அறிவித்துள்ளார்.

மதுரைத் தமிழ்ச் சங்கம்
29-11-62.

ஐயா,

தாங்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் கல்வியங்கத்தினருள் ஒருவராய் அமர்ந்து செந்தமிழ்ப் பாஷாபிவிருத்திக்கு வேண்டுவனவற்றைப் புரிதற்கு மனமுவந்துவர விடுத்துக் கொண்ட சம்மதப் பத்திரிகையைக் கண்ணுற்றுப் பெருமகிழ்ச்சியடைந்தேன். இவ்வாறு அன்புகூர்ந்து மனமுவந்து வாக்குதவிய தங்கட்கு அநேக வந்தனம் அளிக்கின்றேன்.

இங்ஙனம்
பாண்டித்துரை.

இக்கடிதத்தைப் படிக்குந்தோறும் எமதுள்ளத்தில் புலவரவர்கள் தேடி எமக்கு வழங்கிய பெருமையின் அருமைப்பாட்டை எண்ணியெண்ணி இன்பம் அடைய வேண்டியவர்களாகின்றோம். மதுரைத் தமிழ்ச் சங்கத்தினரால் வெளிப்படுத்தப்பட்ட செந்தமிழ் என்னும் திங்கள் வெளியீட்டைப் புலவரவர்களின் ஆராய்ச்சிக்கட்டுரைகள் அணிசெய்தன.

புலவரவர்கள் மிகமிக நுட்பமான புலமையுள்ளம் படைத்தவர்கள். சொற்களை வரையறுத்துப் பிழையின்றி எழுதுவதில் தமக்கே தான் இணையாக விளங்கினுர். ஏடுகளில் இருந்த தமிழ்நூல்களைப் பிழையின்றி அச்சேற்றி அளிக்கும் ஆற்றல் வாய்ந்தவர். பிறர் விடும் பிழைகளை எடுத்துக் காட்டி அவர்களைத் திருத்துவதுடன் அமையாது தமிழ்மரபையும் பேணும் சான்ருண்மை மிக்கவர். தாம் பல ஆண்டுகள் அரிதின் முயன்று ஆராய்ந்த நுண்பொருள்களையெல்லாம் தம்மிடம் கற்கும் மாணவர்க்கு வஞ்சனையின்றி வாரிவழங்கும் வண்மையாளர். இவரின் உரைநடை எதுகை, மோனை, தொடை சிறப்புடையதாய் நக்கீரனின் உரைநடையாய் நவில்தொறும் இன்பம் பயக்கும் இயல்புடையது.

"இப்புலவர் சரித்திரத்தை இனிது நோக்கிப் பெரிது மதித்துப் பெருந்தொகைப் பொருளுபகாரம் செய்த பெருமையாளரும் ஒருவருளர். அவரோ ஒரு சாமானியரல்லர். உத்தம புருடர்களுக்குள்ளே உத்தம புருடர். அரும்பொருட் கலையுணர்வும், பெரும்பொருள் வருவாயும், பரம்பொருட் பக்தியும், திரம்பெறு புத்தியும், வரப்பிலவாக் கொடையும், விஜய வீரியாதிச் சகல சுகுணங்களும் பரம்பரையாக நிரம்பப்பெற்றுச் செந்தமிழ்ப் பரிபாலனமும், சைவ பரிபாலனமுஞ் செய்துவந்த சேதுபதியரசர் திருமரபினர். அவர்கள் போலக் கலையுணர்வும், பொருள்வருவாயும், புத்தியும், பக்தியும், கொடையும் பிறவும் நிரம்பப்பெற்று செந்தமிழ்ப் பரிபாலனமும், சைவ பரிபாலனமும் செய்துவரும் சீமான். செந்தமிழபிமானியும், சித்தாந்த சைவப்பிரசங்க சிங்கமும், பெருங் கொடைவள்ளலுமாய் விளங்கிய பாஸ்கர சேதுபதி மஹாராஜாவின் பெரும் புதல்வர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் அக்கிராசன முதல்வர். சந்தத் தெளிக்கும் கலைவாணர். சங்கத் தமிழ்க் குருகிச் சித்தங் களிக்கும் திருவாளர் ராஜராஜேசுவர சேதுபதியரசர் எனப் புலவர் பாடும் புகழாளர்.

(தமிழ்ப் புலவர் சரித்திரம்—உத்திரமணிகை. பக். 21)

இங்ஙனம் எல்லாம் புலவர்களாலும், புரவலர்களாலும் போற்றி மதித்துப் புகழப்பட்ட பெரும்புலமை வள்ளலாகிய புலவரவர்கள் ஆக்கிய நூல்கள் தமிழ்மொழியை அணிசெய்கின்றன. தமிழ்ப்புலவர் சரித்திரம் (1916) கம்பராமாயணம், பாலகாண்டம், அரும்பத உரையும் விளக்கமும் (1918) வதுளைக் கதிரேசன் பதிகம் (1884) மிலேச்ச மதவிகற்பக்கும்மி (1888) சிசுபால சரிதம் (1925) இராமோதந்தம் (1929) மேகதூதக்காரிகை (1896) யாப்பருங்கலக் காரிகை, புத்துரை, வினைப் பகுபத விளக்கம் (1912) தண்டியலங்காரப் புத்துரை (1904) இலக்கியச் சொல்லகராதி (1914) சாணக்கிய நீதி வெண்பா (1914) இதோபதேசம் (1922) முதலிய நூல்கள் புலவர்பெருமானின் கல்வியின் அகலத்தையும் ஆராய்ச்சி வன்மையையும், உள்ளத்தெளிவையும் உணர்த்துகின்றன.

இங்ஙனம் தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் தமிழ்ப்பணிக்கே வழங்கி வாழ்ந்த புலவர் அவர்களின் வரலாறு விரிவாக ஆராய்ந்து எழுதப்படுமாயின் ஈழத் தமிழகத்தின் தமிழ்ப் பரம்பரை வரலாருக விளங்கும். டாக்டர் சுவாமிநாதையர் அவர்கள் எழுதிய மீனுட்சிசுந்தரம்பிள்ளை சரித்திரம் பதினெட்டாம் நூற்ருண்டு தொடக்கம் தமிழகத்தில் நிலைபெற்ற புலமைப் பரம்பரையைப் புலனுக்குவது போலக் குமாரசாமிப் புலவர் அவர்களின் வரலாறும் ஈழத் தமிழகத்திற்கும், இந்தியத் தமிழகத்திற்கும் உள்ள புலமைத் தொடர்பையும், ஈழத் தமிழகத்தார் இன்றுவரையும் தமிழுக்காற்றிய தனிப்பெரும் பணிகளையும் புலனக்கும் என்பதற்கோ ஐயம் இல்லை. இப்பெரும் பணியில் ஈழநாட்டுத் தமிழறிஞர்கள் ஈடுபட்டுழைக்கும் நன்னளை எதிர்காலத் தமிழகம் காணவேண்டும்.

பூமியின் வரலாறு I

# கல்லாக உறைந்த எரிகோளம் மண்ணுக மாறிய விந்தை

— தெல்லியூர் செ. நடராசா —

கமத்தொழிலுக்கு ஆதாரமாக – கமக்காரரது மூலதனமாக இருப்பது மண். ஆண்டாண்டாக மண்ணிலே புரண்டு விளையாடுகின்ருேம்–தொழில் செய்கின்ருேம். எங்களை வளர்த்து பெரியவர்களாக்குதற்கு இந்த மண் உதவும் செயல்கள் அநந்தம் அந்த மண்ணைப்பற்றிய வரலாறு ஒரு பெரும் புதுமை........

மண். வெறும்மண். பூமியின் மேற்பரப்பிலே அதிகமாக, காற்று நீங்கலாக மிக அதிகமாக காணப்படுவது வெறும்மண். பூமியின் மேல் பரப்பிலே அடுக்கடுக்காக வெவ்வேறு படைகளாக மண் மண்டலம் பல அடி ஆழத்துக்குப் பரந்து கிடக்கின்றது. வாயுபேத இயல்புகளால் - காற்று, மழை, உட்டணத்தால் உறைபனியால் தாக்குண்டு, படிப்படியாக உருமாறி அழிந்து மாறிவந்தபாறைகளது அணுத் திரள் தான் மண். இந்த மண்ணின் ஆதி – வெறும் உட்டணக் குழம்பு என்பது ஆராய்ச்சி வல்லுனர் கூற்று. சூரிய மண்டலத்திலிருந்து பிரிந்துவிலகிய பகுதி நாளடைவிலே குளிர்ந்து கட்டிபட்டு, பாறையான நிலையை அடைந்தது என்பர். சூரியனிலிருந்து வந்த குளம்புக் கோளமானது மெது மெதுவாக குளிர்ந்து படிகப் பாறைகளாயின. இந்தப்படிகப் பாறைகள் பலவித இயற்கைக் காரணங்களாலும் சிறிதுசிறிதாக உடைந்து, நாளடைவிலே சிதைவு பெற்று, உருமாறி இறுதியிலே மண்ணுகியது.

மண்வகைகள் தடிப்பிலும் இரசாயனத் தன்மையிலும் பௌதிகத்தன்மையிலும் வெவ்வேறு இயல்புகளைக் கொண்டன. இவை வெவ்வேருன இடங்களில் வேறுவேறு முறைகளில் அமைந்துள்ளன. இந்த இயல்புகளையொட்டியே மண்ணின் பாகுபாடுகள் பிறந்தன.

பூர்வீகக் காலந்தொடக்கமாக உட்டணக் குழம்பு உறைந்து பாறைகளாகியதால் அப்பொழுது முதலே மண்ணும் ஆரம்பமாகிவிட்டது எப்பொழுதும் கற்பாறைகளும் மலைகளும் பனியாலும் மழையாலும் காற்ருலும் உட்டணத்தாலும் தாக்குண்டு சிறிது சிறிதாகத் தேய்வுற்று, சிதைவுற்று உருமாறி வருகின்றன. பாறைகளோ மலைகளோ நிரந்தரமானவை, என்றும் அழியாதவை என்று நாம் கொள்வோமாகில் அதனைப் போன்ற தவருன கொள்கை வேறு கிடையாது. உதாரணத்துக்காக பல இடங்களிலிருந்தும் மண்மாதிரிகளை நாம் ஆராய்ச்சிக்கு எடுத்தோமானல் அம்மண்ணிலே அநேக பொருள்கள் அடக்கம் பெற்றிருப்பதை அவதானிக்க முடியும். சிறுசிறுகற்கள், பொடியாக்கப்பட்ட கற்பாறையணுக்கள், பளிங்கியல்புடைய பொருள்கள் ஆதியன மண்ணிலே கலந்திருப்பதைக் காண்கின்ருேம்.

உட்டணப்பாறைகள், எரிமலைப்பாறைகள், படிகப்பாறைகள், கருங்கற்பாறைகள், உறைபாறை, உருமாறிய மட்பாறை, சுண்ணப் பாறை, மணற்பாறை, கற்பாறை என பலவித தன்மைகளுடன் பாறைகள் விளங்குகின்றன.

கற்பாறைகளும், திடர்களும், மலைகளும் நாளாவட்டத்தில் நிலைகுலைந்து மண்ணுகிவருகின்றன. இவ்வாறு சிதைவுற்றுவருந் தன்மையை சீதோஷ்ண மாறுதல் – காற்ருேட்டம் - நீரோட்டம் - பாறைகள்மீது முளைத்து வளரும் தாவரம், அவற்றில் வாசம்புரியும் செந்துக்கள் ஆதியனவே காரணமென்ருேம். மண்துண்டங்களாக மாறுவனவற்றை இம்மிகள் என்று கூறுகின்ருேம். இந்த இம்மிகள் திரண்டு மென்மையடைந்து மண்ணுகின்றன.

கற்பாறைத் தளங்கள் சகிக்கமுடியாத உட்டண நிலைமை காரணமாக மாறுதல் அடைகின்றன. காற்றது வெப்பநிலைக்கொப்ப பாறைகளது வெப்பநிலைமையும் மாறுகின்ற தன்மையால் பாறைகளது பகுதிகளும் பல்வேறுபட்ட இழுப்புகளுக்கும் அமுக்கங்களுக்கும் உட்படுகின்றன. பாறைகளில் பல்வேறுபட்ட உலோகப்பொருள்களும் இருக்கின்றன. அவைகளில் முக்கியமானவை அலுமினியம், பொட்டாசியம், கால்சியம், சோடியம், மக்னீசியம், இரும்பு ஆதியனவும் மற்றும் இவ்வுலோகங்களால் உண்டாய சிலிக்கேட்டுகள், அப்பிரகங்கள், சோடாவகைகள் முதலியனவும் காணக்கிடக்கின்றன. உட்டண நிலைமையால் ஏற்படும் மாறுதல்கள் சுலபமாகப் புலப்படக்கூடியவைகளாக இருக்கமாட்டா. ஆயினும் அம்மாற்றங்கள் மிக வலிமை வாய்ந்தவை. மாரி-கோடைகளிலும் பகல்-இரவுகளிலும் காலை-மத்தியானம்-மாலை வேளைகளிலும் உட்டணநிலைகள் வேறுபடுகின்றன. இவ் வேறுபாடுகள் காரணமாகக் கற்பாறைகளில் உள்ள தாதுக்களெனப்படும் உலோகப் பொருள்கள் வெவ்வேறுபட்ட அளவிலே விரியவும் ஒடுங்கவும் செய்வதால் இந்த விரிவொடுக்கங்களுக்கு அமைவாக அவை வெடித்துச் சிதறுகின்றன. உலகிலே உட்டணநிலையானது எங்கும் ஒரேமாதிரியாக எப்பொழுதும் இருப்பதில்லை. இதனுல் பல்வேறுபட்ட விரிவொடுக்கங்களால் சிதறும் பாறைகள் நாளடைவிலே மண் இம்மிகளாகி உலகிலே பரந்து விடுகின்றன. நாளொருவண்ணமும் பொழுதொரு முறையுமாக இவ்வாறு இயற்கையாக நேரும்-நேர்ந்துவரும் மாற்றமே நமக்கு மண்ணைத் தந்துவளது.

பொருள்கள் உருவமாதலும் உருவங் குலைதலும் இயற்கைச் செயலாகப் பண்டுதொட்டு நடந்துவருகின்றது. உட்டணத்தால் மண்ணுகிய கற்பாறை இயற்கை மாறுபாட்டால் மீண்டும் கற்பாறையாகவும் மாறுகின்ற விந்தை நடப்பதுண்டு. மணல் சேர்ந்த கற்பாறைகள் பல்வேறிடங்களிலுமிருப்பதைக் காண்கின்ருேம். பொடியாக்கப்பட்ட கற்பாறைகள் மண்ணுடன் திரண்டு கற்பார்களாகின்றன. மண்ணுடன் சேர்ந்து காணப்படும் சில பொருள்கள் அணுக்களை ஒன்ருக்கி இறுகப் பிடித்து மீண்டும் கற்பார்கள் தோன்ற உதவுகின்றன.

பூவக ஆராய்ச்சியாளர் கூற்றுப்படி வெப்பமுள்ள வாயுரூபமாக இருந்த பூமி வெப்பங் குறையக் கூழாகிக் குழம்பாகி, குளிரால் உறைந்து பாறை

(11-ம் பக்கம் பார்க்க)

அத்தியாயம் 11

# கேட்டிருப்பாய் காற்றே

குறுநாவல்

(1)

இருள்— அது துன்பம் களையும் சஞ்சீவி... இருளில் தானே மனிதர்கள் உறங்குகிறார்கள்... ஜடப்பிண்டங்களாக மாறுகிறார்கள்...?

ஆனால்— அப்புகாமியையும் குணவதியையும் பொறுத்தவரை—?

மேடும் பள்ளமும் நிறைந்த உலகம்; இருளில் ஒரே சமபரப்பாகத் தெரிகின்றது... ஒளியைப் பெய்துபார்த்தால்...?

சாக்கடை மணத்தின் நுசர்வில் குமட்டிக்கொண்டிருக்கும் இரு நெஞ்சங்கள் கண்துயிலவில்லை. குமுறிக் குமுறியெழும் அலைகள் அவர்கள் நெஞ்சக் கடலில் எழுந்து ஒரே கொந்தளிப்பாகக் கொந்தளிக்கின்றன. கொந்தளிக்கும் ஓசையில் ஓசையைப் பேராசையாக்கிச் சிரிக்கும் சூறாவளிக் காற்றாக அப்புகாமியினதும் குணவதியினதும் காதுகளிலே டாக்டர் ஐயாத்துரையின் குரல் மோதி மோதி உயர்கிறது...

'குணவதி...'

அழைக்கும் குரல்—?

அப்புகாமியா? சுருண்டு மூலையில் முடங்கிக்கொண்டு தினமும் நெட்டுயிர்க்கும் அவளுக்கு இருளில் ஒளியான அப்புகாமியின் பாசக்குரல் கம்மிப்போய்க் கேட்கிறது...

விடிந்து விட்டால்—?

அவன் போய்விடுவான்... அவனுடைய சுவடுகள் தெரியாமல்;— அவளின் கண்ணீர்க் கறைகளைத் துடைத்த கதைகள் முடியாமல் அவன் எங்கோ தொலைதூரம் போய்விடுவான் ... அவன் போகவேண்டும். போகாமல் அவனால் இருக்க முடியாது... இருந்தால்—?

அவள்—?

அவர்கள்—?

சுருள் சுருளாக நெளிந்து புகையும் புகைமண்டலத்துக்குள் இதய விறகின் கனல் எழுப்பும் புகைமண்டலமாகத் தன்னை ஆக்கிக்கொண்டு வாழவேண்டும்.

'நீ இந்த நிமிஷம் போயிடவேணும்'

"ஓம் ஐயா..."

காதில் சுழன்றடிக்கும் ஒலி உருவெல்லாம் டாக்டரின் வார்த்தைகள்... அவருடைய அந்த வார்த்தை ஒலியிலே— கம்பீர்யத்திலே அப்புகாமி கூனிக்குறுகி அடிமையாகி......

அவரின்கீழ் நெடுக அடங்கி ஒடுங்கி நின்ற தோஷம்; அடிமை அழுத்தம்... அவனை அறியாமலே கைகள் கூம்புகின்றன.

'வாறேன் ஐயா; அம்மா; பேபி...'

"ரட்டா"— ஈஸ்வரியின் குரல்.

அவனுக்கு மரியாதை செய்த — வழியனுப்பிவைத்த ஒரே ஒரு குரல்...

அவனிடம் இருந்து பிறந்த ஒவ்வொரு வார்த்தைகளும் வேப்பெண்ணை குடித்த கசப்பு வார்த்தைகள்... எதையுமே கவனிக்காதவனாகத் தன்னையும் உலகத்தையும் அடியோடு மறந்துவிட்டுக் காற்றிலே மிதந்து செல்பவனைப் போல அவன் அந்த 'மாடி வீட்டை' விட்டு மறைகிறான்...

உள்ளக் கதவுகள் ஆடி ஆடிக் 'குணவதி' எனக் கிறீச்சிடுகின்றன...

கிறீச்சிடும் ஒலியினில் ஒரே ஏக்கம்...

(2)

'குணவதி'

"யார் அப்புகாமியா?"

அப்புகாமியாக இருந்துவிட்டால்...?

'சீச்சி எப்படி அவர் வரமுடியும்... காலையில்தானே அவர் இங்கிருந்து போனார்...? நான் கூட அவரைப் பாராமல்... அவர்கூட என்னைப் பாராமல்... ஏன் இடையில் அவருக்கிந்த எண்ணம்?... எனக்குத்தான் ஏனிந்த எண்ணம்...? பேசாமல் இருக்கிறது போல இருந்திருந்தால்... இருந்திருந்தா... உம்... இனி எங்கே போய் எப்படி எப்படி எல்லாம் தொல்லையும் துன்பமும்—

"குணவதி என்னோடு நீ கோவமா—?"

அவள் மேல் பிஞ்சுவிரல்களின் தழுவல்.

ஈஸ்வரி தனது சின்ன மணிக்கண்களால்— அதன் கூரிய ஒளியினால்-குணவதியை ஊடுருவிப் பார்க்கின்றாள்...

'ம்... ம்...'

பதிலற்ற தலையசைப்பு...அவளின் எல்லையற்ற சோகத்தின் போது அவளிடமிருந்து வார்த்தைகள் வெளிவர முடியாமல் மரண அவஸ்தை அடைகின்றன...

"பின், நீ ஏன் அழுகிறாய்... நான் அண்டைக்கு அம்மாக் கிட்டே உனக்குத் தோடு குடுக்கச் சொன்னன்... உனக்குக் கோவமோ...? அப்ப... என்ரை சின்னத் தொங்குட்டானைத் தரட்டுமா...? இந்தா நீயே கழற்றிக்கொள்..."

குணவதியின் நெஞ்சில் வெம்மைக்குள்ளும் வெம்மையாகும் காந்திமதியின் ரௌத்திரத் தோற்றம்...

"எனக்கு ஒண்ணும் கோவமில்லீங்க... எனககுத் தோடு வேணும்... சும்மா இருங்களேன் கொஞ்சம்..."

'நீ ஏன் அழுறாய்...?'

"தலைவிதி"

"பொய் சொல்லுறாய்... எனக்குத் தெரியாதெண்டு நினைச்சியோனை... எங்கடை அம்மா உனக்குப் பேசுறது அடிக்கிறது எண்டுதானே அழுகிறாய்... பாவம் நீ... எங்கடை அம்மா கூடாது... இல்லை...?"

குணவதியின் உள்ளம் ஒரு கணம் துணுக்குறுகிறது.. எங்கே காந்திமதி வந்து நின்று கேட்டுவிட்டால் ...? அப்புறம் —

'இதுதான் உனக்குக்கடைசி முறை ... இனி ஏதாவது செய்தியெண்டா ...'

காந்திமதியின் அழுத்தமான கண்டிப்பில் குணவதி புழுவாகிறாள் ...

"ஈசு ... ஒனக்குக் கோடி புண்ணியம் ... அம்மாவந்தாங்க எண்டால் வந்தாங்க எண்டால்..."

கொழுந்து விட்டெரியும் தீக்கொழுந்துகளின் நடுவில் பழனிபாயி —

அவள் உடலில் — முதுகுப்புறத்தில் ...

தீத்தழும்புகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக அவளையே அலங்கோலமாக்கி ...

குணவதி ... நான் ஒனக்கு என்னத்தைச் சொல்லிக்க ... பட்டணமாடீ போகிறே ... அப்புறம் ... அப்புறம் ... ஒரே நரகம்டீ ... அதைப்பாரு ... ஆமா சொல்லிக்கிறேன் ... பாத்தா வவுத்தைப் பத்தி எரியும்டீ ...

தனது மேல் ரவிக்கையைக் கழற்றிக் கருமை உடலிலே, முதுகுப்புறமாகக் காய்த்துக் கறையாகக் கிடக்கும் தழும்புகளைக் காட்டுகிறாள் ... குணவதி தன் உப்புக் கண்ணீரால் அவள் உடலை நனைக்கிறாள் ...

'பழனியாயி ... அவளைப் போல ... எனக்கும் ... எனக்கும் ...

குணவதியின் கண்கள் குரோதத்தில் எரிகின்றன ... ஈஸ்வரியைக் கண்டதும் குளிர்புனலிற் குளித்தெழும் குணவதிக்கு இன்றைக்கென்று ஈஸ்வரி வெந்நீராகிறாள் ...

ஈஸ்வரி — அவள் இடத்தில் மூக்காயி இல்லை. மூக்காயிக்குப் பதிலாக காந்திமதி ஈஸ்வரியாக ஈஸ்வரி காந்திமதியாக குணவதிக்குத் தெரிகின்றது ...

ஒன்று அதிகாரத்தால் கொல்லுகிறது ... மற்றதுபாசத்தாற் கொல்லுகிறது ...

இந்தப் பாசம், அதிகாரம் யாருக்கு வேண்டும்? அளவுக்கு மீறிய பாசம்; அந்தப் பாசத்தின் சிதைவு; அதே வாழ்க்கையில் விரக்தியையூட்டும் ஆட்கொல்லிதானே ...?

"போறியா இல்லாட்டி நான் போயிடவா...என்ன எழவு..."

என்றைக்குமே சீறிச் சினவாத குணவதியின் சீற்றத்தில் ஈஸ்வரி பதுமையாகிப் போய் நிற்கிறாள் ... சிறிதுநேரம் ஒரே மௌனம் ... அழுகை 'பொத்துக்'கொண்டு வெளிவரப் பார்க்கிறது ... பல்லைக் கடித்துக் கொண்டே குணவதியை ஈஸ்வரி முறாய்த்துப் பார்க்கிறாள் ...ஓரிருநிமிடங்கள் நீடித்த முறாய்ப்பு பனியாகிறது...

"பாவம் ... அம்மாவுக்குச் சொல்லிவிட்டேன் எண்டு ஒரே கோவம் போலை ... பிறகு வருவம் ...

— தனக்குள் முணுமுணுத்துக் கொண்டே மெல்லமாக நடந்து குசினியைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்தாள் ஈஸ்வரி. அவளுக்கு எதுவுமே புரியவில்லை ...

(3)

அப்புகாமி நடந்துகொண்டிருக்கிறான்.

எங்கோ வாழ்ந்துகொண்டிருந்த அவன், வந்து இராமமூர்த்தியின் வீட்டில் வேலைக்காரனாகிவிட்டபின் வாழ்க்கையின் பாதையிலேதான் எத்தனை புதுப்புது அத்தியாயங்கள் ...?

அவன் யாருக்குப் பிறந்தானோ, எப்படிப் பிறந்தானோ எதுவுமே தெரியாமல் நினைவுப் பிராயத்தில் அனாதையென்பதை மட்டும் தெரிந்துவைத்துக் கொண்டு எத்தனையோ வீடுகளில் வேலைக்காரனாக வாழ்ந்து வந்துவிட்டான் ...

அன்னையாரோ — அப்பன் யாரோ; அந்த ஆராய்ச்சியே அற்று வெறும் இயந்திரக் கூடாக இராமமூர்த்தியின் வீட்டிற்கு வந்து சேர்ந்த அப்புகாமி முதன்முதலாக, பெண்மைப் பாசத்திற்காக ஏங்கத் தொடங்கியது இராமமூர்த்தி வீட்டில்தான் ...

குணவதி அவனுக்குத்தாயின் நினைவைக் கொடுத்தாள் ...

ஏக்கம் பிறந்தது. அதனால் —

பாசத்திற்காக அலைந்தான். அந்தப்பாசம் குணவதியாக குணவதி அவன் சுற்றமாக நெஞ்சக்காற்றாகி அவன் நினைவுகளில் தவழ்ந்த போதுதான் அவனுக்கு இந்த உலகத்திலேயே வாழவேண்டுமென்ற பாசப்பார்வை விழுந்தது ...

நேர்மையாக, விசுவாசமாக உழைத்து ஓடாகிவிட்டிருந்த அவனுக்கு, அவனில் கூடுகட்டிவிட்ட அவன் ஆசையை நிறைவேற்ற வேண்டுமென்ற நன்றி கூடவா இந்த ஜென்மங்களுக்கு இல்லை ...?

டாக்டர் ஐயாத்துரை பளார் பளார் என்று அறைந்த அறைகள் ... அதனால் கன்றிப்போன கன்னங்கள் ... என்ன அப்புகாமி ஆண்மையேயில்லாத பெண்மைதானா ...?

ஐயாத்துரையின் முதல் உதையிலேயே அப்புகாமியின் நரம்புகள் புடைக்காமல் இல்லை ... அவரின் பூட்ஸ் காலின் வலிமையைவிட அவனுடைய வெற்றுக் கால்களில் நிறைந்த வலிமை இருக்கின்றது ... இருந்தும் — அவன் அடங்காத ஆத்திரத்தில்; வீரியத்தின் விழிப்பிற் கூடப் பொறுமையாக அடிகளை வாங்கிக் கொண்டிருந்தான் ...

'குணவதி ... உனக்காக ஒரு உதையல்ல ஓராயிரம் உதை கூட நான் பட்டுக் கொள்ளத்தயார்... ஆனால்... ஆனால்... உன்னோடு ஓடித் தொலையென்றல்லவா சொல்வார்களென்று பொறுமையோடு காத்திருந்தேன்...?

அவன் எரிகிறான்... உயிரோடு இருந்தும் இல்லாதவனாகத் தீய்ந்து இயங்கிக்கொண்டிருக்கின்றான்...

ரயில் கடவையிலே சிவப்பு விளக்கு. அந்தச் சிவப்பு வண்ணத்தில் குணவதியைச் சுற்றியிருக்கும் வாழ்க்கையின் அபாயங்களை அப்புகாமி காண்கின்றான். அந்த அபாயங்கள் அவன் எண்ண அலைகளில் மோதி—

'குணவதி ஏன் . சொன்னாள்...? எதற்காகச் சொன்னாள்... எதைப் புலப்படுத்தச் சொன்னாள்...'

'குணவதி...'

'இன்னுஞ்சிறிது நேரத்தில் நான எங்கோ, போகுமிடம் தெரியாமல் போகும்வழி தெரியாமல் போய்க்கொண்டேயிருக்கிறேன்... இந்தப்போக்கின் ஓரம் எங்கோ அங்கே இன்னும் எத்தனை தொடர் அத்தியாயங்கள் காத்து இருக்கின்றனவோ ...? இனி நான் சுயமாக உழைப்பேன்... உரிமை இழவாத உழைப்பைத் தேடுவேன்... குணவதி...'

அப்புகாமி யாழ்ப்பாணம் ஸ்டேசனில் நுழைந்து எங்கு போவதென்று தெரியாமல் திணறுகிறான்... அவன் நினைவுகள் எல்லாம் காந்திமதி வீட்டில்... அந்தக் குசினிக்குள்...

'அப்புகாமி... அப்புகாமி...'

குணவதியே அசைவுகளாய் அசை எழுப்பும் மனம்.

அப்புகாமி ஓடிக்கொண்டிருக்கும் கடிகாரமுட்களைப் பார்க்கின்றான். அதிற்கூட முட்கள் சிவப்பாக—

'நாளைக்கே காலை றெயினிலை போயிடு'

—'இதைச்சொல்ல டாக்டர் ஐயாத்துரை யார்...?'

'...ஓம் ஐயா...'

'மறுக்காமல் ஏற்பதற்கு நீ யார்...?'

செ. கதிர்காமநாதன்

'ஏன் குணவதியையும் என்னையும் கலியாணங்கட்டவிடாமல் தடுக்கவேணும்...?'

'ஏன்'?

ஆயிரம் 'ஏன்'கள் அவனை, அவன் மூளையை விண்விண்ணென்று தாக்கி அவனில் சந்தேக ஓட்டைகளைத் துளைக்கும் விசையில் முன்னேறுகின்றன...

'அப்புகாமி...'

'என்ன...'

'பக்கத்துவீட்டுச் செல்லாச்சி இருக்காளே அவ, அந்த வீட்டுக்காறரோடு நேசமாம்...'

வீட்டைவிட்டு வெளியேற்லாம். ஆனால் விரிந்த இந்த யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேற்ற அவர்யார்...? வெளியேற அப்புகாமி யார்...? தொடர்ச்சியாக அப்புகாமியைத்தாக்கும் ஏன் என்றகேள்விகளின் சிலந்திவலைச் சுழற்சியில் பக்கத்துவீட்டுச் செல்லாச்சி...

'ஏன்ரா அப்புகாமி உங்கடை வீட்டுக் குணவதியிலை ஐயாவுக்கு விருப்பமில்லை...? பாவம் விருப்பமெண்டா அவளும் என்னைப்போலை...?

செல்லாச்சியின் கேள்வியா அது—?

(10ம் பக்கம் பார்க்க)

# தேர்த் திருவிழா

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கால ஓட்டத்தின் ஏழு வருடங்களுக்குப் பின் செல்வச்சன்னிதியில் திருவிழா நடந்து கொண்டிருந்தது. அன்று தேர்த்திருவிழா. வழக்கம் போல் கோவிலில் ஜனக்கும் பலுக்குக் குறைவில்லாமலிருந்தது. செல்வச்சன்னிதியில் திருவிழா தொடங்கிவிட்டால் பதினைந்து நாளும் கூட்டங்களும், கடைகளும், அலங்காரங்களுமாக ஒரே கலகலப்பாகத்தானிருக்கும். காப்புக்கடை, வெண்கலக்கடை. மணிக்கடை இவ்விதமாக அன்று அவ்விடம் பெரிய கடைத்தெருவாகக் காட்சியளித்துக்கொண்டிருந்தது. தேர் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தது. தேரின் பின்னே மாதர்கூட்டம் அரோகரா! அரோகரா!! எனப் பக்தி நிறைந்த ஒலியை எழுப்பிய வண்ணம் சென்றுகொண்டிருந்தது. ஆண்கள் தேரின் வடத்தைப் பற்றி இழுத்துக் கொண்டிருந்தனர்.

நேரம் நகர்ந்துகொண்டிருந்தது. புறவீதியை விட்டு மிக வேகமாகத் தேர் சென்று கொண்டிருந்தது. தேர் இழுத்துக்கொண்டிருந்த பெரியவர் ஒருவர் தற்செயலாக சனநெருக்கத்தால் தவறி நிலத்தில் விழுந்தார். தேரின் சக்கரங்கள் மிக வேகமாகச் சுழன்று அவரை நோக்கிக்கொண்டிருந்தன. கட்டுப்படுத்தி நிறுத்த முடியாத நிலையில் தேர் ஓடிக்கொண்டிருந்தது. அவருக்கும் தேருக்குமுள்ள இடைவெளி மிகவும் குறுகிக்கொண்டே வந்தது. ஒருகணப்பொழுது. ஒரேயொரு கணம் தான் தாமதம். இதைக் கண்ணுற்ற முருகையன் திடீரெனக் குறுக்கே பாய்ந்தான். பெரியவர் காப்பாற்றப்பட்டார். முருகையனின் கால் தேரின் சக்கரத்திற்கு இரையாகிவிட்டது. முருகையனின் காலிலிருந்து இரத்தம் பெருகிக்கொண்டிருந்தது. அதே போல் பெரியவரின் கண்களிலிருந்து கண்ணீர் வெள்ளம் ஓடிக்கொண்டேயிருந்தது. அந்தக் கண்ணீருக்குரிய பெரியவர் வேறு யாருமல்ல. அவர் தான் பென்ஷனியர் கதிரேசர். கதிரேசர் தன் இரு கரங்களாலும் முருகையனை வாரியெடுத்தார். கூட்டத்தை விலக்கிக்கொண்டு நடந்தார்; நடந்துகொண்டேயிருந்தார். அவர் கண் என்னும் குளத்தின் அணைக்கட்டுகள் உடைந்துவிட்டன. போலும் கண்களிலிருந்து கண்ணீர் பாய்ந்துகொண்டே இருந்தது. முருகையனைச் சுமந்துகொண்டிருக்கும் அவர் கரங்கள் தளரவில்லை; அவர் கால்களும் சோரவில்லை. நடந்துகொண்டேயிருந்தார்.

[யாவும் கற்பனை]

# ஊருணியாய்த் திகழ்ந்த உத்தமர் திரு. வீரகத்திப்பிள்ளை சுப்பையா

— ந. சிவன் —

**யாழ்** மாவட்டத்துச் சமாதான நீதவான் திரு. வீரகத்திப்பிள்ளை சுப்பையா அவர்கள் மாசித் திங்கள் ஆரும் நாள் (18-2-63) தமது உலகவாழ்வை நீத்து விண்ணுலகு எய்தினர். அன்பிற்கும் அறத்திற்கும் இலக்கியமாய் விளங்கிச் சமாதான தூதுவராக மிளிர்ந்த ஐயா அவர்கள் சில வாரங்களாகச் சிறிது சுகவீனமடைந்திருந்தார். தமது சொந்த ஊராகிய தொண்டைமானாற்றிலுள்ள இல்லத்தில் இருந்தே காலை ஒன்பது மணியளவில் சித்தயோகத்தில் இறைவனது பாதாரவிந்தங்களில் அவரது ஆத்மா சாந்தியடைந்தது.

இப்பெருந்தகையாரின் பிரிவு நண்பர்கள் சுற்றத்தார்களுக்கு மட்டுமன்றி அநாதரவாய் இருந்து அல்லற்பட்டு, தெய்வாதீனத்தால் அவரைக்கண்டு பழகி அவரது இன்மொழி கேட்டு ஆசீர்வதிக்கப்பட்டுப் பழைய தொல்லைகளெல்லாம் நீக்கியோர்களுக்கும் ஈடு இணையற்ற பெருநட்டமாகும்.

திரு. சுப்பையா அவர்கள் யாழ்ப்பாணக்குடாநாட்டிலே செல்வச் சீமான்களாய்த் திகழ்ந்த பெற்றோர்க்குச் சிரேஷ்ட புத்திரனாய்ப் பிறந்தும் தமது வாழ்க்கையைச் சொந்த முயற்சியாலேயே வளப்படுத்தினர். கல்வி பயின்றுகொண்டிருக்கும் போதே மலாயாசென்று கோலாலம்பூரில் தொடர்ந்து கல்விகற்றார். மலாயாவில் அரசாங்கசேவையில் சேர்ந்து மிகக் குறுகிய காலத்தில் பதவி உயர்வுகளடைந்து சிவில் சேவையாளராகி காரியாலய உதவியாளராகப் பணியாற்றினார்.

அரசாங்க சேவையில் இருக்கும்போதும் சமூகசேவைகளிலும் சமயசம்பந்தமான பணிகளிலும் தமது ஓய்வுநேரங்களைச் செலவிடலானார். இன்று மலாயா கோலாலம்பூரில் பொன் விழாக் கொண்டாடி ஆயிரக்கணக்கான சைவத் தமிழ் மக்களுக்குச் சைவ சமயத்தையும் தமிழ் மொழியையும் இனிதூட்டி வரும் இராமகிருஷ்ண ஆச்சிரமம், இராமகிருஷ்ண வித்தியாசாலை என்பன திரு. சுப்பையா அவர்களின் சைவத்தமிழ்ப் பணிகளுக்கோர் எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றன. சிட்டுக்குருவிபோல் சுதந்திரமாக ஓடியாடித்திரிந்து சமூகசேவை செய்வதற்கு அரசாங்க உத்தியோகம் தடையாய் இருப்பது கண்டு தமது முப்பத்தாரும் வயதில் பதினெட்டு ஆண்டுகள் சேவையுடன் அரசாங்கசேவையிலிருந்து இளைப்பாறினர். "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற நாவுக்கரசர் திருமொழியைத் தாரக மந்திரமாகக்கொண்டுசமூகப்பணிசெய்து வரும்நாளில் பெற்றோரைக் காண்பதற்காக 1932-ம் ஆண்டு தாயகம் வந்தடைந்தார். தந்தையின் பிரிவும் தாயகத்து மக்கள் பல துறைகளிலும் பின்னேக்கி வழிகாட்டியில்லாமல் திக்குமுக்காடித் தத்தளித்தமையும் இவரைத் தாய்நாட்டில் தங்கச் செய்தன.

ஐயா அவர்கள் வெளிநாட்டில் வாழ்ந்தாராயினும் தாய்நாட்டை மறக்கவில்லை. திரைகடலோடித் திரவியம் தேடி வர்த்தகத்துறையில் கண்ணும் கருத்துமாய் இருந்த தந்தையாரையும் சகோதரர்களையும் தர்மப்பணிகளிலும் ஈடுபாடு கொள்ளச் செய்த பெருமை இவருக்கே உரியது. தந்தையாரைக் கொண்டு தொண்டைமானாற்றில் ஓர் இந்து ஆங்கில வித்தியாசாலையையும் அரசாங்கத்தைக்கொண்டு ஓர் இலவச மருந்துச்சாலையையும் தபாற் கந்தோரில் தொலைபேசியையும் அமைப்பித்தார். தமது சகோதரர்களைக் கொண்டு மானிப்பாய், மூளாய், இணுவில் ஆகிய இடங்களில் உள்ள வைத்தியசாலைகளில் வீரகத்திப்பிள்ளை ஞாபகார்த்த வாட்டுக்களை அமைப்பித்ததும் இவரே. இதனால் தர்மம் என்பது தான் மட்டும் செய்வதல்ல, பிறரைக் கொண்டு செய்விப்பதும் அதன்பாற்படும் என்பதை நிரூபித்தார். செல்வச்சன்னதி கோவில் உற்சவகாலங்களில் கோவில்வீதிகளில் சுகாதார முறைகளைப் பேணுவதில் மிகுந்த அக்கறை காட்டினர். யாத்திரிகர்கள் கோவிலுக்கு நடந்துபோகும் வழியில் இருந்த கடலை மணற் சாக்குகள் போட்டு அடைத்து ஒருவித இடையூறுமின்றி அவர்களைப் போகவைத்தார்.

**அரசியல்** துறையிலும் திரு. **சுப்பையா** அவர்கள் சளைத்தவரல்ல. இவர் யாழ்ப்பாணம் நகராட்சி மன்றத்திற்கு அங்கத்தவராக நியமிக்கப்பட்டு அதன் உப தலைவராகவும் சில காலம் தலைவராகவும் கடமையாற்றினர் அக்காலத்தில் சபையில் இருந்த ஊழல்களைக் களைந்து நீதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டினர். பொதுமக்களின் பணத்தை எடுத்துத் துர்ப்பிரயோகஞ் செய்தவர்களைத் தக்கவாறு தண்டித்தார். நிதியைப் பேணுவதில் தமது முழுக்கவனத்தையும் செலுத்திய திரு. சுப்பையா அவர்களை 'நிதிக்காவலர்' எனச் சபையினர் அழைத்தார்கள்.

இவரது சமூக சேவையின் திறமையை மெச்சிய அரசாங்கம் 1944-ம் ஆண்டு இவரை யாழ்ப்பாண மாவட்டத்திற்குச் சமாதான நீதவானுக்கியது. அத்துடன் நிர்மரண மசாரணைகளில் நகர்காவலருடன் சேர்ந்து விசாரணை புரிபவராகவும், வீடமைப்பு இலாகா, அரசினர் ஈட்டு வங்கி ஆகியவைகளின் மதிப்பாளராகவும் பலதடவைகளில் பணியாற்றினர் இவைகளைவிட மீன்பிடி இலாகா ஆலோசனைக் குழுவிலும் சுமார் பதினேழு ஆண்டுகள் வரையில் உறுப்பினராய் இருந்தார். இலங்கைக் கடற்கரைகளில் மீன்பிடித்தொழிலை எவ்வாறு வளம்படுத்தலாம் என்பதை ஆராய்வதற்கு நியமித்த குழுவின் தலைவராய் அமர்ந்து ஆற்றிய பணிகள் எண்ணற்றவை. இவரது ஆலோசனைகளை ஏற்ற அரசாங்கம் அவைகளில் பலவற்றை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவந்தது.

கருணை தவழும் முகமும், இன்சொல்லும் எவரையும் வரவேற்றுபசரிக்கும் தயாளமனப்பான்மையும் கொண்ட ஐயா அவர்கள் தூய எளிய வாழ்க்கையே என்றும் வாழ்ந்து வந்தார்.

ஐயா அவர்கள் ஒரு சைவ சமயி. எந்த மதமும் தீயதைச் செய்யத் தூண்டவில்லை. கொலையைக் களவைக் கள்ளருந்தலை எல்லா மதமுமே கண்டிக்கின்றன. பிறருக்கு இரங்குதல், அன்பு வழி நிற்றல், தன்னைத்தானே சுத்தமாக வைத்திருத்தல் ஆகியவைகளை எல்லாச் சமயமும் வரவேற்கின்றன. இஃதிவ்வாறிருக்க நாங்களேன் மதமான பேய் பிடித்திருக்க வேண்டுமென மதவெறி கொண்டோர்க்கெல்லாம் அறிவுரை புகல்வார். இதனால் இவரை எல்லாச் சமயத்தவர்களும் போற்றி வாழ்த்தினர்கள். இத்தோடல்லாமல் "சாதி சாதி" என்று கூறிக்கொண்டு பழமை பேசிப் பழமையில் வாழ்வதிலும் கீழ்நிலையில் உள்ளோருக்கும் தம்மால் இயன்ற உதவி செய்து அவர்களை மேல்நிலையடையச் செய்வதைக் கடவுளுக்குச் செய்யும் தொண்டாகவே கருதினர். இத்தகைய சீரிய குணங்கள் நிறைந்த பெருந்தகைக்கு சிங்களவர் தமிழர் இஸ்லாமியர் ஆகிய பல சமூகத்தவரிடத்தும் நன்மதிப்பிருந்தது.

வறுமை, பிணி, அநாதரவு, அறியாமை, ஆதியாம் கர்ம வியாதிகளால் பீடிக்கப்பட்டுச் சமூகத்தில் உரிய இடமின்றி மனிதராய்ப் பிறந்தும், கேவலமாக வாழ்ந்த மக்களுக்கெல்லாம் ஊருணிபோல் திகழ்ந்த உத்தமர் இவரே. அவர்களுக்கு உணவும் உடையும் உறையுளுமுதவி கஷ்டத்தைக்கண்டு அஞ்சி ஒதுங்காமல் கஷ்டப்படுவோர் மனைதோறும்சென்று அன்னர் கஷ்டங்களில் தாமும் பங்குகொண்டார். இன்று அவரை இழந்தோர் அனைவரும் கன்றை இழந்த பசுப்போல ஆதரவிழந்து நிற்கின்றனரென்றல் அது மிகையாகாது.

ஐயா அவர்களின் பிரிவால் அன்பு தனது உருவை இழந்தது. அறம் தன்னைப் பேணியவரை இழந்தது. ஏழைகள் தங்களுக்கு வாழ்வளிக்கும் ஊருணியை இழந்தனர். இளைஞர்கள் தங்கள் பேரன்பின் உருவமாம் பெரியையாவை இழந்தனர். அன்னர் ஆவி திருவடி நீழலின்கண் இனிதே சாந்தியடையுமாக.

"தோன்றிற் புகழொடு
தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றுமை
நன்று"

—பொய்யாமொழி.

## கேட்டிருப்பாய் . . .

(9ம் பக்கத் தொடர்ச்சி)

சரசத்தின் நுகர்விற்கு விரித்துவைத்த சிலந்திவலைகளில் விழுந்துவிட்ட பூச்சிகளின் வெகுளிக் கேள்விகளா அவை...? அந்தக் கேள்விகளில்—

விரட்டிவிட்டு வெறிச்சிரிப்புச் சிரிக்கும் ஐயாத்துரையின் கேள்வியும் மகிழ்ச்சியுமாக—?

'எப்பிடியடா அப்புகாமி நான்... உன்னைப்போலத் திடமான வாலிபன்மாதிரி இல்லையோடா...

அவனைச்சுற்றி எங்கும் சிரிப்பொலிகள்... அதை மீறிக் காற்றிலெழும்பும் தனித்துவமான ஓலக்குரல்... காற்றின் காதுகளில் விழுந்து அலைஅலையாக மௌனம் குடியேறும் அந்தகார இருளில் புதைந்து ஆருமில்லாத சூன்யத்திலே நலிந்து மெலியும் துயரக்குரல்... அது... அது...

அதை உணர்ந்த உயிருள்ள உணர்ச்சியற்ற இயந்திரம் அப்புகாமி...

அப்புகாமி இயந்திரமா?

சடசடவெனச் சில்லுகள் இயக்கும் சட்டங்கள், நீட்டி முழங்க அந்த இயந்திர உருவம்—ஓடிவருகிறது...

அப்புகாமி திரும்பிக்கூடப் பார்க்கவில்லை... எங்கோ— இடம்தெரியாத அந்த இடத்திற்குப் பயணம் செய்யவும் இல்லை...அப்புகாமி ஏன் ஓட வேண்டும் ஓடு என்கின்ற பொழுது ஓடும் இயந்திரம், நில் என்கின்றபோது நிற்கும் இயந்திரம்கூட ஓரோர் சமயம் 'மக்கர்' செய்கின்றது... அப்புகாமி மற்றவர்களுக்காகப் பணியும் இயந்திரம் இல்லை...

அப்புகாமியினை முட்டி மோதியஎண்ணக்கற்கள் இதய விளிம்பின் உறுதி அணைகளாகின்றனவா...?


அப்புகாமி வந்தபாதையிலே திரும்பி நடக்கிறன்.


அவனுக்கு இராமமூர்த்தி வீட்டிலே இடமில்லாமல் இருக்கலாம்... யாழ்ப்பாணத்தில் இடமில்லையென்று யார் சொன்னர்கள்—?


ஸி. டபிள்யூ. ஈ.

உங்களுக்கு வரவழைத்துள்ள

**ஏககால ஒளி இணைப்புகள்**





கிடைக்குமிடம்:

**ஸி. டபிள்யூ. ஈ. ரேடியோ இலாகா**

85, மெயின் வீதி, : : கொழும்பு.

**ஸி. டபிள்யூ. ஈ. விற்பனை நிலையம்**

21, பிறின்ஸ் வீதி, : : கோட்டை.

REMEMBER NOW AND ALWAYS THE CWE BRINGS YOU TOP QUALITY AND VALUE

# சிறுவர் பூங்கா

## சுகுமார் எங்கே?

— "மு. இர்ராஜராஜன்" —

சுகுமாரைக் காணவில்லை. வீடுமுழுதும் தேடியாகிவிட்டது. வெளியில் வளவுமுழுதும் தேடியாகிவிட்டது. காணவில்லை. என்ன அதிசயம்!

மூன்றுவயதுக்குழந்தை சுகுமார். அரைமணி நேரத்திற்கு முன்புதான் முன்ஹாலில் அண்ணனுடன் விளையாடிக்கொண்டிருந்தான். அதற்கிடையில் அப்பா குளிக்கும் அறைக்குப் போய்விட்டார். அவர் வருவதற்குள் அவனைக் காணவில்லை.

"சுகுமார் எங்கே" என்ற பிரச்சினை எழுப்பியதற்குக் காரணம் அவன் அண்ணா ராமுதான். குளிக்கும் அறையிலிருந்து அப்பா வந்தவுடன் அழுதுகொண்டே, அவரிடம் ஒரு புகாரைக் கொண்டு போனான் ராமு. "அப்பா, என் புத்தகத்தை சுகுமார் கிழித்துவிட்டான்." ராமு இன்னும் அழுகையை நிறுத்தவில்லை.

அப்பாவுக்குக் கோபம் வரவில்லை. சுகுமார் சின்னக் குழந்தைதானே. அறியாப்பாலகனின் திருவிளையாடல்களில் ஒன்றுய்த்தான், அடிக்க கருதினார். என்றாலும் ராமுவின் அழுகை ஓய்ந்தபாடில்லை. ராமுவைத் திருப்திசெய்வதற்காக "எங்கேடா அவன்" என்று அதட்டினார்.

"டே சுகுமார்" என்று கத்தினான் ராமு பதிலில்லை. எங்கே போயிருப்பான்? "தம்பி சுகுமார்" என்று குரல் கொடுத்தார் அப்பா. அப்போதும் பதிலில்லை. குசினிப்பக்கம்போய் "சுகுமார் எங்கே" என்று இரைந்தார். "முன்னால்தானே விளையாடிக் கொண்டிருந்தான்" என்றாள் அம்மா. இதைத் தொடர்ந்து "சுகுமார் எங்கே" என்ற ஆராய்ச்சியில் அப்பா, அம்மா, அண்ணா அனைவரும் ஈடுபட்டனர்.

விஷயம் பெரிதாகிவிட்டது. சுகுமாரை உண்மையிலேயே காணவில்லை. அப்பாவுக்கு பதற்றமில்லை ஏற்பட்டுவிட்டது. வீடுமுழுதும் தேடினார். வேலைக்காரர்களும் தேடினார்கள். கிடைக்கவில்லை.

இப்போது ராமுவின் அழுகை ஓய்ந்துவிட்டது. தம்பியைக் காணோமே என்ற ஏக்கம் பற்றிக்கொண்டது. எல்லோரும் தேடினார்கள். எங்குமே காணோம்.

இனி பொலிசாருக்குத் தகவல் கொடுக்க வேண்டியதுதான் பாக்கி. அப்பா புறப்பட்டுவிட்டார். ஆனால் சற்று நின்று, சுவாமியைக்கும்பிட்டுவிட்டுப்போகலாம் என்று கோவிலறைக்குள் நுழைந்தார்.

எல்லா அறைகளையும் தேடியாகிவிட்டது. கோவிலறையில் தேடவில்லையே. அப்பாவுக்கு இப்போதுதான் நினைவுவந்தது. திருநீற்றைப் பூசிக்கொண்டபின், அறையின் கதவிடுக்கை நோக்கி புகுந்தார். என்ன ஆச்சர்யம்? இரண்டு உருண்டு திரண்ட விழிகள், கொட்டக் கொட்டப் பார்த்துக்கொண்டிருந்தன. பயத்தால் உடல்நடுங்கிக் கொண்டிருந்தது. சுகுமார்தான் கதவிடுக்கில் சுவரோடு சுவராகச் சாய்ந்துகொண்டிருந்தான்.

அப்பாவின் பதற்றம் அடங்கியது. அவனை வாரியெடுத்தார் அப்பா. "கண்ணு சுகுமார்" என்றார். அம்மாவும் அண்ணாவும் ஓடிவந்தார்கள். அப்பாவைச் சூழ்ந்துகொண்டார்கள். அனைவருக்கும் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

"அண்ணன் புகார் செய்யப் போகிறான். அப்பா அடிப்பார்" என்ற பயத்தில் கோவிலறையில் நடுங்கிக் கொண்டிருந்த சுகுமாருக்கு அன்று விசேஷ உபசரிப்பு நடந்தது

## வள்ளுவர்

— "திமிலைத்துமிலன்" —

வள்ளுவராம் திருவள்ளுவராம் - இந்த
மானிலம் போற்றிடும் வல்லவராம்
தெள்ளிய தமிழில் திருக்குறள் என்றொரு
திவ்விய அமுதம் படைத்தவராம்—
வள்ளுவராம்....

செந்தமிழ்த் தாய்க்கொரு தவஞானி-ஒளிர்
செகதல மதற்கொரு பொதுஞானி
நந்தமிழ் வள்ளுவர் முதுஞானி-அடி
நாம்தினம் பணியுமில் லறஞானி!
வள்ளுவராம்....

காவியக் கதைகளும் படைக்கவில்லை-அவர்
கற்பனைக் கவிதைகள் படைக்கவில்லை
ஓவியம் படைத்தார் குறள்மணியால்-அதில்
உண்மைகள் பதித்தார் உயர் அணியாய்
—வள்ளுவராம்...

வாழ்க்கையை அமைத்தார் மணிமணியாய்
-உயர்
மனநிலை வகுத்தார் வழிவழியாய்
ஏழ்கடல் புகுத்தித் தறித்தகுறள்-என
ஏற்றவர் வியந்தார் எதிரெதிராய்
—வள்ளுவராம்....

உலகமே குறளில் அடக்கமடா!-படித்
துணர்ந்ததும் அதுபோல் நடப்பமடா!
குலவிடும் தமிழ்மறை படைத்த அருட்
குருமணி பதமலர் பணிவமடா!
—வள்ளுவராம்...

## செய்தி வெளிவந்த கதை

— மகான் —

தினசரிப் பத்திரிகைகளில் நாம் எத்தனையோ செய்திகளைப் படிக்கின்றோம்; பயனடைகின்றோம். ஆனால் பத்திரிகையில் செய்திகள் வெளியாவது எப்படியென்பது உங்களுக்குத் தெரியுமா? அது, ஒரு பெரிய கதை!

'மக்கள் முன்னேற்றச் சங்கத்தின்' தீர்மானம் ஒன்று பத்திரிகையில் வெளியாகிவிட்டது. அது பத்திரிகையில் வெளியானதைப் பெரிய கதையாகக் கூடக் கூறிவிடலாம்.

வாசிசாலையொன்றை நிறுவுவது; இலவசமாக ஏழைப் பிள்ளைகளுக்குப் பாடசாலைப் புத்தகங்கள் வாங்கிக் கொடுப்பது போன்ற சில தீர்மானங்களை மக்கள் முன்னேற்றச் சங்கத்தின கூட்டத்துச்குக் கொண்டுவருவதென்று பலதடவைகள், பல அங்கத்தவர்கள் முயற்சியெடுத்தனர். மூன்று மாதங்களாக எடுக்கப்பட்ட முயற்சி, கடைசியில் கூட்டத்தில் பிரேரணை வடிவமாக இடம்பெற்றது. சங்கத்திடம் போதிய நிதிவசதியில்லையென்றும் இத்தீர்மானத்தைக் கைவிடவேண்டுமென்றும் பலர் பேசினர். பின்னர் அது காரசாரமாகி, வாக்குவாதம் முற்றி, கதிரைகள், மேசைகள் உடைபட்டதுடன் நிற்காது சில அங்கத்தவர்களை வெளியேற்றியதுடன் பிரேரணை நிறைவேறாமல் நின்றது.

இரண்டு மாதங்களுக்குப் பின்னர் சங்கம் மீண்டும் கூடியது. வெளியேற்றப்பட்ட அங்கத்தினர்களும் கூட்டத்திற்கு வந்திருந்தனர். பழைய வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறியது. பழைய தீர்மானம் மீண்டும் விவாதத்துக்கு வந்தது. நீண்ட விவாதத்துக்குப் பின்னர் ஐந்து பேர் சாதகமாகவும், ஐந்து பேர் பாதகமாகவும் வாக்களித்தனர். இறுதியில் தலைவரின் வாக்கும் சேர்க்கப்பட்டு ஒருபடியாகத் தீர்மானம் நிறைவேறியது.

அடுத்த கட்டம்! தீர்மானத்தை ஆதரித்த அங்கத்தினர்கள், (தலைவர் உட்பட) தாங்கள் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தைப் பத்திரிகைக்கு அனுப்புவதென்று முடிவு செய்தனர். அதிலும் விவாதம்! யாருடைய பேச்சை முன்னுக்குப் போடுவது? யார் யாருடைய பேச்சை, செய்தியில் சேர்ப்பது? இறுதியில் தலைவரின் பேச்சும் ஐந்து அங்கத்தினர்களின் பேச்சும் வரிகளில் கூடக் குறைவில்லாது செய்தியில் இடம் பெற்றது. அடுத்த கட்டம்!

"ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம். இத்துடன் வரும் தீர்மானம் எங்களது சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது அநேகர் இத்தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர். அவர்களில் சிலரின் சிறப்புரைகள் இத்துடன் வருகின்றன. மேலும் நிர்வாகசபையும் அமைக்கப்பட்டது. பொதுமக்களுக்குச் சேவைசெய்யும் முகமாகப் பொதுவாசிகசாலையொன்றை நிறுவவும், இலவசமாக ஏழைக்குழந்தைகளுக்குப் பாடப்புத்தகங்கள் வாங்கிக் கொடுக்கவும் தீர்மானித்துள்ளோம். தயவுசெய்து காலதாமதமின்றித் தீர்மானத்தையும் பேச்சையும் பிரசுரிக்க வேண்டுகின்றோம்."

—இக்கடிதம் பத்திரிகை ஆசிரியருக்குச் சங்கத் தலைவரினால் அனுப்பப்பட்டிருந்தது.

அதிக நாட்களுக்குப் பிறகு, பத்திரிகையொன்றில் அச்சங்கம் அனுப்பிய செய்தி வெளியானது:

"வாசிகசாலையொன்றையும், இலவசமாகப் பாடசாலைப் புத்தகங்களை ஏழைகளுக்கு வாங்கிக்கொடுக்கவும் மக்கள் முன்னேற்றச் சங்கம் தீர்மானித்துள்ளது. இத்தீர்மானத்தை ஆதரித்துப் பலர் பேசினர்." — இதுதான் பத்திரிகையில் வெளியான செய்தி!

ஒரு செய்தி எப்படி, என்ன மாதிரி, எப்பொழுது வெளியானது என்று பார்த்தீர்களா? இதுதான் செய்தி வெளியாகும் கதை!

வரலாற்றுக் கட்டுரை

## அநுராதபுரம்

— எஸ். டி. ராஜன் —

நம்மில் பலர் அநேகதடவைகள் அநுராதபுரத்திற்குச் சென்றிருக்கின்றோம். அங்கேயுள்ள சிலைகள், சமாதிகள், பௌத்தகோவில்கள், குளங்கள் முதலியனவற்றைப் பார்த்து மகிழ்ந்திருக்கின்றோம். அந்நகருக்கு அநுராதபுரம் என்றபெயர் ஏன் வந்ததென்று பலருக்குத்தெரியாது.

ஒருநாள் மாலையில் இளவரசன் வீரசேனன் வேட்டையாடிவிட்டு அரண்மனையை நோக்கி வந்துகொண்டிருந்தான். காட்டிலே வேட்டையாடியதால் அவன் மிகவும் களைத்திருந்தான். நீர் வேட்கையோடு வீரசேனன் மெதுவாக வந்துகொண்டிருக்கும்போது, அவன் கண்களுக்கு ஓர் அழகிய பர்ணசாலை தென்பட்டது. அங்கு சென்று தன் தாகத்தைத் தணிக்கலாம் என்ற நோக்கத்துடன் பர்ணசாலையை நோக்கி நடந்தான்.

பர்ணசாலையிலிருந்த ஸ்ரீசங்கபோவின் மகளான அநுராதவிடமிருந்து, குளிர்ந்த நீரை வாங்கிப் பருகினான் வீரசேனன். வீரசேனன் அநுராதாவுக்குத் தன் நன்றியைத் தெரிவித்துவிட்டு, அவள் பெயரையும் அவளின் தந்தையின் பெயரையும் கேட்டான்.

அநுராதா தன் பெயரையும் தந்தையின் பெயரையும் கூறிவிட்டுக் கண்ணீர் சிந்தினாள்.

அநுராதாவின் அழுகையினால் வீரசேனனின் மனம் வேதனையடைந்தது. 'மண்ணாசை பிடித்த தன் தந்தை, அரச போகத்தை வெறுத்து காட்டில் வாழ்ந்த ஸ்ரீசங்கபோவைக் கொலைசெய்து, அநுராதாவை அனாதையாக்கினார்' என்பதை நினைத்த அவன் மனம் வேதனைப் பட்டது. தன் தந்தையின் செயலுக்காக மன்னிப்புக்கோரினான்.

அநுராதா அதிர்ச்சியினால் ஒன்றும் பேசாது அப்படியே நின்றாள். 'கொடியவனுக்குப் பிறந்த குமாரன் நல்லவனாக இருப்பானோ? அல்லதுகொடியவனாகத்தான் இருப்பானோ?' என அவள் சிந்தித்தாள்.

அப்போது, வெளியே சென்றிருந்த துறவியான பரஞ்சோதியார் அங்கு வந்தார். அநுராதா அவரிடம் நடந்தவற்றையெல்லாம் விபரமாகக் கூறினாள். வீரசேனனும் பரஞ்சோதியாரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான் பரஞ்சோதியார் வீரசேனனை ஆசீர்வதித்துவிட்டு, அவனை நோக்கி, "பர்ணசாலைக்கு வரக் காரணம் யாது?" என வினவினார்.

வீரசேனன் எதிர்பாராத விதமாகப் பர்ணசாலைக்கு வர நேர்ந்ததையும், அங்கு நடந்தவற்றையும் எடுத்துரைத்து, அநுராதாவை மணந்து கொள்ள பரஞ்சோதியாரிடம் அனுமதி கோரி நின்றான்.

பரஞ்சோதியார்சிறிதுநேரம் சிந்தித்துவிட்டு, அநுராதாவை நோக்கி, வீரசேனனின் உத்தம குணங்களை எடுத்துக்கூறி, அவனை மணந்துகொள்ளும்படி கூறினார்.

அநுராத என்ன சொல்வதென்று தெரியாமல் திகைப்படைந்து நிற்கும்போது —

வீரசேனன் பரஞ்சோதியாரை நோக்கி, "என் மீது தாங்கள் கருணைகாட்டவேண்டும்" என இரந்து கேட்டான்.

பரஞ்சோதி முனிவர் வீரசேனனின் பண்பான குணத்தை மெச்சி, அநுராதாவை அவன்கூட அனுப்பி வைத்தார்.

வீரசேனன் அநுராதாவைத் தனது பட்டத்தரசியாக்கியதுடன், தலைநகரின் பெயரையும் மாற்றித்தன் பட்டத்தரசியின் பெயரை அந்நகருக்குச் சூட்டினான். அன்றிலிருந்து அந்நகரம் 'அநுராதபுரம்' என்று அழைக்கபபடலாயிற்று என வரலாறு கூறுகின்றது.

வீரசேனனால் கட்டுவிக்கப்பட்ட விகாரைகளையும்,வெட்டுவிக்கப்பட்ட குளங்களையும் இன்றும் நாம் அநுராதபுரத்தில் காணலாம்.

## கடல் மணல்

கடற்கரைக்குச் செல்பவர்கள் அங்கு பரந்து விரிந்து கிடக்கும் மணற்பரப்பில் 'ஜம்'மென்று உட்கார்ந்து கைகளால் மணலைத் துழாவி மகிழ்ச்சி அடைகிறார்கள். ஆனால், அவ்வளவு மணல் அங்கு எப்படி வந்ததென்று யாருக்காவது தெரியுமா? சிலருக்குத் தெரியலாம்; சிலருக்குத் தெரியாமலிருக்கலாம்.

கடலின் அடியில் ஏராளமாக இருக்கும் பெருங் கற்பாறைகளை எப்பொழுதும் அலை மோதிக்கொண்டிருக்கும். அப்படியாகத் தண்ணீர் அரித்தெடுக்கும்கல்பொடியே மணலாகக் கரையில் குவிகிறது. துகள் துகளாக நொறுங்கும் கற்பாறைகளும் சிறு சிறு கற்களுமே நுண் துளி மணலாக மேலே வந்து, அலைகளால் கரைகளில் ஒதுக்கப்படுகின்றது. அதுதான் கடற்கரையில் வெண்மணற் பரப்பாகக் காணப்படுகிறது.

## கல்லாக உறைந்த ...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

யாகிக் கடினநிலைமையை அடைந்தது. பூமியின் தளமானது இவ்வாறு கடினநிலையை அடைய மேலுள்ள வாயு கலந்த நிலைமை கனிந்து நீராகி உறைந்த தளக் கற்பார்களிலுள்ள பள்ளங்களிலே கடலாகவும், வாவி குளங்களாகவும் சேர்ந்தன. உயர்ந்த பாறை மேடுகளில் குளிர்த்தன்மை அதிகரிக்க ஆறுகள் உண்டாயின. இவ்வாறு உண்டான ஆறானது கற்பார்கள்மீது பாய்ந்து வருகையில் உரமான கற்பாறைகளையும் அரித்துத் தம்முடன் அந்த அணுக்களையும் கொண்டு சென்று முகத்துவாரங்களில் விட்டன. இவ்வாறு அநேக நூற்றாண்டுகளாக மாறுதலடைந்து வந்த கற்பார்களிலும் துகள்களிலும் சிற்றிலைப் பயிர்கள் தோன்றின. இச்செடிகளது வேர்கள் பாறைப் பிளவுகள் வழியாகப்பரந்தன. வாயுபேத காரணங்களாலே கிடைத்த உணவை உண்டு வாழ்ந்த இச்செடிகள் காலகதியில் உணவின்றி மடிந்தன. இச்சிற்றிலைச் செடிகள் புளித்திராவகத் தன்மையைக் கொண்டனவாக இருந்தமையால் கற்பார்களைப் படிப்படியாக அரித்துவரத் தொடங்கின. இவ்வரிப்புகள் காரணமாகச் செழிப்புடைய மண் தோன்றலாயிற்று. இப்படியாகக் கோடானுகோடி ஆண்டுகளாக இயற்கை தன் செயலைக் கையாண்டு வருகிறது.

# 'தமிழிலேயே சுற்றுநிருபம் எழுதப்பட்டிருக்க வேண்டும்'

## கிழக்கிலங்கை தமிழாசிரியர் சங்கள் வேண்டுகோள்

மட்டக்களப்பு, சனி

தமிழ் பாடசாலைகட்கு அனுப்பப்படும் சுற்று நிருபங்கள்-பத்திரங்கள் யாவும் தமிழிலேயே எழுதப்பட்டிருக்க வேண்டும் என, வித்தியாதிபதியினூடாக அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதென, கிழக்கிலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் 15 வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில், ஏகமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

கே. எஸ். இராசேந்திரம் தலைமையில் மட்டக்களப்பு சென். மேரிஸ் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்ட சில முக்கிய தீர்மானங்கள் சில வருமாறு:—

சுயமொழியில் ஆசிரியதராதரப்பத்திரம் பெற்ற ஆசிரியர்கட்குக் கொடுக்கப்படும் சம்பள விகிதம் மிகக்குறைவாக இருப்பதால், உச்சசம்பளத்தையும் படியேற்றத்தையும் அதிகரிசுமாறு இச்சங்கம் கல்வி மந்திரியைக் கேட்டுக் கொள்ளுகிறது.

பண்டித வித்துவான் பட்டங்கள் பெற்ற தமிழாசிரியர்கள், உயர்தர வகுப்புகளில் படிப்பித்தால், ஆங்கிலப்பட்டதாரிக்கான சம்பளம் வழங்கலாமென அங்கீகாரமிருந்தும் இதுவரை எவ்வாசிரியருக்காவது அவ்வாறு சம்பளம் வழங்கப்படாததையிட்டு ஆழ்ந்த அதிருப்தியைத் தெரிவித்துக் கொள்வதோடு, அதை நடைமுறைக்குக் கொண்டு வருமாறு இச்சங்கம் கல்வி மந்திரியைக் கேட்டுக் கொள்கிறது.

கல்விப் பொதுத்தராதப் பத்திரம் பெற்றுள்ள மாணவர்களுள் ஒரு பகுதியினரையாவது ஆசிரியப்பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்பட வேண்டுமெனக் கௌரவ கல்வி மந்திரியை இச்சங்கம் கேட்டுக் கொள்கிறது.

வில்மட் பெரேரா சம்பள விசாரணைச் சபையின் சிபார்சுகளை அமுல் நடத்துவதன் மூலம் சுயமொழி ஆசிரியர்களுக்கு நீதி வழங்கவேண்டுமென பிரதம மந்திரியவர்களையும், நிதிமந்திரியையும் இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

தொழில் வழிகாட்டி ஆசிரியராக நியமனம் பெற்றுக் கடமையாற்றுவோருக்குப் பிரத்தியேகபடிச் சம்பளம் கொடுக்கப்படவேண்டுமென இச்சங்கம் வித்தியாதிபதியைக் கேட்டுக்கொள்கிறது.

—

## மக்கள் வங்கிக் கிளை

### காங்கேசன்துறையில் திறக்கப்பட்டது

மாவிட்டபுரம், சனி

காங்கேசன் துறையில் மக்கள் வங்கிக்கிளை இன்றுகாலை எதுவித ஆடம்பரமுமின்றி திறந்து வைக்கப்பட்டது. காங்கேசன் துறை பொலிஸ் நிலைய தலைமை இன்ஸ்பெக்டர் திரு. போவி தலைமையில் வந்த பொலிஸ் கோஷ்டி, எவ்விச வேலையுமின்றி திரும்பிச் சென்றது.

காங்கேசன் துறை மக்கள்வங்கிக் கிளையை, மக்கள்வங்கி ஜெனரல் மனேஜர் டபிள்யூ ஏச். சொலமன்ஸ், காரியாலயத்திற்கு விஜயஞ்செய்ததனைத் தொடர்ந்து வங்கிக் கிளையின் அலுவல்கள் ஆரம்பமாகின.

இவ்வைபவத்தில் காங்கேசன் துறை பட்டினசபைத் தலைவர் திரு. மு. திடவீரங்கம், உபதலைவர் திரு. சு. கிருபாமூர்த்தி, டாக்டர் சு. வே. சீனிவாசகம், சிமிந்தித் தொழிற்சாலை பிரதம அதிகாரி டாக்டர் பேரம்பலம் உட்படப் பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

காங்கேசன் துறை பட்டின சபையின் வேண்டுகோளுக்கு இணங்கியே விரைவில் மக்கள் வங்கிக்கிளை திறந்துவைக்கப் பட்டதாக சபைத்தலைவர் திரு. மு. திடவீரசிங்கம் தெரிவித்தார்.

மக்கள்வங்கியில் இன்று சுமார் ஒரு இலட்சத்திற்குமதிகமான தொகை முதலீடு செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

—

# 'சைவத்தில் வளர்ச்சிக்கு நவீன பெரிய புராணமும் சேக்கிழாரும்தோன்றவேண்டும்'

சித்தங்கேணி, சனி

சைவத்தின் ஆரம்பகாலத்தில் - சிவதத்துவங்களைக்காக்கவும் எதிர்ப்புகளைச் சமாளிக்கவும் சமயகுரவர்கள் இருந்தார்கள். நாகரிகக் கலப்பால் சைவத்தின் புனிதம் கெட்டுவிடாது தடுக்க அவர்கள் தளராது உழைத்தார்கள். அந்த உழைப்பின் சின்னங்கள் இன்று திருமுறைகளாக நமக்குக் கிடைத்திருக்கின்றன. இன்றைய சூழ்நிலையில் நமது சமயத்தை வளர்க்க ஏன் நவீன நாவுக்கரசரும், ஞானசம்பந்தரும் சுந்தரரும், மணிவாசகரும் தோன்றக்கூடாது'' என சித்தங்கேணி பிள்ளையார் கோவிலில் இளைஞர்முன்னேற்றக் கழகத்தால் நடைபெற்ற சமயப்பிரசாரக் கூட்டத்தில் சிறப்புரை நிகழ்த்திய ஈழத்து சிவானந்தன் கூறினர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

"அஞ்ஞான இருளை அகற்றி மெஞ்ஞான ஒளிபரப்பிய முன்னோர்களைப்போல் இன்றும் அருளியல்துறைக்கு தொண்டர்கள் தேவைப்படுகிறார்கள். சேக்கிழார்பெருமான் காட்டிய நாயன்மார்களைப்போல் வராவிட்டாலும் - அந்நாயன்மார் காட்டிய நெறியில் வாழ்ந்து சைவத்தை வளர்க்க நாம் முயற்சியெடுக்க வேண்டும். நவீன அறுபத்து மூவர் தோன்றினல் நவீன சேக்கிளாரும் தமி த்தில் தோன்றுவார். பெரியபுராணத்தின் வழிநூலாக பெரிய புராணமும் தோன்றும். இத்தகைய நல்லநிலை வளர இளைஞர்களாகிய நாம் சமயச்சார்புடைய தொண்டர்களாய் மாறவேண்டும். இளவயதில் கடவுள்பக்தி வேண்டியதில்லை. வயது வந்ததும் பார்த்துக் கொள்ளலாமென்றும் எண்ணலாகாது. பிஞ்சுப்பருவத்திலேயே திருஞானசம்பந்தர் இறைபக்தி நிரம்பப்பெற்று இன்னிசையால் தமிழையும்-சைவத்தையும் வளர்த்தார். அவர் பாதையை நாம் அடியொற்றிச் செல்லவேண்டும்.

## அமெரிக்கா கண்காணிப்பு

வாஷிங்டன், மார்ச் 16

கியூபாவிலிருந்து ரஷ்யர்கள் வெளியேற இருக்கின்றனர் என்று ரஷ்யா அறிவித்ததைத் தொடர்ந்து கியூபா விஷயத்தில் அமெரிக்கா கண்காணித்து வருகிறது.

# 'அரசாங்கத்துக்கு ஆதரவு அளிக்கவும்'

## தொழிற் சங்கங்களுக்கு பிரதமர் வேண்டுகோள்

கொழும்பு, சனி

"இந்த நாட்டில் இப்பொழுது தோன்றியுள்ள நெருக்கடிகளைத் தீர்த்து வைக்கும் பொருட்டு, சகல தொழிற்சங்கங்களும் அரசாங்கத்துக்கு ஆதரவு அளிக்கவேண்டும்."

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா சமிதிய வருடாந்தக் கூட்டத்தில் இலங்கைப் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தொடர்ந்து பேசுகையில், நாட்டில் இப்போது தோன்றியுள்ள நெருக்கடிகளைத் தீர்த்துவைப்பதில் அரசாங்கத்துக்கு மிகுந்தகஷ்டமேற்பட்டிருக்கிறதென்றும், வீண்விரயமும், தேவையற்ற செலவும் செய்யாமல் தொழிற்சங்கங்கள் யாவும் அரசாங்கத்துக்கு உதவிபுரியவேண்டுமென்றும் கூறினர்.

எதிர்காலத்தை தைரியத்துடனும் திடநம்பிக்கையுடனும் எதிர்நோக்கியுள்ளேன் என்றும் அவர் கூறினர்.

தொழிற்சங்கங்களின் நீதியான கோரிக்கைகள் நிச்சயம் ஆராயப்படுமென்றும்மக்களின் நலன்குறித்து வேலைசெய்வதில் தொழிற்சங்கங்கள் ஈடுபடவேண்டும் என்றும் பிரதமர் கூறினர்.

பல எம். பி.க்கள் கூட்டத்தில் பேசினர்.

—

## 'கல்வியின் நோக்கம் என்ன?'

### சாஸ்திரிகள் விளக்கம்

பருத்தித்துறை, சனி

கல்வியின் நோக்கம் உத்தியோக மோகம், பணம், உயர்ந்த வாழ்வு இவையல்ல. அவரவர் சமயக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பண்பாடமைந்த சீரிய வாழ்வு வாழ்ந்து இறைவனை அடைவதே கல்வியின் நோக்கமாகும் என்று பேராசிரியர் எஸ். ஆர். துரைசாமி சாஸ்திரிகள் புலோலி இந்து ஆங்கிலக்கல்லூரியில் சமயமும் கல்வியும் என்னும் பொருள்பற்றி உரை நிகழ்த்துகையில் கூறினர்.

உப அதிபர் திரு பொ. சபாரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பேராசிரியர்தொடர்ந்துபேசும்போது நமது பலத்தாலும் வல்லமையாலுமல்ல இறைவன் அருளாலேதான் உண்மையான பெருமையை நாம் அடையமுடியும் என்றார்.

## பதஞ்சலி சாஸ்திரி காலமானர்

புதுடில்லி, மார்ச் 16

இந்திய சுப்ரீம் கோர்ட் பிரதம நீதிபதியாக இருந்த திரு. பதஞ்சலி சாஸ்திரி இன்று காலமானர். புதுடில்லியில் உள்ள தனது மருமகனின் இல்லத்தில் மரணமாகிய திரு. சாஸ்திரிக்கு வயது 72.

இந்திய ஜனதிபதி சாஸ்திரியார் மரணமாகிய புதுடில்லியில் உள்ள இல்லத்திற்குச் சென்று துக்கம் விசாரித்து சடலத்துக்கு மலர் வளையம் சாத்தினர். சுப்ரீம் கோர்ட் சார்பிலும் மலர்வளையம் வைக்கப்பட்டது.

—

## விவசாயகண்காட்சி

கொழும்பு, சனி

இம் மாதம் 22-ம் திகதி கொழும்பு குதிரைப்பந்தயத் திடலில் விவசாய கண்காட்சியொன்று நடைபெறும். மூன்று நாட்கள் நடைபெறும். இந்தக் கண்காட்சியில், போஷாக்கு குறைந்த குழந்தைகளுக்குவரும் கெடுதிகள் பற்றி விளக்கம் கூறப்படும்.


# மலிவு விற்பனை!

இதோ சேலைகளின் விலை பட்டியல் !

| | |
|---|---|
| பளெயின் டகா சேலை<br>வ. வி. 20-00 ம. வி. 15-00<br>பம்பே வயில் சேலை<br>வ. வி. 15-50 ம. வி. 12-00 | பெங்களூர் சில்க் சேலை<br>(வேலைப்பாடுடையது)<br>5 சேலைகள் மாத்திரம்<br>வ. வி. 48-00 ம. வி. 30-00 |
| கத்தறி டக்கா சேலை<br>வ. வி. 20-00 ம. வி. 15-00 | அச்சடியன் சில்க் போடர்<br>பாவாடைக்கு மாத்திரம்<br>வ.வி.யார்3-75ம.வி.யார்2-75 |
| பெங்களூர் சில்க் சேலை<br>7 சேலைகள் மாத்திரம்<br>வ. வி. 37-50 ம. வி. 27-50 | கபடின் காற்சட்டை<br>வ. வி. 22-50 ம. வி. 17-50 |

இன்றே விஜயம் செய்யுங்கள்

# ரொலறம்ஸ்

46, பெரிய தெரு, யாழ்ப்பாணம்.



# இப்பொழுது நடைபெறுகிறது

வீர காவியம் !!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டக்களப்பு) ராஜ் (நீர்கொழும்பு) விஜிதா (அட்டன்)
மொடர்ன் (பதுளை) தீவொளி (நுவரேலியா) ஜெமினி (ருகலை) ஸ்ரீகிருஷ்ணு (திருக்கோணமலை)

மற்றும் திரைகளில்!

தொண்டு செய்யும் அடிமை உனக்கு சுதந்திர நினைவோ? என்று கொக்கரித்த வெள்ளையரின் கொட்டத்தை முறியடித்தான் — கப்பலோட்டிய தமிழன.

★ பார்த்தோர் பரவசப்படுகிருர்கள்
★ பார்க்காதோர் பார்க்கத் துடிக்கிருர்கள்

சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
சாவித்திரி
முத்துலட்சுமி
வி. நாகையா
குமாரி ருக்மணி
எஸ். வி. ரங்கராவ்
ஜெமினி சந்திரா
எஸ். வி. சுப்பையா
ஏ. கருணாநிதி




மற்றும் பலர் நடிக்கும்

பத்மினி பிக்சர்ஸ்

# கப்பலோட்டிய தமிழன்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
பி. யு. சின்னப்பா, எம். எஸ். சரோஜினி
நடித்த
ஜெகதலப்ரதாபன்


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 83-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.